கனடாவின் மூத்த தமிழ் இதழ் 19 வது வருடத்தில்

# விளம்பரம்

VLAMBARAM™

416-282-8059 E-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com 416-282-4978



Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
HOMELIFE Higher Standards
For All your Real Estate & Investments Needs!
HomeLife GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto
145 Traders Blvd # 29, Mississauga
416.321.6969 / 905.712.2666



வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton
சந்திப்புக்கு அருகாமையில்



நதி 19 | பாலம் 17 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | SEPTEMBER 01, 2009


# இலங்கை ஊடகவியலாளருக்கு 20 வருட கடூழியச்சிறை

பீற்றர் மார்க்கர் விருதினை பெற்ற இலங்கை ஊடகவியலாளர் திசநாயகத்திற்கு 20 கருட கடூழியச் சிறை

உலக ஊடக அமையமும் எல்லைகள் அற்ற ஊடகவியலாளர் அமைப்பின் அமெரிக்கர்களும் இணைந்து ஊடக ஒழுக்கவியலுக்காகவும் அர்ப்பணிப்புக்காகவும் வழங்கப்படும் விருது இம்முறை இலங்கையின் ஊடகவியலாளரும் பத்திரிகை ஆசிரியருமான ஜே.எஸ். திசநாயகமத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு 2009 ஒக்ரோபர் இரண்டாம் திகதி வாசிங்டனில் உள்ள தேசிய பத்திரிகை மன்றத்தில் நடைபெறும்.



இந்நிகழ்வில் வாசிங்டன் போஸ்ட் பத்திரிகையின் ஆசிரியர் மார்கஸ் புருச்சிலி சிறப்புரையாற்றவுள்ளார்.

சிறந்த தமிழ் ஊடகவியலாளரான ஜே.எஸ்.திசநாயகம் நோர்த்ஈஸ்டன் மாதாந்த சஞ்சிகையின் ஆசிரியராக இருந்ததோடு சண்டே ரைம்ஸ் பத்திரிகையின் பத்தியாளராகவும் இருந்து வந்துள்ளார். அவுட்ரூச் என்ற இணையத் தளத்தினை ஆரம்பித்து நடாத்தியும் வந்தார்.

இந்த விருது நிகழ்வில் நிச்சயமாக திசநாயகம கலந்து கொள்ளமாட்டார். பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் 2008 மார்ச் 7ஆம் திகதி அவர் கைது செய்யப்பட்டு, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்ட இவருக்கு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் இலங்கையின் மேல் நீதி மன்றம் 20 வருட கடூழியச் சிறைத்தண்டனை வழங்கியுள்ளது.

தவறான தகவல்களின் அடிப்படையிலும் சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் அவரைப் பழிவாங்கும் வகையில் எவ்வித கருணையுமின்றி அவருக்கு இத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது என எல்லைகள் அற்ற ஊடகவியலாளர் அமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது. பயங்கரவாதிகளுக்கு எதிராகவே பயங்கரவாதத் தடைச்சட்டம் கொண்டு வரப்பட்டது. ஊடகவியலாளர்களுக்கு எதிராகவோ அல்லது மனித உரிமைச் செயற்பாட்டாளர்களுக்கு எதிராகவோ அல்ல எனவும் அது தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

திசநாயகம் ஆங்கில இணைத்தளம் ஒன்றை நடத்தி வந்தார். கொழும்பில் இருந்து வெளிவரும் ஆங்கில வார ஏடான "சண்டே ரைம்"சிலும் பத்திகளை எழுதி வந்தார். 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அவர் எழுதிய கட்டுரைகளில் அரசை பகிரங்கமாக விமர்சித்து வந்தார்.

தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் அத்தியாவசிய உணவுப் பொருட்களை அரசு ஓர் ஆயுதமாகப் போரில் பயன்படுத்துவதாக அவர் அரசை கடுமையாக விமர்சித்திருந்தார்.

பயங்கரவாதிகளுடன் தொடர்புகளைக் கொண்டிருந்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் கடந்த 14 மாதங்களாக அவர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார். அவரை விடுவிக்கும்படி அனைத்துலக ஊடக அமைப்புக்களும் மனித உரிமை அமைப்புக்களும் தொடர்ந்து குரல் கொடுத்து வந்தன.

திசநாயகத்தின் கட்டுரைகள் பயங்கரவாத தடைச் சட்டங்களை மீறியுள்ளன. ஏனெனில் அவற்றின் நோக்கம் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை குலைப்பதாகவே இருந்தது என உயர்நீதிமன்ற நீதிபதி தீபாளி விஜயசுந்தர தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார். தனது வெளியீடுகளுக்காக திசநாயகம் பணம் திரட்டிய வழிவகைகளும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மீறுபவையாக இருந்ததால் அவர் குற்றவாளி என நீதிபதி தீர்ப்பளித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் 1982 ஆம் ஆண்டில் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டதை அடுத்து அதன் கீழ் தண்டிக்கப்பட்டுள்ள முதல் நபர் திசநாயகம். இந்தத் தீர்ப்புக்கு எதிராக முறையிடப் போவதாக திசநாயகத்தின் வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேசமயம் வன்னியில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக சிங்கள ராணுவம் நடத்திய வலிந்த தாக்குதல்களின் போது இடம்பெற்ற போர்க் குற்றங்கள் குறித்து அமெரிக்காவின் போர்க் குற்றங்கள் தொடர்பான அலுவலகம் அறிக்கை ஒன்றைத் தயாரித்து வருகின்றது. செப்டம்பர் மாதம் 21 ஆம் தேதி அந்த அறிக்கை வெளியிடப்படும் எனத்தெரிகிறது.

இறுதிப் போரின்போது 20 ஆயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபையின் உள்ளக அறிக்கைகளை மேற்கோள்காட்டி லண்டனில் இருந்து வெளிவரும் "ரைம்ஸ்" நாளேடு செய்தி வெளியிட்டிருந்தது.

ஏப்ரல் மாதம் இறுதிவரை 6 ஆயிரத்து 500 பொதுமக்கள் உயிரிழந்தமை ஐக்கிய நாடுகள் சபையால் உறுதி செய்யப்பட்டுள்ளது. அதன் பின்னர் மே மாதம் 19 ஆம் நாள் வரை நாள்


தொடர்ச்சி 04ஆம் பக்கம்



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.



துரித பணமாற்றுச் சேவை
• 50 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 17 வருடங்கள் ஒரே இடத்தில் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
416.267.8221



Sales & LEASING
MARKVILLE TOYOTA
KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி<
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585



SATHYA SAIRAM DRIVING SCHOOL
• உங்களுக்கு பாஷை ஒரு பிரச்சினையா?
• பரீட்சை கேள்விகள் விளங்காததனால் வாகன எழுத்து பரீட்சையில் அல்லது வீதிப்பரீட்சையில் சித்தியடைய முடியவில்லையா? கவலை வேண்டாம்.
• உங்கள் வாகனம் சம்பந்தப்பட்ட எந்த பரீட்சையிலும் சித்தி அடைய வேண்டுமா?
அழையுங்கள் - 416-831-5217



Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd. Suite #206 Scarborough, ON M1S 2Y3
*Independently Owned and Operated



RBC Royal Bank
Switch your Mortgage to RBC
And Consolidate Your Debts for FREE!
• No Lawyers Fee • No Appraisal Fee
• No Discharge Fee
•1st Time Home Buyers •Pre-Approvals
•Debt Consolidation
•Home Equity Line of Credit
•New Immigrant & Self-Employed Programs
•Over 20 years of experience with RBC
•Fast and Efficient Service
Always with a Smile!!!
Nala Brodie
Mortgage Specialist
(416) 409-4900
Nala.Brodie@Rbc.com
Markham&14th Ave
Greater Toronto Region
Let Me Optimize Your Mortgage Payments and other Debt Payments



VASANTHAM HOME SERVICES
வசந்தம் வீடு சேவைகள்
• Cleaning: Carpet, Duct, Sofa, Car, Window, Home & Office
• Painting & Home Renovation
• Moving to any town
• Airport Services
வீடு, ஜன்னல், சோபா, காரியாலயம் சுத்தம் செய்தல். வர்ணம் பூசுதல். விமானநிலைய சேவை. வீட்டு பொருட்கள் நகர்த்தல்.
Call: 647.296.9374/ 416.836.6791



வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife / Today Realty Ltd., Brokerage.
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated



VLAMBARAM, GTA SQUARE, 5215 FINCH AVENUE EAST, #201, TORONTO, ON M1S 0C2, CANADA TEL: 416-282-8059, FAX: 416-282-4978, e-mail: vlambaram@sympatico.ca, Web: www.Vlambaram.com

# உங்கள் நிதியமும் பணச் சந்தையும்

சீனாவில் ஆகஸ்ட் மாத மூன்றாவது வார ஆரம்பத்தில் ஒரு நாள் பங்குச்சந்தை விலைகள் வீழ்ச்சியடைந்தன. அதன் எதிரொலி மறுநாள் உலகு எங்கிலும் தென்பட்டது. கனடாவிலும் சீனப் பங்குச் சந்தையின் எதிரொலியாக விலைகள் வீழ்ச்சியடைந்தன. விலையை எது நிர்ணயிக்கின்றது.?



பெரிதாக செலவு செய்ய ஆரம்பிக்கவில்லை என்று சிறிய பெரிய வியாபாரிகளும் குறை கூறாமல் இல்லை.

வட்டி வீதங்கள் அடிமட்டத்திலேயே உள்ளது. பணத்தை வங்கியில் வட்டிக்குப் போட்டு வைத்திருக்கும் பெரியவர்கள் பெரிதும் புலம்புகிறார்கள். வீட்டுக்கடனுக்குகான வட்டி வீதங்களும் அனுகூலமான நிலையிலேயே உள்ளது.

இன்றைய சூழ்நிலையில் வங்கியில் ஒருவர் ஒரு வருடத்துக்குப் பணம் போடுகிறார் என்று வைத்துக்கொள்வோம். வட்டிவீதமும் ஏறத்தாழ 1.44 சதவீதம் என்று வைத்துக் கொள்வோம். இந்த வட்டி வீதத்தில் அவருடைய அசல் எத்தனை வருடங்களில் இரண்டு மடங்காகும். 50 (ஐம்பது) வருடங்களில்.

என்று மட்டும் தெரியும்.

அரசாங்கங்களும் வட்டிக்கு கடன் வாங்கி வரவுக்கு மீறிய செலவை செய்வதுண்டு. உதாரணத்துக்கு அமெரிக்க குறுகிய கால காசோலைகளில் (US Short term treasury note) ஒருவர் முதலீடு செய்தால் என்ன வட்டி தற்சமயம் கிடைக்கின்றது? 0.18 சதவீதம். இந்த 0.18 சதவீதத்தில் அசல் இரண்டு மடங்காக எத்தனை வருடங்கள் ஆகும்? 400 வருடங்கள் (72/0.18)

உங்கள் சேமிப்புக்களைத் தக்க முறையில் முதலீடு செய்வது என்பது காலத்தின் தேவை. காலத்துக்கு ஏற்ப தகுந்த யுக்திகளை நீங்கள் கையாள்கிறீர்களா? உங்கள் காலம் உள்ள வரைக்கும் உங்களுக்கும் அந்தத் தேவை உள்ளது. அதற்கு ஏற்ப இக்கட்டுரை ஆசிரியரிடம் ஆலோசனை பெற ஸ்கோஷிய வங்கி தொலைபேசி எண் - 416.439.3040 Ext 2010



**பெரி. முத்துராமன்**

குறுகிய காலத்தில் விலையை நிர்ணயிப்பது மக்களின் எதிர்பார்ப்பு, பயம் போன்ற உணர்வுகளே. மறுநாள் சந்தையில் முற்றிலும் வேறான நிலை தென்பட்டது. விலைகள் ஏறத் தொடங்கின. அதற்கு அடுத்த நாள் இன்னும் ஏறியது. உலகம் ஒருநாளில் மாறிவிட்டதா?

இல்லை. மக்களின் எதிர்பார்ப்பும், பயமும் மாறிவிட்டது. அதன் பிரதிபலிப்பு சந்தைவிலைகளில் தெரிகின்றது. இது நிரந்தரமா? இல்லை. இதுவும் மாறக் கூடியதே. எதன் அடிப்படையில்? உலகம் முழுவதும் வரும் செய்திகளின் அடிப்படையில், புள்ளி விபரங்களின் அடிப்படையில் அதை ஒட்டி பெரும்பான்மை மக்களின் மனத்தில் எழும் பயம், எதிர்பார்ப்பு போன்ற உணர்வுகளின் அடிப்படையில், குறுகிய காலத்தில் விலைகள் மாறிக் கொண்டிருக்கின்றன. உலகப் பொருளாதாரத்தில் மந்தநிலை மாறத்தொடங்கி விட்டதாகவே பெரும்பான்மைச் செய்திகள் குறிப்பிடுகின்றன. அமெரிக்க மத்திய வங்கியின் (Federal Reserve) தலைவர் பென் பெர்னக் மோசமான அமெரிக்க பொருளாதார சூழ்நிலைகள் முடிவடைந்து விட்டதாக அறிவித்துள்ளார். புனரமைப்பு நிகழத் தொடங்கி விட்டது. வீட்டுச் சந்தையைப் பற்றிய யூலை மாத அமெரிக்க புள்ளி விபரங்கள் நம்பிக்கை தரத்துவங்கியுள்ளன. கனடாவில் விலை ஏற்றம் 56 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு குறைந்த அளவில் உள்ளது. சமீபகாலத்தில் உணவுப் பொருட்களில் மட்டுமே சற்றே விலை ஏற்றம் தென்பட்டது. மற்றபடி எரிபொருள் (Gas), கார் ஓரளவுக்கு வாடகை எனப் பலவற்றிலும் விலை இறக்கமே பொதுவில் தென்பட்டது. ஆனாலும் வாடிக்கையாளர்கள் ஒன்றும்

72 விதியை எத்தனை பேருக்குத் தெரியும் என்று எனக்குத் தெரியவில்லை. இந்த விதியின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட வட்டி வீதத்தில் அசல் எத்தனை ஆண்டுகளில் இருமடங்காக ஆகின்றது என்று எளிதில் கண்டு பிடிக்கலாம். உதாரணத்துக்கு 1.44 சதவீதத்தையே எடுத்துக் கொள்வோம். 72 /1.44 = 50 வருடங்கள்.

வட்டிவீதம் 6 சதவீதமாக இருந்தால் அசல் 12 வருடங்களில் (72/6) இரண்டு மடங்காகும்.
வட்டிவீதம் 9 சதவீதமாக இருந்தால் அசல் 8 வருடங்களில் (72/9) இரண்டு மடங்காகும்.

இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், குறைந்த வட்டி வீதங்களும், விலைவாசியும் இதேபோல என்றும் இருக்கும் என்று சொல்ல முடியாது.

கடன் வாங்குவதிலும் சரி முதலீடு செய்வதிலும் சரி, தகுந்த யுக்திகளைக் கையாள வேண்டும். அத்தகைய யுக்திகளே பெரும்பயனைத் தரும்.

உலகு எங்கிலும் அரசாங்கங்கள் வரவுக்கு மீறிய செலவை, பொருளாதாரத்தைக் காக்க என்று செய்து கொண்டிருக்கின்றன. சென்ற வருடம் கனடாவில் யூன் மாதத்தில் மத்திய அரசின் வருவாய் உபரியாக இருந்தது. இந்த வருடமோ யூன் மாதத்தில் மத்திய அரசின் வருவாய் பற்றாக்குறையில் 5 பில்லியன் டொலர்களாக உள்ளது. அமெரிக்காவின் நிலையோ படுமோசம். இதனுடைய எதிர்கால விளைவுகள் எப்படி இருக்கும்? விலைவாசிகள் நிச்சயம் ஏறத் தொடங்கும். எப்போது? எனக்குத் தெரியாது. ஆனால் நிச்சயம் உயரும்







**விளம்பரம்**
VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.



**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.



Vlambaram, GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, Toronto, ON M1S 0C2, Canada
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com



Sales Reps. Welcome

For All your Real Estate & Investments Needs!

Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)



* INDEPENDENTLY OWNED AND OPERATED


HomeLife GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto - 416.321.6969
145 Traders Blvd # 28, Mississauga -905.712.2666

# ஜ கனடாவின் கதை - 4 ஐ


சென்ற கட்டுரையில் மத்திய பள்ளத்தாக்குக் கலாசாரத்தில் கி.மு 2500 ஆண்டுகளுக்கு முன் குழிவீடுகள் கட்டப்பட்டதையும், சலிஷ், மொழி பேசும் மக்கள் வாழ்ந்ததையும் பற்றிய பார்த்தோம். இன்று ஆரம்பமேற்குக் கரைக் கலாசாரம் பற்றிப் பார்ப்போம்.

**ஆரம்ப மேற்குக்கரைக் கலாச்சாரம்**


தென்மேற்குக் கரைக் கலாச்சாரமும் வடமேற்குக் கரைக் கலாச்சாரமும் உண்மையில் பூகோள ரீதியாக வேறுபட்ட ஒரு கலாச்சாரத்தின் வழித்தோன்றல்களே ஆகும். கரையோரச் சூழல்கள் நிலைபெற்றதனால் மிகவும் சிக்கலான கலாச்சார இசைவாக்கம் ஏற்பட்டது. இதனால் நிலையான கடல் மட்டங்களும் ஆற்றுப்படுக்கைகளும், வெள்ளப் பெருக்குத் திடல்களும் மிகவும் வளமான சூழல் தொகுதிகளுக்கு ஏற்ற இடங்களாக அமைந்தன. இத்தொகுதியில் செவ்வாளை, எயுலாக்கள், ஓட்டுமீன்கள் ஆகிய முக்கியமானவை. மேற்குக் கரையோர மக்களுக்கு சிவப்பு சீடர் மரம் முக்கியமான தாயும் பெருவாரியாகக் கிடைக்க கூடியதாயும் இருந்தது. ஐரோப்பியர் வருகையின் போது காணப்பட்ட கரையோர குளிர்காலக் கிராமங்களுக்கு முன்னோடியாக பரந்த கிராம இடங்கள் காணப்பட்டன. இக்காலப்பகுதியின் இறுதிக்காலங்களில் மரப்பலகைகளாலான வீட்டுக் கிராமங்கள் தோன்றின. பிறேசர், ஸ்கீனா போன்ற முக்கிய ஆற்றுப்படுக்கைகளில் காணப்பட்ட குளிர்கால குடியேற்றங்கள், பின்னர் செவ்வாளை மீன் பிடிப்பதற்கும், பதனிடுவதற்குமான கோடை காலக் குடியேற்றங்களாக ஆற்றின் உட்புறக்கரைகளுக்குப் பரவ ஆரம்பித்தன. இவ்வாறான கலாச்சாரம் வடஅமெரிக்கக் கண்டத்தில் தோன்றிய வேளை, அண்டைய தீவுகளில் தனித்துவமான கலாச்சாரங்கள் காணப்பட்டன. உதாரணமாக வன்கூவர் தீவிலும், குயீன் சாளற்றின் தீவுகளிலும் தனித்துவமான கலாச்சாரங்கள் தோன்றின. இப்பகுதிகளில் பலதரப்பட்ட வெவ்வேறு கலாச்சார வடிவங்கள் காணப்படுகின்றன.



மஸ்குவாம் வடகிழக்கின் பொதுவா கூடை வடிவங்கள்.



A - சுற்றி அடைக்கும் பின்னல்
B - அடைபின்னல் C- திறந்த பின்னல்



**கயிற்று வகைகள்:** A. தனிக்கயிற்று வடசுற்று, B. இருவடக்கயிறு, வடசுற்று, C. மூன்று வடக்கயிறு, வடசுற்று, D. நான்கு வடக்கயிறு வடசுற்று.

**ஆரம்ப மேற்குக்கரையோர கலாச்சாரக் கூடைக் கலையும் கயிற்றுக் கலையும்.**

பிறேசர் திடலின் மொஸ்குவாம் வடமேற்கு ஆழ்விடத்தின் கீழ்ப்படிவங்களில் ஈரப்பதனுள்ள மண் நிலைமைகள் இருந்ததால் சேதனப் பொருட்கள் சிதைவடையாமல் இருந்தன. இப்பகுதியிலிருந்து எடுக்கப்பட்ட பொருள்களுள் நூதனமான கூடைகளும் கயிறுகளும் இருந்தன. இவற்றைச் செய்வதற்கு மூலப் பொருட்களாகச் சிவப்பு சீடர் மரக்கிளைகளும் பட்டைகளும் பயன்படுத்தப்பட்டிருந்தன.

எனவே கி.மு 4000 ஆண்டளவில் பரந்த தற்காலிக குடியேற்றங்கள், செவ்வாளை மீன் பிடித்தலோடு தொடர்புபட்டதாக இருந்தன. எனவே இதனைப் பின்வருமாறு சமன்படுத்தலாம். கரையோர நிரந்தரக் குடியேற்றம் = கோடை, இலையுதிர்காலம், செவ்வாளை பிடித்தலும் பதனிடலும் = குளிர்காலக்கிராமங்கள் = குளிர்கால ஓட்டு மீன்கள் பிடித்தல் = பெரிய ஓடு, கழிவுப் பொருள் குவியல்கள்.

மேற்குக்கரையோரம் ஒரு சமகாலப் பாரம்பரிய முன்னோடிக்காலமாகப் பார்க்கப்படுகிறது. கி.மு 1000 ஆண்டளவில் வியாபாரம், வளங்களுக்கு உடமைகோரல், செல்வம், சமூக மட்டங்கள், பலவகை ஆபரணங்கள் போன்றவற்றிற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. கி.மு 2000 ஆம் ஆண்டளவில் தெற்கு கரையோரங்களில், நுண் பருக்கைகள் கொண்ட வன்கற்களாலான ஆயுதங்களின் பாவனை நடைபெற்றுள்ளது. இது ஒரு தொழில்நுட்ப முன்னேற்றமாகும். இக்காலப்பகுதி பின்னர் 4ஆம் காலப்பகுதிக்குத் தொடர்ந்து செல்வதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

**- துறையூரான் -**

**மத்திய வடமேற்கு உள்நாட்டுக் கலாசாரம்**

வடஅமெரிக்காவின் வடமேற்குப் பகுதிகளில் செய்யப்பட்ட ஆரம்ப ஆய்வுகளிலிருந்து ஆசியாவுக்கும் வட அமெரிக்காவுக்கும் தொடர்புகள் இருந்ததற்கான புதைபொருள் சான்றுகள் கிடைத்துள்ளன. எனினும் தகடு போன்ற ஆயுதங்கள் செய்யும் தொழில்நுட்பம் சைபீரியாவிலிருந்தும், கூரான எறியும் ஆயுதங்களின் செயற்பாடு சமவெளிப் பிரதேசங்களிலிருந்தும் வந்திருக்கலாமென நம்பப்படுகின்றது. இக்கலாச்சாரத்தின் உள்நாட்டு சனத்தொகையினரின் கி.மு 4000 முன்னரே தெற்கு ஆதிவாசி வேட்டையாடுவோர் குடியேறி இருக்கலாமெனக் கருதப்படுகின்றது.



இக்கலாச்சாரத்தின் கூரான எறிஆயுதங்கள் யுகோன் பிரதேசத்திலிருந்து பெறப்பட்ட பல்வேறு வகைகள்.

இக்கலாச்சாரம், கரைகளிலும், உட்பிரதேசங்களிலும் உள்ள மலைத்தொடர்களையும் பள்ளத்தாக்குகளையும் உள்ளடக்கும், வடமேற்கை நோக்கிச் செல்லும் கோடி லெறா (Cordillera) பிரதேசத்தில் காணப்பட்டது. இப்பிரதேசத்தில் யுகோன், மக்கென்சி ஆகிய இரு பெரும் ஆறுகள் ஓடின. இப்பிரதேசத்தில் வாழ்ந்த வேட்டைக்குழுக்கள் மீன்களையும், கறிபோ எனப்படும் கலைமான்களையும் உணவுக்கு நம்பியிருந்தனர். இவற்றைத் தவிர காலத்துக்காலம் காணப்பட்ட நீர்க்கோழி, மலை ஆடு, மூஸ், பைசன் போன்றவற்றையும் பெறிப் பழங்களையும் உணவாகக் கொண்டனர்.

மூன்றாம் காலத்தின் ஆரம்பத்தில் இக்கலாச்சாரத்தில் முக்கோணவடிவ, குழாய் வடிவ தகடு போன்ற மெல்லிய கல்லாயுதங்களும், ஈட்டிமுனைகளும், சுரண்டும் வகைகளும் இருமுகக் கத்திகளும், துளைகருவிகளும், வலைகளை உள் அழுத்தும் துண்டுகளும் காணப்பட்டன. இவ்வாயுதங்களின் பின்னர் முளையுள்ள ஈட்டி முனைகள் கண்டு பிடிக்கப்பட்டன. அத்துடன் இருமுனைகத்திகளும் சுரண்டும் ஆயுதங்களும் பெருமளவு காணப்பட்டன. இவை வட அலாஸ்காவில் கி.மு 5500 ஆம் ஆண்டளவில் காணப்பட்டன. ஆனால் தென்மேற்கு யுக்கோனில் கி.மு 3750 ஆம் ஆண்டளவிலேயே காணப்பட்டன.

கோடையிலிருந்து இலையுதிர்காலம் வரைக்கும் மீன்பிடிக் கூடாரங்கள் அமைக்கப்பட்டன. இவ்வேளை குழுக்கள் ஒன்று கூடி திருமணங்களை நடாத்தி தமது சமூக ஒற்றுமையை வலுவடைய வைத்தன. குளிர்காலங்களில் சேமிக்கப்பட்ட கறிபோ இறைச்சியைப் பாவித்தனர். இக்கலாச்சாரத்திலிருந்தே அதபஸ்கள் மொழிபேசும் கலாச்சாரத்தினர் தோன்றினர் எனப்பல புதைபொருள் ஆய்வாளர் கூறுகின்றனர்.

**தொடரும்...**

ஆதாரம்: History of native people canada

**Bestway Driving school**
Get your **G2** Licence in 3 weeks (If qualified)
**பெண்கள் / ஆண்கள் welcome**
*Very respectfull instructor to ladies.*
உங்களுடைய தாய்மொழியிலேயே கற்றுக்கொள்ள முடியும்
நம்பகமான சேவையும் நாணயமான கட்டணமும்



**சாரதிப்பத்திரம் உத்தரவாதம்**


*Get your G licence through me.*
*If you fail G test, we will pay your test-booking fee.*
(some condition may apply)
**Approved instructor by M.T.O.**
For further details call **Vicky: 647.284.5373**
சேவைகள்: *Brampton - Mississauga - Toronto*
Road test available in out cities

**APPLEMORE AUTOMOTIVE**
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing


- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

**416-285-4998**
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# அடுத்த அடியை எடுத்து வையுங்கள்

## யோகாவின் முழு செயல்முறை என்பது நீங்கள் அறிந்த நிலையிலிருந்து அறிந்திடாத நிலையை நோக்கி அடியெடுத்து வைப்பதுதான்.



சத்குரு வாசுதேவ்

'யோகா' என்ற சொல்லுக்கு நேரடிப் பொருள் ஒன்றுபடுதல் என்பது. உங்கள் விழிப்புணர்வில் எல்லாவற்றையும் ஒன்றாக நீங்கள் உணர்வீர்களேயானால், அதற்கு யோகா என்று பெயர். உங்களுக்குள் அந்த ஒருமையை உணர எத்தனையோ வழிகள் உண்டு. அவற்றில் ஒன்று ஹடயோகா. ஹடயோகா என்றால் உடலிலிருந்து தொடங்குவது. உடலுக்கு என்றே சில அணுகுமுறைகளும், அகங்காரங்களும், இயல்புகளும் உண்டு. உங்கள் மனதைப் போலவே, உடம்புக்கென்று தனி அணுகுமுறைகள் உண்டு. உதாரணத்திற்கு நாளை காலை 5 மணிக்கு எழுந்து நடைப்பயிற்சி செய்ய வேண்டுமென்று நீங்கள் நினைப்பீர்கள். அலாரம் வைப்பீர்கள். அலாரம் அடிக்கும். நீங்கள் எழ நினைப்பீர்கள். ஆனால் உங்கள் உடம்பு சொல்லும், 'பேசாமல் தூங்கு' என்று. இது ஒரு உதாரணம். எனவே உடலிலிருந்து நாம் தொடங்குகிறோம். உடலுக்கு தேவையான செயல்களைச் செய்து அதில் சில ஒழுக்கங்களைக் கொண்டு வந்து தூய்மைப்படுத்தி, உயர்நிலை சக்திகளைப் பெறுவதற்கு உடம்பை தயார்செய்வதற்கு 'ஹடயோகா' என்று பெயர். நாம் அனைவரும் உயிருள்ள மனிதராக இருக்கிறோம். ஆனால் எல்லோரும் வாழ்வை ஒரேவிதமான தீவிரத்தோடு உணர்வதில்லை. காரணம், நம் சக்திநிலைகள் ஒன்றுபோல் இருப்பதில்லை. நமது பிராணசக்திகள் ஒரே நிலையில் இல்லை. எனவே, மனிதர்கள் வாழ்வை விதவிதமான தீவிரத்தன்மையோடு உணருகிறார்கள்.

ஒரு மரத்தை சிலர் பார்க்கிறார்கள், சிலர் அதைப் பார்ப்பதேயில்லை. சிலர் மரத்தை இன்னும் கொஞ்சம் நுட்பமாகப் பார்க்கிறார்கள். ஒரு ஓவியரின் கண்களுக்கு அந்த மரத்தின் ஒவ்வொரு வண்ணமும் தெரிகிறது. இன்னொருவர் அதை வெறும் மரமாகப் பார்ப்பதில்லை. அந்த மரத்திற்குள் இருக்கிற தெய்வீகத்தைப் பார்க்கிறார். எனவே எல்லோரும் தான் பார்க்கிறார்கள். ஆனால் பார்க்கிற தன்மை ஒன்றுபோல் இல்லை. ஏனென்றால் வாழ்வை நீங்கள் உணர்கிற தீவிரம் ஒன்று போல் இருப்பதில்லை. உடம்பு என்ற ஒன்றுதான் உங்களுக்கு நன்றாக தெரியும் என்பதால் உடம்பிலிருந்து நாம் தொடங்குகிறோம். தெரிந்த ஒன்றிலிருந்து தெரியாத ஒரு படிநிலை நோக்கி அடி எடுத்து வைக்க செய்வது தான் யோகா. உங்களுக்கு தெரியாத ஒன்றைப் பற்றிப் பேசினால் நீங்கள் அதை நம்புவீர்கள், இல்லையென்றால், அதை நம்ப மாட்டீர்கள். கடவுளைப் பற்றிப் பேசுகிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். ஒன்று நீங்கள் கடவுளை நம்ப வேண்டும், இல்லையென்றால் நம்பாமல் இருக்க வேண்டும். இது கற்பனைகளின் உச்சங்களை நோக்கி சிறகடிக்கத் தொடங்குமே தவிர, வளர்ச்சியை வழங்காது. ஆனால் உடம்பைப் பற்றிப் பேசுகிறேன் என்றால் அதைப்பற்றி உங்களுக்குத் தெரியும். உடம்பு என்று ஒன்று இருப்பது உங்களுக்குத் தெரியும். பிறகு அதன் தன்மையின் உச்சத்தை நோக்கி கொண்டு செல்கிறீர்கள். உங்கள் மனம் பற்றிப் பேசுகிறேன். அதுபற்றி உங்களுக்குத் தெரியும். எனவே, அதை உச்சத்திற்கும் அதன் அடுத்த படிநிலைக்கும் கொண்டு செல்கிறீர்கள். அடுத்த அடுத்த படிநிலைகளை வைப்பதன் மூலமாகத்தான் இருக்கிற இடத்திலிருந்து நீங்கள் வளர முடியும்.

இப்போது நீங்கள் எங்கே இருக்கீறீர்கள் என்று உணர்ந்து அடுத்த அடியை எடுத்து வைப்பதற்கு வளர்ச்சி என்று பெயர். உங்களுக்குத் தெரியாத ஒன்றைப் பற்றி நீங்கள் பேசுகிறீர்கள் என்றால், வெறும் கற்பனையை மட்டும் பெரிதாக வளர்த்துக் கொண்டிருக்கிறீர்கள். இன்று சமயங்களின் பெயரால் வைத்திருப்பவை எல்லாம் வெறும் கலைகள் மட்டும்தான். இவற்றில் எது கற்பனை? எது உண்மை? என்று உங்களுக்குத் தெரியாது. பல கதைகளுக்குள்ளும் கதை கிளைத்துக் கொண்டே போவதால் எங்கே தொடங்கிறது? எங்கே முடிகிறது? என்றே உங்களுக்குத் தெரியவில்லை.

எனவே, யோகா முதலில் உடம்பு, பிறகு சுவாசம், பிறகு மனம் என்று தொடங்குகிறது. இந்த யோக விஞ்ஞானம் ஏறக்குறைய இயற்பியல் விஞ்ஞானம் போலவே இன்றைக்கு இருக்கிறது. ஹைட்ரஜன் இரண்டு பாகங்களையும், ஒரு பகுதி ஆக்ஸிஜனையும் சேர்த்தால் தண்ணீர் கிடைக்கும். அதை ஒரு விஞ்ஞானி கலந்தாலும் தண்ணீர் கிடைக்கும், ஒரு முட்டாள் கலந்தாலும் தண்ணீர் கிடைக்கும். இந்த யோகாவில் கூட இன்னவற்றையெல்லாம் நாம் செய்தால் இன்னது கிடைக்கும் என்று தெரிவிக்கிறோம். இதை யோகி செய்தாலும் சரி, அறியாதவர் செய்தாலும் சரி, எந்த வித்தியாசமும் இருப்பதில்லை.

சாதனைகளையும், பயிற்சிகளையும் செய்தால் ஒரே விளைவுதான் கிடைக்கும்.

எனவே யோகாவில் இந்த வழிமுறைகள் அடையாளம் காணப்பட்டிருக்கிறது. உங்கள் உடம்பில் தொடங்கி, பிறகு சுவாசத்திற்கு நகர்ந்து, பிறகு மனதைத் தொட்டு அதன்பின் உள்நிலை தன்மை பற்றி அது பேசுகிறது. இப்படி பல்வேறு படிநிலைகள் உருவாக்கப்பட்டு இருக்கிறது. இவை வெவ்வேறு அம்சங்கள்தான். இவை யோகாவின் கிளைகள் அல்ல. சொல்லப்போனால் எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் நாம் கையாளுகிறோம். அவை அனைத்தும் சமச்சீரான முறையில் ஒன்றாக ஒரே அம்சமாக கையாளப்படுவது மிகவும் முக்கியம். உடம்போடு மட்டும் பணிபுரிந்தால் அது ஆரம்பநிலையாக இருக்கும். அப்படித் தனித்தனி பிரிவுகள் இல்லை. 'யோகா' என்பது அனைத்து அம்சங்களும் ஒன்றுபட்ட நிலை.

# இலங்கை ஊடகவியலாள...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

தோறும் சுமார் ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபையின் ரகசிய உள்ளக அறிக்கைகள் தெரிவிப்பதாக "ரைம்ஸ்" கூறியது.

உயிரிழப்புக்கள் அநேகமாக சிங்கள ராணுவத்தின் எறிகணைத் தாக்குதல்களாலேயே ஏற்பட்டன எனவும் "ரைம்ஸ்" நாள் ஏடு கூறியிருந்தது. கண்களும் கைகளும் கட்டப்பட்டு, ஆடைகள் களையப்பட்ட தமிழ்க் கைதிகள் சிங்களப் படையினரால் சுட்டுக்கொல்லப்படும் காணொளிக் காட்சிகள் அண்மையில் பிரித்தானியாவின் "சனல் - 4" நிறுவனத்தால் வெளியிடப்பட்டிருந்தது. இலங்கையின் ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர்கள் அமைப்பு இந்தக் காணொளியை வழங்கியிருந்தது. இவை அனைத்தும் சிங்களப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கான உறுதியான சான்று ஆதாரங்களாக அனைத்துலக மனித உரிமை அமைப்புக்களால் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆராய்வதற்காக கடந்த மே மாதம் 26, 27 ஆம் நாட்களில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சிறப்பு கூட்டத் தொடர் கூட்டப்பட்டது. எனினும் இதில் இலங்கைக்கு எதிராக எந்தவித தீர்மானங்களும் நிறைவேற்றப்படவில்லை. இந்தியா, சீனா, ரஷ்யா ஆகிய பலம் வாய்ந்த நாடுகளின் துணையுடன் தனக்கு எதிரான முயற்சியை கொழும்பு வெற்றிகரமாக தடுத்திருந்தது. போரின் கடைசிக் காலப் பகுதியில் சிங்கள ராணுவத்தினர் மற்றும் விடுதலைப் புலிகளால் பெருமளவில் மனித உரிமை மீறல்கள் மேற்கொள்ளப்பட்டன எனக் குற்றம் சாட்டிய 90 அனைத்துலக மனித உரிமை அமைப்புக்கள் இந்த கூட்டத் தொடருக்கு அழைப்பு விடுத்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று விடுக்கப்படும் கோரிக்கைகளை ஏற்க அரசு தொடர்ந்து மறுத்து வருகின்றது. போரில் வெற்றி பெற்றவர்களுக்கு எதிராக அத்தகைய விசாரணைகள் நடத்தப்படுவதில்லை என அது கூறிவருகின்றது.

இத்தகைய நிலையிலேயே இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து அமெரிக்க போர்க் குற்றங்கள் தொடர்பான அலுவலகம் அறிக்கை தயாரித்து வருகின்றது. இந்த அறிக்கையில் இறுதிப் போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் குறித்த பல தகவல்கள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சிங்கள ராணுவம் மற்றும் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பாக ஆதாரபூர்வமான பல தகவல்களை இந்த அறிக்கை வெளியிடும் என மனித உரிமை ஆர்வலர்களும் ஊடகவியலாளர்களும் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.


என் மூலம் வீடு வாங்குவது / விற்பதன் மூலம் BMW ஒன்றை வெற்றிகொள்ளலாம்



KENNEDY / SHEPPARD New Condo. 1000 sq.ft.
2 bedroom + Den. Low maintenance.

House with Mechanic shop Scarborough

Church for sale Toronto

Buy low, Sell high - 40 years Low Interest

வங்கியின் பணத்தில் முதலீடு - 5 வருடத்தில் Cash out

5 year plan 3.9% interest Power of Sale

Properties with Tenant's Pay the cost

What's your Risk?

We look after seniors over 70 years peaceful life.

Country Style Coffee shop - Oshawa Good Income

வீடும் வியாபாரமும் Business Zoning

Future long term Investment

பரந்த நிலப்பரப்பு பங்களோ இரண்டு மூன்று குடும்பங்கட்கு வேலைவாய்ப்பு

அழையுங்கள் - Sitham (Sam) Shanmugam (Sales Rep.)

416.230.7820 / 905.696.7310

HomeLife GTA Realty Inc. - 416.321.6969 /905.712.2666

150 - 200 Acres land for sale in Peteboroug. Farm Land value.

# கணினி எண் முறைகள் - பதினாறு எண் முறை

சென்ற இதழின் தொடர்ச்சியாக நாம் அடுத்து ஆராய இருப்பது! பதினாறு நிலை எண் முறை. எண்முறைகளில் அடிப்படை எண் அதிகமாக இருந்தால் ஒரு எண்ணைக் குறிப்பிடத் தேவையான இலக்கங்கள் குறைகிறது. எடுத்துக் காட்டாக 23 என்ற எண்ணை, பதின்ம நிலை முறையில் இரண்டு இலக்கங்களா லும் இருநிலை எண் முறையில் ஏழு இலக்கங்களா லும் குறிப்பிடுகிறோம். பதினாறின் அடிப்படையில் எண்களை எழுதும் போது இலக்க எண்ணிக்கை இன்னமும் குறையும்.

ஏன் பதினாறு? $2^4 = 16$, அதனால்தான் இந்த உறவு எப்படி எண்முறையை கணினிக்கு எளிதாக்குகிறது எனப் பார்ப்போம்.

**- Bala -**

*A1 Ink Rainbow Inc.*

Email: balag2005@yahoo.com

பதினாறுநிலை எண்ணுக்கு 16 இலக்கங்கள் தேவை. நமக்கு தெரிந்தது 0 முதல் 9வரை பத்து இலக்கங்களே. மீதி இருக்கும் ஆறு இலக்கங்களுக்கும் என்ன செய்வது? A,B,C,D,E,F என்ற ஆங்கில குறியீடுகளை 10,11,12,13,14,15 என்று மதிப்புகளைக் குறிப்பிடுவதாகக் கொள்ள வேண்டும். இம்முறையில் D என்பது 13 என்ற பதின்மநிலை எண்ணைக் குறிக்கும். $10_{16}$ என்பது பதினாறைக் குறிக்கும். 2C என்பது $44_{10}$ ஐக் குறிக்கும்.

$2c_{16} = 2 \times 16^1 + c \times 16^0 = 32 + 12 = 44_{10}$

நான்கு பிட்டுகளால் பதினாறு சரங்களை உருவாக்க முடியும். இவை ஒவ்வொன்றையும் இருநிலை எண்களாகப் பார்த்தால் 0 முதல் F வரை பதினாறு எண்கள் கிடைக்கின்றன. அதனால் ஒவ்வொரு நாலு பிட் எண்ணும் ஒரு பதினாறு நிலை எண்ணுக்கு சமம்.

| | | | |
|---|---|---|---|
| 0000 = 0 | 1000 = 8 | 0001 = 1 | 1001 = 9 |
| 0010 = 2 | 1010 = A | 0100 = 3 | 1011 = B |
| 0101 = 4 | 1100 = C | 0101 = 5 | 1101 = D |
| 0110 = 6 | 1110 = E | 0111 = 7 | 1111 = F |

இந்த தொடர்பு மிக முக்கியமானது. இதைக் கொண்டு, ஒருநிலை முறை எண்ணை மிக எளிதாக பதினாறுநிலை எண்ணாக மாற்றலாம். இதற்குச் செய்ய வேண்டியது இவ்வளவே. வலது பக்கத்திலிருந்து, துவங்கி நான்கு நான்கு பிட்டுகளாகச் சேர்த்து வைக்கவும். இடது பக்கம் நான்குக்கும் குறைவான இலக்கங்கள் இருந்தால் தேவையான சுழிகளை இடது பக்கம் சேர்த்துக்கொள்ளலாம். இனி ஒவ்வொரு நான்கு பிட்டு தொகுதியும் ஒரு பதினாறு நிலை எண்ணாக மாற்றி எழுத வேண்டும். அவ்வளவு தான், எடுத்துக்காட்டாக

$1100\ 1001\ 1101 = C9D_{16}$

C 9 D

பதினாறுநிலை எண்ணில் இலக்கங்கள் குறைவாக இருப்பதும், ஒரு பைட்டை, சரியாக இரண்டு இலக்கங்களாக குறிப்பதும், இம்முறையின் சிறப்பு தன்மைகள், எளிதாக இருநிலை முறைக்குச் சென்று திரும்புவது கணிப்புகளை விரைவாக்கும்.

### பதின்மநிலை - இருநிலை மாற்றம்

இருநிலை எண்ணை பதின்மநிலைக்கு மாற்றுவது எளிது. ஏற்கனவே பார்த்தபடி ஒவ்வொரு இலக்கத்தையும் தேவையான இரண்டின் அடுக்கால் பெருக்கி சேர்க்க வேண்டும்.

பதின்மநிலை எண்ணை இருநிலை எண்ணாக மாற்ற இரண்டு வழிகள் உள்ளன.

### தொடர்ந்து இரண்டால் வகுத்தல்

ஒரு பதின்மநிலை எண்ணை இரண்டால் வகுத்தால் மீதி 0 அல்லது 1 என வரும். வகுத்து வரும் ஈவுகளை திரும்பத் திரும்ப வகுத்தால் மீதிகள் வரிசையாக வரும். இவற்றை வலமிருந்து இடமாக அடுக்கினால் தேவையான இருநிலை எண் கிடைக்கும். M என்ற எண்ணை இரண்டால் வகுத்தால் $R_1$ என்பது மீதியாகவும் M என்பது ஈவாகவும் வருகின்றன என்போம். இதில் $R_1$ என்பது 0 அல்லது 1 ஆக இருக்கும். அதாவது

$M = 2 * M_1 + R_1$ $R_1 = 0$ அல்லது 1

அடுத்து $M_1$ ஐ இரண்டால் வகுத்தால், மீதி $R_2$ எனவும் விடை $M_2$ எனவும் இருக்கட்டும் அதாவது $M1 = 2 * M_2 + R_2$ $R_2 = 0$ அல்லது 1

$M = 2\ (2 * M_2 + R_2) + R_1$

$= 2^2\ M + R_2 * 2^1 + R_1 * 2^0$

அடுத்து $M_2$ வை இரண்டால் வகுக்கவும்.

விடை $M_3$ மீதி $R_3$ என்போம்.

அதாவது $M_2 = 2 * M_3 + R_3$

அதனால் $M = 2\ (2 * (2 \times m_3 + r_3) + r2) + r1$

$= 2^2\ (2 \times m_3 + r_3) + r_2 * 2^1 + r * 2^0$

$= 2^3 m_3 + r_3 * 2^2 + r_2 * 2^1 + r_1 * 2^0$

இந்த செயல்பாடு திரும்ப திரும்ப செயல்படுத்த வேண்டும். விடை 0 என வரும் வரை

$M = 1 * 2^k + r_k * 2^{k-1} .... + r_3 * 2^2 + r_2 * 2^1 + r_1 * 2^0$

### எடுத்துக்காட்டு

$23_{10}$ என்பதை இருநிலை முறைக்கு மாற்றுக

| எண் | ஈவு | மீதி |
|---|---|---|
| 23/2 | 11 | 1 (LSB) |
| 11/2 | 5 | 1 |
| 5/2 | 2 | 1 |
| 2/2 | 1 | 0 |
| 1/2 | 0 | 1 (MSB) |


எல்எஸ்பி (LSB - Least Significant Bit) என்பது சிறு மதிப்பு பிட் என்பதையும் எம்எஸ்பி (MSB - Most Significant Bit) என்பது பெரு மதிப்பு பிட் என்பதையும் குறிக்கும்.

கொடுத்த எண்ணை இருநிலை முறை எண்ணாக மாற்ற இந்தமீதிகளை கீழிலிருந்து மேலாக எடுத்து இடமிருந்து வலமாக எழுதவும்.

$23_{10} = 101112$

இந்த இருநிலை எண்ணில் எத்தனை இலக்கங்கள் இருக்கும்? கொடுத்த

தொடர்ச்சி 22ஆம் பக்கம்



# விநாடிகளை மிச்சம் பிடிக்கும் அதிவேக மனிதன்

## விளையாட்டுத் தகவல்கள் 267

உசேன் போல்ட் மீண்டும் உலக சாதனை

உலக தடகள போட்டி ஜெர்மனி தலைநகர் பெர்லினில் நடைபெற்று வருகிறது. மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட ஆண்களுக்கான 100 மீட்டர் ஓட்டபந்தயம் நடந்தது. இதில் உலக சாதனையாளரான உசேன் போல்ட் (ஜமைக்கா), டைசன்காய் (அமெரிக்கா), ஆசபாபோவெல் (ஜமைக்கா), டேனியல் பெய்லி (ஆன்டிகுவா) உள்பட 8 வீரர்கள் கலந்து கொண்டனர்.

ஜமைக்கா வீரர் உசேன் போல்டின் மின்னல் வேக ஓட்டத்துக்கு மற்றவர்களால் ஈடுகொடுக்க முடியவில்லை. உசேன் போல்ட் 9.58 வினாடியில் பந்தய தூரத்தை கடந்து உலக சாதனை படைத்தார். அவர் தனது சாதனையை முறியடித்து மீண்டும் புதிய சாதனை படைத்தார். பெய்ஜிங் ஒலிம்பிக் போட்டியில் அவர் 9.69 வினாடியில் கடந்ததே உலக சாதனையாக இருந்தது. இதன் மூலம் உலகின் அதிவேக ஓட்டப்பந்தய வீரராக உசேன் போல்ட் நீடிக்கிறார். நடப்பு சாம்பியனான அமெரிக்க வீரர் டைசன் காய் 9.71 வினாடியில் கடந்து வெள்ளிப்பதக்கமும், ஆசபா போவெல் (ஜமைக்கா) 9.84 வினாடியில் கடந்து வெண்கல பதக்கத்தையும் பெற்றனர்.

டேனியல் பெய்லி (ஆன்டிகுவா), ரிச்சர் தொம்சன் (டிரினிடட்), சேம்பர்ஸ் (இங்கிலாந்து), பர்னஸ் (டிரினிடட்), பேட்டன் (அமெரிக்கா) முறையே 4 லிருந்து 8-வது இடங்களை பிடித்தனர். பெண்களுக்கான குண்டு எறிதலில் நியூசிலாந்துக்கு தங்கப்பதக்கம் கிடைத்தது. அந்நாட்டை சேர்ந்த வாலிரி 20.44 மீட்டர் தூரம் எறிந்தார். ஜெர்மனியை சேர்ந்த நடின் செனின் 20.20 மீட்டர் தூரம் எறிந்து வெள்ளிப்பதக்கமும், லிஜோ காங் (சீனா) 19.89 மீட்டர் தூரம் எறிந்து வெண்கல பதக்கமும் பெற்றனர்.

பெண்களுக்கான 20 கிலோ மீட்டர் நடை பந்தயத்தில் ரஷிய வீராங்கனை ஒல்கா கனிஸ்சினா தங்கப்பதக்கம் பெற்றார். அவர் 1 மணி 28 நிமிடம் 0.09 வினாடியில் பந்தய தூரத்தை கடந்தார். ரஷியா பெற்ற 2-வது தங்கப்பதக்கம் இதுவாகும். அயர்லாந்தை சேர்ந்த ஆலிங் வெள்ளி பதக்கமும், சீனாவை சேர்ந்த காங்லியூ வெண்கல பதக்கமும் பெற்றனர்.

மின்னல் வேக உசைன் போல்ட் 200மீ. உலக சாதனை - உலகின் அதிவேக மனிதன் என்று அழைக்கப்படும் ஜமைக்காவின் உசைன் போல்ட் பெர்லினில் நடைபெறும் உலக தடகள அமைப்பின் உலக சாம்பியன்ஷிப் 200மீ ஓட்டப்பந்தயக்தில் 19.19 வினாடிகளில் இலக்கை எட்டி மீண்டும் ஒரு புதிய உலக சாதனை படைத்தார். ஏற்கனவே பெர்லினில் 100மீ. சாம்பியன் பட்டத்தை உலக சாதனையுடன் வென்றார் உசைன்போல்ட். சரியாக ஒரு ஆண்டிற்கு முன் உசைன் போல்ட் பீஜிங் ஒலிம்பிக் போட்டிகளில் 200மீ. ஓட்டத்தில் 19.30 வினாடிகள் என்று உலக சாதனையை நிகழ்த்தினார். மேலும் 11 வினாடிகளை மிச்சம் பிடித்தார் உசைன் போல்ட். இவருக்கு அடுத்தபடியாக பனாமா வீரர் அலான்சோ எட்வர்ட், 0.62 வினாடிகள் கூடுதல் எடுத்துக் கொண்டு இலக்கை எட்டி இரண்டாவது இடம் வந்தார். அமெரிக்க வீரர் வாலஸ் ஸ்பியர்மன் 3-வது இடம் பிடித்தார். ஐ.ஏ.ஏ.எ.்.ப். சாம்பியனான டைசன் கே காயம் காரணமாக இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### 400 மீ. ஓட்டத்திலும் உசைன் போல்ட்டிற்கு தங்கம்

ஜெர்மனி தலைநகர் பெர்லினில் நடந்து வரும் உலகத் தடகளத் தொடரின் ஆடவருக்கான 400 மீட்டர் தொடர் ஓட்டத்தில் உசைன் போல்ட் அடங்கிய ஜமைக்கா அணி தங்கப்பதக்கம் வென்றுள்ளது. இதன் மூலம் 100, 200 மற்றும் 400 மீட்டர் ஓட்டங்களில் தலா ஒரு தங்கப்பதக்கத்தை உசைன் போல்ட் வென்றுள்ளார். 4x100 மீட்டர் ஓட்டத்தில் உசைன் போல்ட், அசா.ஃபா பாவல் உள்ளிட்ட 4 பேர் அடங்கிய ஜமைக்கா அணி தங்கப்பதக்கம் வெல்லும் என ரசிகர்கள் எதிர்பார்த்தனர். இதில் அசா.ஃபா பாவல் இடுப்பு பிடிப்பு காரணமாக அவதிப்பட்டதால், அந்த அணியின் தங்கப் பதக்க வாய்ப்பு பறிபோகும் நிலை ஏற்பட்டது. எனினும், உசைன் போல்ட்டின் சிறப்பான பங்களிப்பால், ஜமைக்கா அணி முன்னிலை பெற்றது. முடிவில் இறுதி 100 மீட்டர் தூரத்தை அசா.ஃபா பாவல் விரைவாக ஓடி கடந்ததால், ஜமைக்கா அணி 37.31 வினாடிகளில் பந்தய தூரத்தைக் கடந்து தங்கப்பதக்கத்தை தட்டிச் சென்றது. அதற்கு அடுத்தப்படியாக டிரிடினாட் அண்டு டொபாகோ அணியினர் (37.62 வினாடி) வெள்ளிப் பதக்கத்தையும், இங்கிலாந்து அணியினர் (38.02 வினாடி) வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

அரை இறுதிக்கு செரினா தகுதி - ரோஜர்ஸ் கோப்பைக டென்னிஸ் போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் அமெரிக்காவின் செரினா வில்லியம் வெற்றிப் பெற்று அரையிறுக்கு முன்னேறியுள்ளார். ரோஜர்ஸ் கோப்பைக்கான மகளிர் டென்னிஸ் போட்டி கனடாவில் நடந்து வருகிறது. இதன் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில், உலகின் 2ம் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், செக் குடியரசு நாட்டை சேர்ந்த லூசி சபரோவாவை எதிர்கொண்டார். இதில், 6 3, 6 2 என்ற நேர் செட்டில் லூசி சபரோவாவை வென்று, செரினா அரை இறுதிக்கு முன்னேறினார். மற்ற கால் இறுதி ஆட்டங்களில் மரியா ஷரபோவா (ரஷியா), எலீனா டெமன்டிவா (ரஷியா), அலிசா கிளைபனோவா (ரஷியா) ஆகியோர் வெற்றி பெற்று அரை இறுதிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

ரோஜர்ஸ் கோப்பை: சாம்பியன் பட்டம் வென்றார் எலீனா டீமன்டீவா - ரோஜர்ஸ் கோப்பை டென்னிஸ் போட்டியின் மகளிர் பிரிவு இறுதிப்போட்டியில் ரஷ்ய வீராங்கனை எலீனா டெமன்டிவா, சக நாட்டு வீராங்கனை மரியா ஷரபோவாவை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றார். மகளிருக்கான ரோஜர்ஸ் கோப்பை டென்னிஸ் போட்டி கனடாவில் நடந்தது. இதன் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் உலகின் 4ஆம் நிலை வீராங்கனையான ரஷ்யாவின் எலீனா டீமன்டீவா, 3 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற சக நாட்டு வீராங்கனை மரியா ஷரபோவாவை எதிர்த்து விளையாடினார்.

இதில் முதல் செட்டை 6-4 என்ற புள்ளிக்கணக்கில் எலீனா கைப்பற்றினார். அடுத்த நடந்த 2வது செட் ஆட்டத்திலும் எலீனாவின் கை ஓங்கியிருந்ததால் 6-3 என்ற புள்ளிக்கணக்கில் எளிதாக அதனை வென்றார். இதன் மூலம் 2-0 என்ற நேர் செட்களில் ஷரபோவாவை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை எலீனா கைப்பற்றினார். இந்த ஆண்டில் ரஷ்ய வீராங்கனை எலீனா டீமென்டீவா பெறும் 3வது சாம்பியன் பட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

### பட்டம் வெல்லும் நம்பிக்கையுடன் களமிறங்கும் ச.ஃபீனா

அமெரிக்காவில் அடுத்த வாரம் துவங்க உள்ள யு.எஸ். ஓபன் கிராண்டஸ்லாம் டென்னிஸ் தொடரின் மகளிர் பிரிவு சாம்பியன் பட்டத்தை வெல்லும் நம்பிக்கையுடன் ரஷ்ய வீராங்கனை தினாரா ச.ஃபீனா களமிறங்குகிறார். உலக மகளிர் டென்னிஸ் தரவரிசையில் முதலிடத்தில் உள்ள ச.ஃபீனாவுக்கு, தரவரிசையில் 2வது இடத்தில் உள்ள நடப்பு சாம்பியனான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் கடும் சவாலாக இருப்பார் என டென்னிஸ் ரசிகர்கள் கருதுகின்றனர். இந்தாண்டில் நடந்த ஆஸ்ட்ரேலியன் ஓபன், விம்பிள்டன் தொடரில் சாம்பியன் பட்டம் வென்ற உத்வேகத்துடன் செரீனா களமிறங்குகிறார். ஆனால் இந்த இரு தொடரிலும் ச.ஃபீனா இறுதிப்போட்டியில் தோல்வியுற்றார். இதுமட்டுமின்றி பிரெஞ்ச் ஓபன் இறுதியிலும் குஸ்நெட்ஸோவாவுக்கு எதிராக ச.ஃபீனா தோல்வியடைந்தார்.

எனினும், கடந்த 52 வார கால வெற்றியின் அடிப்படையில் பட்டியலிடப்படும் மகளிர் தரவரிசையில் ச.ஃபீனா தற்போது முதலிடத்தில் உள்ளார்.

இதுகுறித்து ச.ஃபீனா கூறுகையில், தரவரிசையில் முதலிடத்தில் இருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. அதனுடன் கிராண்ட்ஸ்லாம் பட்டங்களில் ஒன்றான யு.எஸ். ஓபன் தொடரில் சாம்பியன் பட்டம் வென்றால் எனது இலக்கு நிறைவேறும் என்றார்.

### யு.எஸ். ஓபனில் சாம்பியன் பட்டம் வெல்வேன்: நடால் நம்பிக்கை

உலக டென்னிஸ் தரவரிசையில் 3வது இடத்தில் இருந்தாலும், யு.எஸ். ஓபன் டென்னிஸ் தொடரில் சாம்பியன் பட்டம் வெல்லும் வாய்ப்பு தனக்கு உள்ளதாக ஸ்பெய்ன் வீரர் ர.ஃபேல் நடால் தெரிவித்துள்ளார். நியூயார்க்கில் ஆதரவற்றோ ருக்கு நிதி திரட்டுவதற்காக நடத்தப்பட்ட சம்பிரதாய போட்டியில் அமெரிக்க வீராங்கனை செரீனாவுடன் விளையாடிய நடால் அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது, 'யு.எஸ். ஓபன் டென்னிஸ் தொடரில் பங்கேற்பதற்காக அமெரிக்காவுக்கு புறப்பட்ட போது நான் முழு உடல் தகுதியுடன் இருப்பதாக கருதவில்லை. காயத்திற்கு சிகிச்சை பெற்ற பின்னர் இதுபோன்ற உணர்வு ஏற்படுவது வாடிக்கைதான் என்றாலும், நான் மிகவும் சௌகரியமாக உணர்கிறேன் என்றார். முட்டியில் ஏற்பட்ட காயத்தை குணப்படுத்துவதற்காக அறுவை சிகிச்சை செய்து கொண்ட நடால் சுமார் 2 மாதத்திற்குப் பின்னர் மீண்டும் சர்வதேசப் போட்டிகளில் களமிறங்குகிறார். கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றாகக் கருதப்படும் யு.எஸ். ஓபன் தொடரின் சாம்பியன் பட்டத்தை நடால் இதுவரை வென்றதில்லை. இதுகுறித்து நடால் கூறும் போது மொத்தமுள்ள 4 கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில், யு.எஸ். ஓபன் பட்டத்தை இதுவரை நான் கைப்பற்றவில்லை. இத்தொடரில் பட்டம் வென்றால் 4 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களையும் வென்ற மனநிறைவு கிடைக்கும்' என்றார்.

விக்டோரியா 20 அணியில் முரளிதரன் - ஆஸ்ட்ரேலியா உள் நாட்டு T20 கிரிக்கெட் தொடருக்கான விக்டோரியா புஷ் ரேஞ்சர்ஸ் அணிக்கு இலங்கை சுழற்பந்து மேதை முத்தையா முரளிதரன் விளையாடுகிறார். மேற்கிந்திய ஆல்-ரவுண்டர் டிவைன் பிராவோ, முரளிதரன் ஆகியோர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதாக விக்டோரியா அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது. இதே விக்டோரியா அணியிலிருந்துதான் சுழற்பந்து மேதை ஷேன் வார்ன் உருவானார் என்பது குறிப்பிடத்தக்கது. அக்டோபர் மாதம் நடைபெறவுள்ள சாம்பியன்ஸ் லீக் T20 கிரிக்கெட் தொடரில் ஆஸ்ட்ரேலியாவிலிருந்து விக்டோரியா புஷ் ரேஞ்சர்ஸ் அணியும், நியூசவுத்வேல்ஸ் அணியும் தகுதி பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

ஆஷஸ் கோப்பையை மீண்டும் வென்றது இங்கிலாந்து - கடைசி டெஸ்டில் ஆஸ்ட்ரேலியா அணியை தோற்கடித்து இங்கிலாந்து அணி மீண்டும் ஆஷஸ் கோப்பையை கைப்பற்றியது. இங்கிலாந்து-ஆஸ்ட்ரேலிய கிரிக்கெட் அணிகள் இடையே வரலாற்று புகழ்மிக்க "ஆஷஸ் டெஸ்ட் தொடர் நூறு ஆண்டுகளுக்கும் மேலாக நடந்து வருகிறது. 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்த போட்டி நடத்தப்படுகிறது. இதன்படி 65-வது ஆஷஸ் டெஸ்ட் கடந்த மாதம் இங்கிலாந்தில் தொடங்கியது. இதில் முதல் 4 டெஸ்டில் இரு அணியும் தலா ஒரு வெற்றி பெற்றன. இரு போட்டி டிராவாகின.

இதனால் தொடர் சமன் ஆன நிலையில் கோப்பையை வெல்வது யார் என்பதை நிர்ணயிக்கும் பரபரப்பான 5-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி லண்டன் ஓவல் மைதானத்தில் கடந்த 20ஆம் தேதி தொடங்கியது. இதில் முதல் இன்னிங்சில் இங்கிலாந்து 332 ரன்களும், ஆஸ்ட்ரேலியா 160 ரன்களும் எடுத்தன. பின்னர் 172 ரன்கள் முன்னிலையுடன் 2-வது இன்னிங்சை ஆடிய இங்கிலாந்து அணி 2-வது இன்னிங்சில் 9 விக்கெட்டுக்கு 373 ரன்கள் சேர்த்து டிக்ளேர் செய்தது. இதன் மூலம் ஆஸ்ட்ரேலிய அணிக்கு 546 ரன்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

கடினமான இலக்கை நோக்கி 2-வது இன்னிங்சை தொடங்கிய ஆஸ்ட்ரேலிய அணி 3-வது நாள் ஆட்ட நேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 80 ரன்கள் எடுத்திருந்தது. இந்த நிலையில் 4-வது நாள் ஆட்டம் நேற்று நடந்தது. முந்தைய நாள் சிறப்பான தொடக்கம் அமைத்து தந்த வாட்சன், சைமன் கேடிச் இருவரும் சிறிது நேரத்தில் அடுத்தடுத்து எல்.பி.டபிள்யூ. ஆனார்கள். இதை தொடர்ந்து அணித் தலைவர் ரிக்கி பாண்டிங்கும், மைக் ஹஸ்ஸியும் அணியை வீழ்ச்சியில் இருந்து மீட்கும் போராட்டத்தில் இறங்கினார்கள். அணியை ஓரளவு தூக்கி நிறுத்திய இந்த அபாயகரமான கூட்டணி துரதிர்ஷ்டவசமாக ரன்-அவுட்டில் பிரிந்தது. பிளின்டாப்பால் ரன்-அவுட் செய்யப்பட்ட பாண்டிங் 66 ரன்களுடன் (103 பந்து, 10 பவுண்டரி) பெவிலியன் திரும்பினார். அடுத்து இறங்கிய துணை தலைவர் மைக்கேல் கிளார்க்கும் (0) வந்த வேகத்தில் ரன்-அவுட் ஆகவே ஆஸ்ட்ரேலிய அணி தோல்வி பாதைக்கு தள்ளப்பட்டது. 5-வது விக்கெட்டுக்கு உள்ளே வந்த மார்கஸ் நார்த்தும் (10 ரன்) நீண்ட நேரம் நீடிக்கவில்லை. இதன் பின்னர் ஒரு முனையில் ஹஸ்ஸி தனது 10-வது சதத்தை பூர்த்தி செய்து கொண்டு போராட, மறுபக்கம் வேகமாக விக்கெட்டுகள் சரிந்தன. ஹேடின் (34 ரன்), ஜான்சன் (0), சிடில் (10), ஸ்டுவர்ட் கிளார்க் (0) ஆகியோர் சிறிய இடைவெளியில் வெளியேறினர்.

கடைசி விக்கெட்டாக மைக்ஹஸ்ஸி ஆட்டம் இழக்க ஆஸ்ட்ரேலிய அணி 2-வது இன்னிங்சில் 348 ரன்களுக்கு அனைத்து விக்கெட்டுகளை இழந்தது. இதன் மூலம் 197 ரன்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் 2-1 என்ற கணக்கில் 4 ஆண்டுகள் இடைவெளிக்கு பிறகு இங்கிலாந்து அணி மீண்டும் ஆஷஸ் கோப்பையை கைப்பற்றி இருக்கிறது. இங்கிலாந்து அணியில் ஸ்வான் 4 விக்கெட்டுகளும், ஹார்மிசன் 3 விக்கெட்டுகளும் வீழ்த்தினர். வெற்றி கொண்டாட்டத்துடன் இங்கிலாந்து ஆல்-ரவுண்டர் பிளின்டாப் டெஸ்ட கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றார். முதல் இன்னிங்சில் 5 விக்கெட்டுகள் ஆஸ்ட்ரேலி யாவை நிலை குலைய செய்த இங்கிலாந்து பந்து வீச்சாளர் ஸ்டுவர்ட் பிராட் ஆட்டநாயகன் விருது பெற்றார். இங்கிலாந்து அணித் தலைவர் ஸ்டிராஸ் (மொத்தம் 474 ரன்), ஆஸ்ட்ரேலிய வீரர் மைக்கேல் கிளார்க் (448 ரன்) ஆகியோர் தொடர் நாயகன் விருது பெற்றனர். இந்த தோல்வியின் மூலம் ஆஸ்ட்ரேலிய அணி முதல் முறையாக ஐ.சி.சி. தரவரிசையில் முதலிடத்தை இழந்துள்ளது.



எஸ். கணேஷ்


S.A.P HELPING HANDS உதவும் கரங்கள்

மக்கள் சேவை சதாசிவ சேவை

மூத்தோருக்கான சேவைகள்

- இருப்பிட வசதிகள் ஒழுங்கு செய்தல்
- சமூக நல பணிமனைக்கு அழைத்துச் செல்தல்
- கோவில் / தேவாலயம் அழைத்துச் செல்தல்
- வைத்தியரிடம் அழைத்துச் செல்தல்
- கடைகளுக்கு அழைத்துச் செல்தல்
- எல்லா வகையான படிவங்களும் நிரப்புதல்
- கோடைகால சுற்றுலா

சதாசிவா - 416.454.2810

ASATHN@hotmail.com

மற்றைய சேவைகள்

> All Mortgage / Refinance
> Personal Business Loan
> All kind of Insurances
> Line of Credits
> Bankruptcy
> Accident Claims

இலவச ஆலோசனைகளும், ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்

# கனடிய பொருளாதாரத்தின் ஏற்றமும் இறக்கமும்

கனடிய பொருளாதாரமும், அமெரிக்க பொருளாதாரமும் முன்னைய நிலைமையை விட சிறிது தேறி இருப்பதாக அண்மையில் வெளிவந்துள்ள பொருளாதார அளவு கோல்கள் தெரிவிக்கின்றன. இருந்த போதிலும், மாதத்திற்கு மாதம் பொருளாதாரத்தின் பாதிப்பை காணக் கூடியதாக உள்ளது. அதாவது நீண்ட காலமாக வியாபாரத்தில் கோலோச்சிய பல நிறுவனங் களும் தமது கடன்பளுவை தாங்கமுடியாமல் திவாலிற்கு (Bankruptcy) போகவேண்டிய பரிதாப நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. உலகில் பல நாடுகளிலும் மதிப்புபெற்ற குறிப்பாக இலங்கையில் நாம் இருந்த காலத்தில் மிகவும் ஆசையுடனும், ஆவலுடன் வாசித்த Readers Digest என்ற அழகான சஞ்சிகையின் நிறுவன மும் இந்த பரிதாப நிலையை அடைந்துள்ளது.

கடந்த பலவருடங்களாக வியாபாரத்தில் நட்டத்தையே அடைந்து வந்த இந்த நிறுவனம் இறுதியாக தமது வியாபாரக் கதவை மூடி விட்டது. இவ்வாறே பல ஆண்டுகளாக இயங்கி வரும் 'Second Cup' என்ற கோப்பி (Coffee) வழங்கும் கடையும் கனடாவில் 30 வியாபாரக் கிளைகளை மூட முடிவு எடுத்துள்ளது.

மேலும் Sears மற்றும் Kmart போன்ற Retail கடைகள் கிறிஸ்மஸ் வியாபாரக் கழிவை இப்போதே கொடுக்கத் தொடங்கியுள்ளன. வியாபாரத்தில் ஏற்பட்ட மந்த நிலைமையை போக்குவதற்காகவே இவ்வாறான வியாபார தந்திரங்களைச் செய்கின்றன. இவற்றிற்கு பொருளாதார இறுக்கமே (Recession) முக்கிய காரணமாகும். இதனால் வேலை இழப்பவர்கள் எண்ணிக்கை அதிகரித்தே செல்கின்றது.

ஒருபடிமேலாக அமெரிக்காவில் சில மாநிலங்களில் Taxi ஓட்டுபவர்கள் 2 For 1 என்ற சலுகைகளும் தமது வாடிக்கையாளர்களிற்கு கொடுக்கத் தொடங்கியுள்ளார்கள். அதாவது இருசவாரி செய்யும்போது ஒரு சவாரி இலவசமாக வழங்கப்படுகின்றது.

யூலை 2009 இல் மாதாந்த வியாபாரம் (Retail Sales) இதற்கு முந்தைய மாதத்தைவிட 0.1% குறைந்துள்ளது. இருந்தும் கடந்த கிழமை பொருளாதார அறிக்கையின்படி பணஇறுக்கம் (Recession) முடிவுக்கு வந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இவ்வாறான விரும்பாத பொருளாதார புள்ளி விபரங்கள் வருகின்றபோதும், அமெரிக்காவில் வீட்டு வியாபாரத்தில் ஏற்பட்ட தேக்க நிலை ஓரளவு தமது மிகக்குறைந்த நிலையை (Bottom Point) அடைந்திருக்கலாம் என்று கூறப்படுகின்றது. இருந்தாலும் கனடாவில் Manufacturing Sector இல் கடந்த நாலு மாதங்களாக ஏற்பட்ட மந்தநிலை இப்பொழுது ஓரளவு உயிர்ப்பு கிடைத்தது போல தோன்றுகின்றது. அண்மையில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சிக்கு பிறகு ஜேர்மனிய அதிபர் Angela Mergel ஜேர்மனியின் பொருளாதார இறுக்கம் (Recession) இப்பொழுது முடிவுக்கு வந்துள்ளதாக அறிவித்துள்ளார். மேலும் Wal Mart போன்ற மிகப் பெரிய நிறுவனங்களும் ஆதாயம் அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ளன.

அமெரிக்காவில் வீட்டின் விலை இதற்கு முந்தைய வருடங்கள் விட ஒப்பீட்டு ரீதியில் அதிகரித்தபோதும் இப்பொழுதும் விலை குறைந்து வருகின்றது. அமெரிக்காவுடன் ஒப்பிடும் போது கனடிய ஆஸ்தி விலை குறிப்பாக ரொறொன்ரோ பெரும்பாகத்தில் வீட்டின் விலை அதிகரித்தே செல்கின்றது. அத்துடன் அண்மையில் Crude Oil இன் விலை அதிகரிப்பால், கனடிய டொலரின் பெறுமதி அமெரிக்க டொலரிற்கு எதிராக அதிகரித்தே வருகின்றது. அத்துடன் வீட்டு விலையும் அதிகரித்தே செல்கின்றது. இதற்கு சரித்திரத்திலேயே குறைந்த வட்டிவீதம் (Bank rate 0.25%, Prime Rate 2.25%) காரணமாக கொள்ளப்படுகின்றது.

டொலரின் பெறுமதி அதிகரிப்பு கனடிய பொருளாதார நிலைமை பாதிக்க கூடிய சந்தர்ப்பத்தை அதிகமாக காண்பிக்கின்றது. இதனால் கனடிய டொலரின் பெறுமதியை குறைப்பதற்காக, நிதி அமைச்சரும், கனடிய மத்திய வங்கியின் ஆளுனரும் புதிய ஆயுதத்தை தமது கையில் எடுத்துள்ளார்கள். குறிப்பாக வங்கி ஆளுனர் மைக் கானி (Mike Carney) கனடிய வட்டிவீதத்தில் அடுத்த வருடம் யூன் (யூன் 2010) வரை எதுவித மாற்றமும் ஏற்படாது என சூழ் உரைத்துள்ளார். இருந்தும், இந்தக் கூற்றை ஏற்க முடியுமா??? எவ்வளவு காலம் இந்த நிலைமை தொடரலாம்.

எது எப்படியாயினும், வட்டிவீதத்தில் பெரிதான அதிகரிப்பை எதிர்பார்க்க கூடியது. இதனால் கனடாவில் குறிப்பாக ரொறொன்ரோவில் வீட்டு விலையில் அதிக இழப்பை எதிர்பார்க்க முடியாது. இருந்தும் கடந்த கால அனுபவங்களை வைத்து பார்க்கும் போது என்ன நடக்கும் என்று கூறுவது இலகுவானதாக தெரியவில்லை. இந்த வருடத்தின் முதன் மூன்று மாதத்திற்கு பிற்பாடு வீட்டின் விலையில் அதிகரிப்பே தெரிகின்றது. இந்நிலைமை இப்பொழுதிற்கு சரியானதாக தெரிந்தாலும் உலகில் உள்ள பல வளர்ச்சி அடைந்த, அடைந்துவரும் நாடுகள் தமது நாடுகளின் பொருளாதார இறுக்கத்தின் மிகப்பெரிய பாதிப்பை தவிர்ப்பதற்காக பலவிதமான ஊக்குவிப்பு பொதிகளை (Stimulation Package) மக்களிற்கும் வியாபார நிறுவனங்களிற்கும் வழங்கியுள்ளன. நிச்சயமாக இதனால் ஏற்பட்ட வளர்ச்சிகளை காணக்கூடியதாக உள்ளது. இந்த வளர்ச்சி தொடர்ச்சியாக இருக்குமா? இதுவே இன்றை மில்லியன் டொலர் பெறுமதியான வினாவாகக் காணப்படுகின்றது.

**நாமும் நமது இல்லமும்**

ராஜா மகேந்திரன்

**தொடர் - 304**


**HomeLife GTA Realty Inc., Brokerage***

Independently owned & operated

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"



Raja M. Mahendran, P. Eng. (Broker / Owner)

1711 McCowan Rd. #206, Toronto
Tel.: 416.321.6969

145 Traders Blvd # 29, Mississauga
Tel.: 905.712.2666

## DETACED HOUSE FOR SALE




- Morningside & Sheppard
- 2 Storey • 4 Bedrooms
- 3 Washrooms • Newer roof
- Unfinished Bsmt • single Garage
- upgraded windows
- Asking Only $289,000

## NEW CONDO. for Sale

- Markham & Sheppard
- Brand new 1 bedroom + den, lower floor Previous buyer selling the property, 5 appliances
- Asking $170,000

## Condo. for Sale



- Mccowan & Steeles
- 2 Bedroom, highrise, corner unit
Asking $189,900

## Condo. for SALE

- Finch & Middlefield

2 Bedroom, low highrise, less than 5 years old complex. Asking $179,900

## எதிர்பாருங்கள்

## Townhouse Project

"MORNINGSIDE HEIGHTS"

- 4 Buildings
- 21,000 sqft. & 27 units
- Medical Building units available
- Restaurant units available
- Food / Retail units available
- Starting Price $169,900



**Nantha Aiyadurai**

Cell: 613 850 9931

COLDWELL BANKER COBURN REALTY

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்




Relocation Service
OTTAWA>>><<<GTA



நந்தா ஐயாத்துரை

Business: 613 823 7555 Fax: 613 825 8177 3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1

# பண்டைய கிரேக்க நாடக அரங்கம்

சென்ற இதழ் தொடர்ச்சி

## நாடகப் போட்டிகள்

கிரேக்கத்தில் விளையாட்டுகளிற் போட்டிகள் வைப்பதைப் போலவே நாடகங்களிலும் போட்டிகள் வைக்கப்பட்டன. அதன்சில் தையோனீசியா என்ற நகரத்தில் இது ஒரு முக்கியமான நிகழ்ச்சியாக அக்காலத்தில் இருந்தது. போட்டியை அதன்ஸ் அரசாங்கமே நடத்தியது. நாட்டின் எல்லாப் பகுதியிலுமிருந்தும் போட்டிக்கு நாடகங்கள் வரும். அவற்றிலிருந்து மூன்று சிறந்த ஆசிரியரின் நாடகங்கள் தெரிவுசெய்யப்படும்.

தையோனிசஸ் கடவுளுக்குக் காணிக்கையாக நடத்தப்படும் இப்போட்டிகள் நான்கு நாட்களுக்குத் தொடரும். முதல்நாள் ஊர்வலம், தையோனிசஸ் வழிபாடு முதலியன நடைபெறும். வழிபாட்டில் ஆடற்களத்தில் மாடு ஒன்று பலிகொடுக்கப்படும். அதனைத் தொடர்ந்து கூட்டுப்பாடற் போட்டிகள் நடத்தப்படும். அடுத்துவரும் மூன்று நாட்களிலும் நாளொன்றுக்கு மூன்று நாடகங்களாக (ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட) மூவரின் நாடகங்கள் இடம்பெறும்.

நாடகங்கள் சமயம் சார்ந்தவையாகவோ வரலாறுபற்றியதாகவோ இருக்கும். ஒவ்வொரு நாடக ஆசிரியரும் ஒன்றுக்கொன்று தொடர்பான மூன்று நாடகங்களைப் போட்டிக்குச் சமர்ப்பிக்கவேண்டும். இவை முந்நாடகங்கள் (trilogies) எனப்படும். முக்கதைகள் என்றுகூட அழைக்கலாம். கிரேக்க மொழியில் இது trilogia எனப்படும். Tri - என்றால் மூன்று என்றும் logos என்றால் கதை என்றும் பொருள். நாடகங்கள் பெரிதும் துன்பியில் சார்ந்ததாகவே எழுதப்பட்டன. ஆயினும் ஒவ்வொரு நாளும் இன்பியல் நாடகம் ஒன்றுடனேயே அன்றைய நிகழ்ச்சி நிறைவுபெறும்.

ஒவ்வொரு நாடகத்திலும் மூன்று நடிகரும் ஒரு பாட்டுக்குழுவும் இடம்பெறுவர். நடிகரிற் சிலர் பல பாத்திரங்களையும் தாங்குவர். பாட்டுக்குழுவிற் பொதுவாக 15 பாடகர் இடம்பெறுவர். நாடகத்தை எழுதுகின்றவர் ஆசிரியர் எனப்படுவர். இவர்கள் நாடகங்களை எழுதுவதுடன் தங்கள் நாடகங்களில் நடிகராகவும் இருப்பர். பாட்டுகள் இயற்றுதல், குழுப்பாடகரைப் பயிற்றுவித்தல், நடனங்களை அமைத்தல் போன்ற பணிகளைச் செய்பவராகவும் இருப்பர். தயாரிப்பு முயற்சிகளை மேற்பார்வை செய்கின்றவர்களும் இவர்கள்தாம். ஆனால் நாடகங்களைத் தயாரிப்பவர் இவர்களல்லர். தெரிவுசெய்யப்பெற்ற ஒவ்வொரு நாடக ஆசிரியருக்கும் தயாரிப்பாளர் ஒதுக்கப்படுவர். இவர்கள் வசதிபடைத்த குடிமக்களிலிருந்து சீட்டுக்குலக்கல் முறையில் தெரிவுசெய்யப்படுவர். Choregoi எனப்படும் இவர்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட ஆசிரியரின் நாடகங்களின் தயாரிப்புச் செலவுகளுக்குப் பொறுப்பாக இருப்பர். ஏனைய செலவுகள் யாவுக்கும் போட்டியை நடத்தும் அதன்ஸ் அரசாங்கமே பொறுப்பானது.

அதன்ஸ் நாடக விழாவைக் கண்டுகளிக்க கிரேக்கத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் பெருந்திரளான மக்கள் கூடுவர். ஒரு நாளைக்கு 10 மணித்தியாலம் அளவில் நாடகங்கள் நடைபெறும். நாடக விழாவின் உச்சக்கட்டம் பரிசளிப்பு விழாவாகும். பத்துப் பேரைக் கொண்ட நடுவர் நாடகங்களை மதிப்பிடுவர். இறுதி நாளன்று வெற்றிபெற்றவருக்குப் பரிசுகளும் பாராட்டுகளும் வழங்கப்படும். பரிசுகள் தயாரிப்பாளருக்கே வழங்கப்பட்டன.

## கிரேக்க நாடகத்தின் தந்தை

முதல் நாடகப் போட்டி அதன்சில் கி.மு. 534 அளவில் நடந்திருக்க வேண்டும் என்ற ஒரு கணிப்பு உண்டு. அதில் தெஸ்பிஸ் என்ற ஒரு புலவர் வெற்றிபெற்றார். இவரே கிரேக்க நாடகக் கலையின் முன்னோடியாகவும் கருதப்படுகின்றார். மரபுவழி ஆட்டங்களிற் பல மாற்றங்களைக் கொண்டுவந்து அவற்றுக்கு அரங்க நாடக வடிவம் கொடுத்தவர் என்றும் துன்பியல் நாடகத்துக்கு வித்திட்டவர் என்றும் இவர் போற்றப்படுகின்றார்.

தெஸ்பிஸ் பாட்டுக்குழுவிலிருந்து விலகி அவர்களுக்கு முன்னால் நின்று விளக்கம் கொடுக்கத் தொடங்கினார். தனக்கும் பாட்டுக் குழுவுக்கும் இடையில் தொடர்பை அதிகப்படுத்தி உரையாடல் முறையை அறிமுகப்படுத்தினார். பின்னர் கதாபாத்திரங்களைத் தாங்கும் நடிகராகவும் மாறினார். அவ்வகையில் அவரே கிரேக்கத்தின் முதல் நடிகராகவும் போற்றப்படுகின்றார். பாத்திரங்களுக்கேற்ற முகமூடிகளை அணியும் முறையையும் கொண்டு வந்தார். அதனைத் தொடர்ந்து முகமூடி அணியும் முறை கிரேக்க நாடகத்தின் சிறப்பியல்பாக வளரலாயிற்று. பிற்காலத்தில் உரோமரும் அம்முறையைப் பின்பற்றினர். தொடக்கத்தில் வழிபாட்டுக்கென்றே அடியார்கள் தையோனிசியாவுக்கு வந்தனர். வழிபாட்டுப் பாடல்களுக்குக் கலைத்துவ வடிவம் கொடுத்து மகிழ்வூட்டும் வகையில் அவற்றை மாற்றியதன் மூலம் பத்தர்களை நாடகப் பார்வையாளராக்கியவரும் இவரே. இத்தகைய புதிய முறைகளினால் வழிபாட்டை நாடக நிகழ்வாக மாற்றிய தெஸ்பிஸ் கிரேக்க நாடக அரங்கின் தந்தையாகின்றார். அவர்வழி நாடக நடிகர் இன்றும் கிரேக்கத்தில் தெஸ்பியர் என்றே அழைக்கப்படுகின்றனர்.


தெஸ்பிஸ் அறிமுகப்படுத்திய நாடகமுறைகளைப் பின்பற்றிப் பலர் நாடகங்களை எழுதித் தையோனீசியா நாடகப் போட்டிகளிற் பங்குபற்றத் தொடங்கினர். அவர்களில் கோரிலஸ் (Choerilus) என்பவர் நாடகப்போட்டிகளில் 13 தடவைகள் வெற்றி பெற்றார் என்றும் எல்லாமாக 160 நாடகங்களை எழுதினார் என்றும் கருதப்படுகின்றது. கதைக் கருக்கள் பெரிதும் கிரேக்கத்தின் புராணங்களிலிருந்தும் இலியாட் போன்ற இதிகாசங்களிலிருந்தும் பெறப்பட்டன. சமகால வரலாற்றுச் சம்பவங்களையும் சிலர் நாடகமாக்கி வெற்றி கண்டுள்ளனர். உதாரணத்துக்குப் பிரினிக்கஸ் (Phrynichus) என்ற ஆசிரியரைச் சொல்லலாம். அவர் கி.மு. 492 அளவில் அரங்கேற்றிய The Fall of Miletus என்ற நாடகம் அதன்ஸ் நகரத்தில் பெருந் தாக்கத்தை ஏற்படுத்தியது. இது பாரசீகர் கிரேக்கத்தின் வளமிக்க மிலிட்டஸ் நகரத்தைக் கைப்பற்றிய வரலாறு பற்றியது. இதனைப் பார்த்து அதீனியப் பார்வையாளர் கதறி அழுதனர். அதற்காக ஆசிரியர் குற்றப்பணம் கட்டவேண்டியும் ஏற்பட்டது என்ற குறிப்பும் பதிவில் உள்ளது. எனினும் இத்தகைய புகழாளர்களின் படைப்புகள் இன்று கிடைத்தற்கில்லை.



கவிஞர் வி. கந்தவனம்


*தொடரும்....*

APARTMENTS FOR RENT



In a NEWLY Renovated High-Rise Apartment Building
Clean, Utilities inclu. Free parking. Close to TTC, Tamil store in building, schools nearby

Pl. Call: 416.264.2818




**Personal Prayer To The Holy Spirit**



Holy spirit thou make me see everything and show me the way to reach my ideal. You who give the divine gift to forgive and forget the wrong that is done to me and who are in all instances of my life with me. I, in this short dialogue, want to thank You for everything and confirm once more that I never want to be separated from You no matter how great the material desire may be. I want to be with You and my loved ones in Your perpetual glory. Amen. Person must pray this 3 consecutive days without stating one's wish. After the 3rd day your wish will be granted no matter how difficult it may be. Promise to publish this as soon as your favor has been granted - R.V

Our Mother of Perpetual Help


# வாழ்கை சுவர்க்கமாகுது இனிய இல்லமொன்றில்...

## Elaguppllai (Mike) Srinathan B.Sc


**Sales Representative**

**Dir: 416-276-1225 Off: 905-470-9800**

**Email: esrinathan@trebnet.com**




**Finch / Sentinel**



**$93,000**
Condo Apartment, Bed rooms 2, Washrooms1 Freshly Painted, Totally Renovated(Newer Kitchen(2009),Washrooms

**Mccowan/Eglinton**




**$139,000**
Condo Apartment, Bed rooms 2 , Washrooms 2 Close To Go Station, Ttc, Shops And Schools. Video Survellience.

**E.Markham/S.14th**



**$699,990**
Detached 2 Story, Bed rooms 4, Washroom 4 Fully Fenced Yard*Indoor Access To Gar*Enclosed Front porch Close To Transit/Schools

**Nightstar/Morningside**



**$349,900**
Detached 2 story, Bed rooms 3, Washrooms 3 Home Located Close To School And Ttc, Hardwood Flooring In Living

**Markham/Elson**




**$355,000**
Semi Detached 2 Story, Bedrooms 3, Washrooms 3, In Demand Location, Double Door Entry, Close To Public School, No Frills, Canadian

**Mccowan & Denison**



**358,000**
Link 2 Story, Bedrooms 3 Wasroom 2, Excellent Location And Layout. Roof ( About 2 Years New). Garage Door (About 1

**Markham Rd And Highglen**




**$359,900**
Link 2 Story, Bed rooms 3 Washrooms 3, Living And Dining Freshly Painted, Walk To Transit, Parks And School. Close By

**Finch / Staines**



**$361,168**
Detached 2 Story, Bed rooms 4+1 Washrooms 3,Approx 6-Yrs Old, Access To 2Car Garage, Walk To Ttc,Access To Schools

**Hwy 7 & 9th Line**



**$387,900**
Detached 2 Story, Bed rooms 3, Washrooms 3 Walking Distance To All Amenities, Double Garage & Finished Spacious Basement

**Mccowan/Steeles**




**$395,000**
Link 2 story, Bed rooms 4 Washrooms 4, Immaculate Upgrade Thru-Out Home * Newer Roof,2nd Kitchen In Basement

**2nd Kitchen In Basement**



**$449,000**
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 3, Beautiful Double Detached Home With 4 Bedrooms Close To School.

**W Of Mccowan/Denison**



**$449,900**
Detached 2 Story, Bed rooms 4+2, Washrooms 4 High Demand Location, Walk To School & Transit, Newer Hardwood Flooring

**9th Line/14th Ave**



**$449,900**
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 3, Detached Brick 4 Bedroom 2 Storey 3 Years New, Ceiling On Main Floor

**9th Line & Hoover Park Dr.**



**$459,900**
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3 2 Years New All Brick Detached House With West Exposure

**Markham / 14th**



**$478,900**
Detached 2 Story, Bedrooms 4+1, Washroom 4 Finish Basement With One Br.+ 3Pc Ensuite,Lots Of Upgrades, Premium Corner Huge Lot

**16th/ Markham**



**$478,900**
Detached 2 Story, Bedrooms 4+1, Washrooms 4, Nice Backyard, 3 Car Garage, Good Large Family Room.

**9th Line/Hwy 407**




**$498,000**
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3, Gorgeous 3 Years Old 2410 Sf Home. Close To Park, School & Hwy.

**N.14th/W.9th**



**$506,800**
Detached 2 Story, Bedrooms 4 Washrooms4 IClose To 407,Schools,Transit & Shopping 'Brookfield' Home Abt 10 Yrs

**9th Line & Rizal**



**$549,900**
Detached 2 Story, Bed rooms 4 ,Was rooms 3 Upgraded Kitchen, Pot Lights, Upgraded Entry Door Elegant Floor Plan

**Woodbine/16th/Major**




**$561,750**
Detached 2 Story Bed rooms 4+2, Washrooms 5, 2586 Sq Ft [Mpac] Home With Many Upgrades

**Markham/Lawrence**




**$299,900**
Detached Bungalow Bed rooms 3+2 , Washrooms 2, Steps To Ttc, Shopping. Move-In Condition. Renovated Kitchen.

**Sales of Businessl**



**$499,999**
Sale Of Business With Property Gas Stations. Business On Hwy17, Crevier Gas Station With L.C.B.O. 649 Lotto

**Sales of Business**



**$1,650,000 For Sale**
Sale Of Business Without Property Gas Stations. SNew Look Petro-Canada Gas Station With Convenience

RE/MAX
**Realtron Realty Inc. Brokerage**
Independently Owned and Operated
7800 Woodbine Ave. Penthouse, Markham,ON. L3R 2N7

**'I can also assist you with: Mortgage Financing Home Inspection, Real Estate Lawyer'**

# எம்மை நாம் பாதுகாப்பது எப்படி? மூக்கு

## Nose

சப்த தாதுக்களால் ஆன நமது உடம்பில் 'மூக்கு' உறுப்பும் முக்கிய இடத்தை வகிக்கின்றது. முகத்தில் உள்ள உறுப்புக்களில் இதுவும் ஒன்றாகும்.

மூக்கு, நாம் சுவாசிக்கும் காற்றை தனது முன்பக்கத்தில் உள்ள மயிரிழைகளினால் வடி கட்டிச் சுத்தப்படுத்தி மூக்கில் சுரக்கின்ற திரவத்தினால் குளிரூட்டி நுரையீரலுக்கு அதாவது சுவாசப்பைக்கு அனுப்பி வைக்கின்றது. காற்றைக் குளிரூட்டி அனுப்பாவிடில் நாம் சுவாசிக்கும் காற்றின் வெப்பம் நுரையீரலைப் பாதிக்கும். அத்துடன் கிருமிகளை அழிக்கக் கூடிய கிருமிநாசினிகளும் உண்டு. இதனால் எந்தக் கிருமிகளும் உள்செல்லாது தடுக்கும் ஆற்றல் உண்டு. பல வாசனைகளை உணர முடிகின்றது. அத்துடன் நமது முகத்திற்கு அழகையும் கொடுக்கின்றது.

இத்தன்மைகள் பொருந்திய மூக்கின் உறுப்புக்களைப் பற்றிப் பார்ப்போம்.
மூக்கு எலும்பு - Nasal Bone
மூக்குத் துவாரம் - Nostril
மூக்குத் துவாரகசியிழை எலும்பு - Nasal Cartilage
மூக்கு மடல் - Wing of the Nose
நடுமூக்குத் தண்டு - Bridge of the Nose
மூக்கு நுனி - Tip of the Nose
மூக்கின் துவாரங்களுக்கு இடையே ஆன கசிவிழைய எலும்பு - Nasal Septum
நெற்றி எலும்பின் உட்புழை - Frontal Sinus
மேல்தாடை எலும்பின் உட்புழை - Maxillary Sinus
மூளையின் மூக்கின் எலும்பின் உட்புழை - Sinus
என்பனவாகும்.

மேலும் இதனிடையே ஏற்படும் நோய்கள் சிலவற்றைக் கவனிப்பது நன்று எனக் கருதுகின்றேன். மூக்கினுள் வளரும் தசைக்கட்டி Nasal Polyp
மூக்கொழுகல் - Snot / Nasal Mucous
வளைந்த அல்லது சரிந்த மூக்கு - Deviating Septum
நெற்றி எலும்பின் உட்புழையழர்ச்சி - Frontal sinusitis
மூக்கால் இரத்தம் சிந்தல் - Nose Bleeding
மேல் தாடை எலும்பின் உட்புழையழர்ச்சி - Maxillary Sinusitis
தூசி, மகரந்தம் காரணமாக ஏற்படும் சளிச்சுரம் - Allergic Rhinitis Hay Fever
சாதாரண தடிமன் - Common Cold
மூளையின் மூக்கினை எலும்புப்புழையழற்சி - Sinusitis
போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

மேலும் வியாதிகளின் அறிகுறிகளை முன்கூட்டி அறிந்து கொள்வதினால் நம்மை நாம் பாதுகாத்துக் கொள்ளலாம்.

ஜலதோஷம் (Sputum) என்பது, ஒருவகை வைரஸ் தாக்கத்தினால் ஏற்படுகின்றது. இது மிகமிக இலகுவாக ஏற்படக்கூடியது. கிருமிகள் மிகச் சிறிதாக இருப்பதினால் சுலபமாக உள்ளே சென்று விடும். உள்சென்றவுடன் அதிகம் பெருகிக்கொள்ளும் தன்மையுடையது. இதனால் மூளையையும், தொண்டையையும் தாக்கும். இதனை நமது இரத்தத்தில் உள்ள இரத்த அணுக்கள் எதிர்க்க ஏறக்குறைய ஒரு கிழமைக்கு மேல் செல்லும். எதிர்க்கும் சக்தி குறைந்தால் நீர்மோனியா (Pneumonia) வந்து விடும். தொல்லைகள் அதிகரித்து விடும். இவ்வேளை உயிர்ச்சத்து அதாவது 'C' வர்க்கப் பழக்கங்களையோ, பழரசங்களையோ உட்கொண்டால் ஓரளவு பயன் உண்டு. ஆனால் இதில் அதிகம் எடுத்தால் சில சமயம் சலாசயம் (Kidney) தாக்கப்படும் எனவும் கூறப்படுகின்றது.

உடலில் உள்ள காற்று வெற்றிடங்களில் ஜலதோஷத்தினால் ஏற்படும் நிலைதான் சைனஸ் வியாதியாகும். நெற்றி, மூக்கின் நடுப்பகுதி, அடிப்பகுதியில் சைனஸ் அறைகள் உண்டு.

அவையாவன: Maxillary Sinus, Frontal Sinus, Ethmoid Sinuses, Sphenoid Sinus என்பனவாகும். இவை தற்செயலாக அடைபட்டால் பாதிப்பு அடைந்து சைனற்றிஸ் (Sinusitis) என்ற வியாதி ஏற்படும்.

மூக்கின் தண்டுவடம் வளைந்து இருத்தல், தசைவளர்ச்சி காரணமாகவும் சைனசில் வியாதிகள் ஏற்படவழியுண்டு. அளவுக்கு மிஞ்சிய ஆங்கில மருந்துகளை எடுப்பதினாலும் சுவாசக்குழல் தாபிதம் (Bronchitis) அடையலாம் எனக்கூறப்படுகின்றது.

மூக்கில் இருந்து சிலருக்கு இரத்தம் வருவதுண்டு. இது பெரும்பாலும் மூக்கினுள் கட்டிகள், சைனஸ் பிரச்சினை, சூடானகாற்று மூக்கின் வழியால் செல்வதினால் ஏற்படலாம். மேலும் சில வியாதிகள் அதாவது காசநோய், தொழுநோய், தொண்டைப்புண் தலை அடிகாயம் என்பனவற்றால் இரத்தம் கசியலாம் அல்லது வரலாம். இந்நிலையில் தாங்கள் உடன் வைத்தியசாலைக்குச் சென்று உரியவைத்தியர்களுடன் தொடர்பு கொண்டு தகுந்த வைத்தியத்தைப் பெற்று சுகம் பெற்றுக்கொள்ளுங்கள்.

சிலருக்கு வாசனைகளே தெரிவதில்லை. மூக்குப்பொடி பாவித்தல், ஒத்துக்கொள்ளாத உணவுவகை, ஜலதோஷ சைனஸ்நிலை, மூக்கினுள் தசைவளர்ச்சி என்பவற்றால் ஏற்படலாம். எதற்கும் இலகுவில் கண்டு தகுந்த சிகிச்சை பெற்றுக்கொள்ள தங்கள் வைத்தியர்களிடம் செல்லுங்கள்.

சைனஸின் (Sinus) அனுக்கள் வீங்குதல், பாதிப்பு, ஒவ்வாமை, உயர்சுரம், தசைவளர்ச்சி என்பவற்றாலும் மூக்கடைப்பு வரலாம். இதனால் மூளை, கண் போன்ற உறுப்புக்களிலும் பாதிப்பு ஏற்படலாம். எனவே தாமதிக்காமல் வைத்தியர்களை கண்டு பரிசோதித்து பயனைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

சிலருக்கு தும்மல் வரும் போது பெரும் ஒலியுடன் வெளியாவதைக் காணுகின்றோம். இது தேவையில்லாத பொருள் மூக்கின் வழியால் உள்செல்ல முயன்றால் இதனை எதிர்க்க மூளையின் உத்தரவு இல்லாமலே உடனடியாக நுரையீரலில் இருந்து காற்று வேகத்துடன் வரும் நிகழ்வேயாகும். இந்நிலைமையானது இருந்தால் போல் ஏற்படுவதாகும். இதனை அடக்க முயற்சித்தால் அக்காற்று காது வழியாக வந்து செவிப்பறையைக் கிழித்து விடவும் முடியும். அத்துடன் மூக்கால் இரத்தம் வரும். பார்வை நரம்பில் பாதிப்பும் ஏற்படலாம். எனவே இதில் மிக அவதானம் வேண்டும்.


இன்னும் சிலரைக் கவனித்தால் தூங்கும்போது குறட்டைவிட்டு, அருகில் உறக்கத்தில் உள்ளோருக்கும் சிரமத்தை ஏற்படுத்தி உறக்க நிலையையும் பாதிப்படையச் செய்கின்றார்கள். பெரும்பாலும் நாக்கு நீளமாக இருப்போருக்கு மூக்கினால் ஓரளவு சுவாசம் நடந்தாலும், வாயினால் சுவாசம், உள்செல்ல தடை ஏற்பட்டு குறட்டை வரலாம். இவர்கள் படுக்கையில் சரிந்தோ, நிமிர்ந்தோ படுத்தாலும் சாதாரண நிலையில் கிடைக்கும் உறக்கத்தைப் பெற்றுக் கொள்வது கடினமாக இருக்கும்.

மேலும் மூக்கின் எலும்பு வளைந்திருந்தால் அல்லது மூக்கினுள் தசைவளர்ச்சி இருந்தால் அல்லது தொண்டை, மூக்கில் அடைப்பு இருந்தாலும் குறட்டை நிலை ஏற்பட வழியுண்டு. விழித்திருக்கும் போது பிராணவாயு (Oxygen) 100% மும், உறங்கும் போது 70%க்கு குறைவாக இருந்தால் அதன் அளவிற்குத் தகுந்த குறட்டை அதிகமாக இருக்கும். இதனால் மூளையின் ஆற்றல் திறன் குறைவடைந்து வரும். இருதய வேலையும் ஒழுங்காக அமையாது. இரத்தக் கொதிப்பு நெஞ்சுவலி, பக்கவாதம் என்பன ஏற்பட ஏதுவாக அமையலாம்.

படுக்கையில் வலது இடது பக்கம் அமுக்கப்படும்போது மூக்கடைப்பு, ஏற்பட்டு நித்திரை குழம்பும் நிலை ஏற்படும். மூக்குத்துவாரம் இரண்டும் ஏற்ற சுவாசக்காற்றை முறையாக இழுக்காது. சிலவேளை மூக்கின் ஒரு பாதையில் அடைப்பு ஏதும் இருக்கக் கூடும். அல்லது சரிந்து படுக்கும் போது மூக்கின் உள்ள திரவம் ஒருபக்கம் படிந்து விடும். மறுபடி சரிந்து படுக்க சமநிலைக்கு வந்து விடும். இப்படி படுக்கையில் சில மாற்றம் உண்டு.

மூக்கிற்கும், தொண்டைக்கும் தொடர்பு இருப்பதினால்தான் மூக்கில் விடுகின்ற மருந்து திரவம் அல்லது ஏதேனும் மருந்தின் குணம் தொண்டைப் பகுதியில் தெரியும். மூக்கு முறையாகச் சரியாக அமைந்திருந்தால் தான் தொண்டையில் இருந்து புறப்படும் ஒலி தெளிவாக இருக்கும்.

ஒருவகை ஒவ்வாமை (Allergy) காரணமாக வெளிக்காற்று மூக்கின் வழியால் சென்றவுடன் சளியும் தும்மலும் வருகின்றது. எனவே துப்பரவான, தூசு பறக்காத சுற்றாடல்




பொருந்திய இடம் எம்மைப் பாதுகாக்க இடமளிக்கும்.

மூக்கினால் மூச்சை விடாமல், வாயால் மூச்சைப் பெற அல்லது விட ஆரம்பித்தால் வாயில் துர்நாற்றம், பற்கள் நிலைமாறி முன்தள்ளல், உமிழ்நீர் வாயால் வடிதல், பேச்சில் உமிழ்நீர் சிந்தல் போன்றவை ஏற்படும். எனவே பெரும்பாலும் மூக்கினால் சுவாசிக்க முயற்சித்துக் கொள்ளுங்கள்.

சளி, அழற்சி, சைனஸ் போன்ற காரணத்தினால் மூக்கடைப்பு ஏற்படும்போது வாயின் மேலண்ணத்தில் பிளவு ஏற்பட்டு மூக்கால் பேசுவது போன்ற ஒலி மாற்றம் சிலருக்கு ஏற்படும். நிலைகண்டு சிகிச்சை பெற்றுக் கொள்ளுங்கள். எனவே மூக்கால் முறையாகச் சுவாசிக்க கஸ்டம் உள்ளோருக்கு சிலவழி முறைகள் உண்டு.

அதாவது ஒரு மூக்குத்துவாரத்தை அமர்த்திக் கொண்டு மற்ற மூக்குத்துவாரத்தினால் சுவாசக்காற்றை உள் இழுத்து அமர்த்திய கையை தளர்த்தி காற்றை வெளிவிடவேண்டும். இப்படி மாறிமாறிச் சில நிமிடங்களுக்கு செய்து வருவதினால் பயன் உண்டு.

அடுத்து மூக்கின் நுனியை தூக்கிப் பிடித்துக் கொண்டு மூச்சை உள் இழுக்க வேண்டும். அப்பொழுது உள் இழுத்த காற்று மூக்குப் பக்க காற்று அறைகளுக்குச் சென்று கண்களைச் சுற்றியுள்ள இடங்களுக்குப் பரவி வருவது புலனாகும்.

மூக்கால் சிலருக்கு இரத்தம் வரும் போது சிலர் பயப்படுவதுண்டு. இதற்குப் பல காரணங்கள் உண்டு. மூளையின் நரம்புப்பகுதி தாக்கப்பட்டாலும் வருவதுண்டு. சில நோய்களின் காரணமாகவும் முதல் அறிகுறியாகவும் தென்படும். எதற்கும் தற்பாதுகாப்பாக கீழ் கூறுவதைச் செய்து பார்க்கலாம். குளிர்ந்த நீரை மூக்கின் மேல் விடலாம். அல்லது நீரை நுனியில் நனைத்து மூக்கின் மேல் பகுதியில் வைக்கலாம். அல்லது மூக்கை இருகக்மும் அழுத்திப் பிடிக்கலாம். இப்படி செய்து பார்த்து குணம் கிடைக்காவிடில் தாமதியாமல் வைத்தியசாலைக்குச் சென்று வைத்தியர் மூலம் பரீட்சித்து காரணம் கண்டு சிகிச்சை பெற்றுக்கொள்வது மிக நன்று.

மேலும் ஒருவர் நீரிழிவு நோய் உள்ளவராயின் மூக்கின் உட்பகுதியில் ஏதேனும் புண் ஏற்பட்டு

வைத்திய கலாநிதி
கே.ரி. கோபால்
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 416.939.2013



தொடர்ச்சி 30ஆம் பக்கம்

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் - இலவச ஆலோசனை வழங்கப்படும்

**தீராத நோயினால் பீடிக்கப்பட்டுள்ளீர்களா?**



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் சர்மத்தின் வெளிப்புறத்தே ஏற்பட்டிருக்கும் மாறாத நாள்பட்ட புண்களுக்கும், சொறியினால் ஏற்பட்டிருக்கும் காயங்களுக்கும் விபத்தினால் ஏற்பட்ட அடிகாய நோவிற்கும் ஏற்ற அனுபவ ரீதியாக கையாண்ட எண்ணெயினால் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர தகுந்த அன்ன ஆகாரங்களினாலும் நோய்கள் நிவர்த்தி பெற வழியுண்டு.

இலவச ஆலோசனைகளுக்கு:416.939.2013

**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**
D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada)
Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician
LG.Ayurvedic Medical Services (SriLanka)

# ஒன்ராரியோ மாகாண வாகனமோட்டும் வீதி பரீட்சை நிலைய ஊழியர்களின் வேலை நிறுத்தம்?

## கனடிய தகவல் தொடர் 108

### *Drive Test Employee's Strike*

ஒன்ராரியோ மாகாணத்தின் வீதி பரீட்சை நிலையங்களை 'Serco Des Inc' என ஆங்கிலத்தில் குறிப்பிடப்படும் பிரித்தானியாவின் பல்தேசிய கம்பனி ஒன்று மாகாண அரசிடமிருந்து கடந்த 2003 ஆம் ஆண்டிலிருந்து பத்து வருடங்களுக்கு என $114 மில்லியன் டொலர் விலை ஒப்பந்தத்தில் பொறுப்பெடுத்து மாகாண போக்குவரத்து அமைச்சின் கண்காணிப்பில் நடாத்தி வருகின்றது. இத் தனியார் பல் தேசிய கம்பனி 2003 ஆம் ஆண்டு இவ் ஒப்பந்தத்தினை பொறுப்பு எடுப்பதற்கு முன்னர் மாகாண போக்குவரத்து அமைச்சு இச்சகல வீதி பரீட்சை நிலையங்களையும் நிர்வகித்து வந்தது.

இங்கு மாகாணம் முழுவதும் உள்ள மொத்தம் 56வீத பரீட்சை நிலையங்களிலும் (இதனைவிட ஒன்ராரியோ மாகாணத்தின் வட பகுதியில் தற்காலிகமாக கோடை காலத்தில் திறந்த பின்னர் பூட்டும் 38 நிலையங்கள் மேலதிகமாக உள்ளன) பணிபுரியும் சுமார் 550 ஊழியர்கள் யாவரும் "United Steel Workers - Local - 9511' என்னும் பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கத்தின் ஊடாக ஒன்று சேர்ந்து கடந்த ஓகஸ்ட் 21, 2009 வெள்ளிக்கிழமை மாலை நேரத்திலிருந்து திடீர் வேலை நிறுத்தத்தில் இறங்கியுள்ளனர்.

சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

வீதி பரீட்சை நிலையங்களை தனியார் பல் தேசிய கம்பனி ஒன்று ஒப்பந்தம் எடுத்த பின்பு முதல் முறை இறங்கியுள்ள வேலை நிறுத்தம் இதுவாகும். இதற்கு முன்னர் மாகாணத்தில் கொன்சேவற்றிக் கட்சி ஆட்சி நடாத்திய போது, மாகாண போக்குவரத்து அமைச்சின் கீழ் இவ்வீதிப்பரீட்சை நிலையங்கள் இயங்கிய போது கடைசியாக இவ் ஊழியர்கள் வேலை நிறுத்தம் நடாத்திய காலத்தில் சில மாதங்களாக இது தொடர்ந்திருந்தது. கடந்த பெப்ரவரி மாதத்தில் இருந்து இத்தொழிற் சங்கத்தினர், இம் மிக பெரிய பல் தேசிய கம்பனியிடம் வைத்த கோரிக்கைகள் கவனத்தில் எடுக்காமல் போக கடந்த சுமார் 3½ நாட்கள் நடந்த தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளின் தோல்வியினை தொடர்ந்து தங்களின் பின்வரும் கோரிக்கைகளை முன் வைத்து வேலை நிறுத்தத்தில் இறங்கியுள்ளனர்.

1. **சம்பள உயர்வு** (Salary Increases)
தற்போது இவ் ஊழியர்களுக்கு மணித்தியாலத்திற்கு $19-$23 டொலர் வரை வழங்கப்படுகின்றது. 2003ஆம் ஆண்டு மாகாண அரசின் கீழ் பணிபுரிந்த ஊழியர்கள், இத்தனியார் பல்தேசிய கம்பனிக்கு மாற்றப்பட்ட போது இவர்களின் சம்பளம் 10% வீதத்தினால் குறைக்கப்பட்டிருந்தது.

2. **மேலதிக நேர ஊதியம்** (Over Time Payment)
காலை 8 மணியிலிருந்து 5 மணி வரை தொழில் செய்யும் பரீட்சையாளர் ஒவ்வொருவரும் ஒரு நாளுக்கு குறைந்தது பதினைந்து பேருக்கு வீதி பரீட்சை நடாத்தப்படல் வேண்டும் என்பது வரையறையாகும்.

இங்கு மேலதிகமாக பணி புரிபவர்களுக்கு மேலதிக நேரம் ஊதியம் வழமையாக ஏனைய தொழில் வழங்கும் நிறுவனங்கள் வழங்குவது போல வழங்க வேண்டும் என்பது இத் தொழிற் சங்கத்தினரின் இன்னொரு கோரிக்கையாகும்.

3. **சம்பளத்துடன் சேர்ந்த உடல் நோய் விடுமுறை** (Sick Days Off)
ஒவ்வொரு வருடமும் சம்பளத்துடன் சேர்ந்த உடல் நோய் விடுமுறை என்பது சில குறிப்பிட்ட காலங்களுக்கு வழங்குதல் வேண்டும் என்பது இன்னொரு கோரிக்கையாகும்.

4. **வேலையின் பாதுகாப்பு** (Job Security)
இப்பரீட்சை நிலைய பரீட்சையாளர்களை கோடை காலத்தில் வேலைக்கு அமர்த்தி பின்னர் குளிர் காலத்தில் அவர்களின் வேலை நேர மணித்தியாலங்களை குறைப்பது அல்லது வேலையில் இருந்த சில மாதங்களில் நிறுத்துவது போன்ற தொழில் பாதுகாப்பின்மை மாற வேண்டும் என்பது அவர்களின் கோரிக்கைளில் ஒன்றாகும்.

மேற்குறிப்பிட்ட கோரிக்கைகளை வைத்து தொடர்ந்து தங்கள் பேச்சுவார்த்தைகள் நிறைவேறாத காரணத்தினால் முடிவு காலம் நிர்ணயிக்கப்படாத வேலை நிறுத்தத்தில் இறங்கியுள்ளதாக இத் தாழிற் சங்க தலைவர் திரு. ஜிம் யங் (Mr. Jim.Young) தெரிவித்துள்ளார். பொதுவாக கனடாவில் உள்ள சகல தொழிற்சங்கங்களும் வேலை நிறுத்தம் ஒன்றினை ஆரம்பிக்கும் போது முன் கூட்டியே திகதி நிர்ணயம் செய்து, எல்லோருக்கும் பகிரங்கமாக அறிவித்த பின்பே வேலை நிறுத்தத்தினை ஆரம்பிப்பது வழமையாகும். ஆனால் இவர்களின் வேலை நிறுத்தத்தில் நடந்த ஆச்சரியம் யாதெனில், கடந்த ஓகஸ்ட் 21, 2009 வெள்ளிகிழமை மதிய நேரத்தின் பின்பு, ஒவ்வொரு பரீட்சை நிலையத்திலும் ஏராளமான பொதுமக்களை நோக்கிய சேவை நடந்து கொண்டிருந்த நேரம், திடீர் என தங்களின் தொழிற் சங்க தலைமையகத்திலிருந்து வேலை நிறுத்த உத்தரவு வந்ததும் சகல ஊழியர்களும் அலுவலகத்தினை விட்டு வெளியே வந்த விடயம் என்பது ஏனைய தொழிற் சங்கங்களின் வேலை நிறுத்த நிகழ்வில் இருந்து ஒரு மாறுபட்ட நிகழ்வாகும்.

எழுத்து பரீட்சைக்கு தோற்றியவர் அதனை செய்து கொண்டிருந்த நேரம், வீதி பரீட்சைக்கு தோற்றியவர் தனது வரவினை மனு செய்து விட்டு வாகனத்தினுள் காத்து நின்ற நேரம், வேறு பல்வேறு சேவைகளுக்காக காத்திருந்த மக்கள், அவர்களுடன் சேர்ந்து தமது வீதிப்பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் அதனை வெற்றிக்களிப்பில் பதிவுசெய்ய வரிசையில் நின்ற நேரம் திடீரென தங்கள் தொழிற்சங்கத்தின் தலைமையில் இருந்து உத்தரவு வந்ததும் மாகாணப் பரீட்சை நிலைய ஊழியர்கள் அலுவலகத்தினை விட்டு வெளியே வந்தது ஒரு முற்றிலும் மாறுபட்ட நிகழ்வாகும்.

'சேர்கோ ரைவ் ரெஸ்ற்' (Serco Drive Test) நிர்வாக இயக்குனர் திரு.போல் டால் கிளேய்ஸ் (Mr. Payl Dalglaish) தங்கள் பக்க சார்பு நியாயத்தில் தெரிவிக்கும் போது, 'குளிர் காலத்தில் (winter period) ஏராளமான பொதுமக்கள் வீதி பரீட்சைகது தோற்றுவதோ அல்லது இந்நிலையத்தினை அணுகுவதோ குறைவாக இருப்பதால் 40% வீதமான வருமானத்தினை தங்கள் கம்பனி இழப்பதால் மாறுபட்ட மணித்தியால நேரங்களில் தொழில் புரிவோரே தங்களுக்கு தேவை என குறிப்பிட்டிருந்தார். அதாவது கோடை (Summer Period) காலத்தில் அதிக மணித்தியாலங்களும், குளிர் காலங்களில் குறைந்த மணித்தியாலங்க ளும் தொழில் புரியும் ஊழியர்கள் மட்டும் இருந்தாலேயே தங்களினால் இத்தொழிலை நடாத்த முடியும்' என தெரிவித்திருந்தார்.

**இவ்வீதி பரீட்சை நிலைய ஊழியர்கள் வேலை நிறுத்தம் என்பது மக்களை எப்படி பாதிக்கின்றது?**

1. எழுத்து பரீட்சைக்கு தோற்ற விரும்புவர்கள் அதாவது வாகனம் செலுத்த கற்றுகொள்ளும் பரீட்சைகளுக்கு தோற்றி இவ் அனுமதி பத்திரத்தினை பெற முடியாத நிலைமை.
2. வீதி பரீட்சைகளுக்கு தோற்ற முடியாத நிலைமை.
3. அனுமதிப்பத்திரம் காலாவதியாகி கடைசிக் கட்டத்தில் உள்ளவர்கள் வீதிப் பரீட்சைக்கு தோற்றியே இதனை புதுப்பிக்க வேண்டும் என்ற நிலையில் உள்ளவர்களுக்கு அதனை நிறைவேற்ற முடியாத நிலைமை.
4. வேறு நாடுகளில் சில நாட்டு சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்கள் எதுவித வீதி பரீட்சையும் இல்லாது இங்கு ஒன்ராரியோ மாகாணத்திற்கு மாற்ற கூடிய வசதி இருந்தும் அதனை மாற்றி கொள்ள முடியாத நிலைமை.
5. வாகனம் ஓட்டும் தவறுகள் காரணமாக சாரதி அனுமதிப்பத்திரம் சில தண்டனைக்காலம் எனக் குறிப்பிடப்பட்ட சில காலத்துக்கு இழந்து இதனை புதுப்பித்து மீள பெற்று கொள்ள வேண்டிய நிலையில் உள்ளவர்கள் அதனை முன் எடுக்க முடியாத நிலைமை.
6. ஏதாவது மருத்துவ அறிக்கைகளை இவ் அலுவலகத்தினூடாக போக்குவரத்து அமைச்சுக்கு சமர்ப்பிக்க வேண்டியவர்கள் இதனை சமர்ப்பிக்க முடியாத நிலைமை.
7. சாரதி பயிற்றுனர்களாக வர விரும்புவர்கள் எழுத்து பரீட்சை, வீதிப் பரீட்சைக்கு ஒருமுறை தோன்ற வேண்டியுள்ளதால் அவர்களின் விருப்பத்தினை முன் எடுக்க முடியாத நிலைமை.

**இவ்வேலை நிறுத்தத்தினால் பாதிக்கப்படும் பொது மக்களுக்கு ஒன்ராரியோ மாகாண அரசு எவ்வாறு கை கொடுக்கின்றது.?**

பின்வரும் இரு சாரதி அனுமதி பத்திரங்களை வைத்திருப்பவர்கள்

இவ் அனுமதி பத்திரங்கள் காலாவதியாகும் போது வீதி பரீட்சைக்கு தோற்றி அதனை புதுப்பித்து கொள்ளல் வேண்டும்.

1. G(1) சாரதி அனுமதி பத்திரம் (இன்னொருவர் உதவியுடன் வாகனம் செலுத்த கற்று கொள்ளும் பத்திரம்)
2. G(2) சாரதி அனுமதி பத்திரம் (சுயமாக குறிப்பிட்ட ஒரு கால எல்லை வரை வாகனம் செலுத்தும் சலுகை வழங்கப்பட்ட பத்திரம் அதன் பின்னர் மேலதிக வீதி பரீட்சைக்கு தோற்றி இப்பத்திரம் தரம் உயர்த்தப்படல் வேண்டும். அல்லது அதே வீதி பரீட்சைக்கு தோற்றி மீண்டும் ஒரு 5 வருடங்களுக்குப் புதுப்பிக்க வேண்டும்.



இவ் இரு பத்திரங்களும் காலாவதியாகும் காலத்திற்கு முன்னர் வீதி பரீட்சைகளுக்கு தோற்றி அதனை புதுப்பித்து கொள்ளல் வேண்டும். இல்லையேல் காலாவதியாகும் திகதிக்கு பின்னர் சுயமாக வாகனம் செலுத்துபவர் (G (2) License Holder) வாகனம் செலுத்த முடியாது. வாகனம் ஓட்டப் பழகுபவர் (G1 license holder)

தொடர்ச்சி 22ஆம் பக்கம்

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# தைரொயிட்டு சுரப்பி நோய்கள்

சென்ற இதழ் தொடர்ச்சி

**14.** Hypo - Thyroids **என்ற குறைந்தளவு தைரொக்சின் சுரப்புடைய நோய் பற்றிக் கூறமுடியுமா?**
தைரொயிட்டுச் சுரப்பி சரிவர இயங்காது குறைந்த அளவு ஹோமோனைச் சுரப்பதால் உடலின் பல தொழிற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன.

**15. இதற்குரிய காரணங்கள் என்ன?**
• சுரப்பியில் ஏற்படும் பிரச்சினை அல்லது மந்தநிலை.
• சுரப்பியின் தொழிற்பாட்டைப் பாதிக்கும் நோய்கள்/மருந்துகள்.
• கேடயப் போலிச்சுரப்பியில் இருந்து தைரொயிட்டுச் சுரப்பியைத் தூண்டும் TSH இன் அளவு குறைந்தளவில் சுரக்கப்படுதல்.

**16. குணங்குறிகள் என்ன?**
• குளிர் தாங்க முடியாமை, உடல்வெப்பம் குறைதல்.
• உடலில் அசதி.
• உடல்நிறை அதிகரித்தல்.
• காய்ந்த தோல்.
• எதிலும் ஆறுதலான போக்கு.
• மாதவிடாயில் ஒழுங்கீனம்.

**17. இதற்குரிய சிகிச்சை எப்படி அமையும்?**
தைரொக்சின் சுரப்பு குறைவாக இருப்பதால் செயற்கை முறையில் வில்லைகள் கொடுத்தல் வேண்டும். Levo Thyroxine ($T_4$) என்ற வில்லையை உட்கொள்ள ஆரம்பித்து 2 தொட்டு 4 கிழமைகளில் பல முன்னேற்றங்களைக் காணலாம். சில சமயங்களில் ($T_4$) உடன் ($T_3$) வில்லையும் சேர்த்து கொடுக்கப்படும். முதியவர்கள், கர்ப்பிணிகள், பலவீனமான இருதயத்தை உடையவர்கள் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்படுபவர்கள்பால் அதிக கவனம் செலுத்தப்படும்.

**18. குழந்தைகளுக்கு இந்நோய் ஏற்படுமா?**
குழந்தைகளுக்கு தைரொக்சின் சுரப்புக்குறைவு ஏற்பட்டால் அவர்களது உடல் வளர்ச்சி, மூளைவளர்ச்சி என்பன பாதிக்கப்படலாம். இதனால் குழந்தைகள் பிறந்து ஒரு வருட காலத்திற்குள் சுரப்பின் அளவுகள் பரிசோதித்து அறிதல் நன்மை பயக்கும். இதுபோல் 50 வயதிற்கு மேற்பட்டவர்களும் ஒரு தடவையாவது தைரொக்சின் அளவுகளைப் பரிசோதித்துப் பார்ப்பது நன்று. சில இலகுவான பரிசோதனைகள் மூலம் வைத்தியர்கள் இந்நோயை அறிந்து கொள்வர்.

**19. இந்நோய்பற்றிக் கூறும் பொழுது அயடீன் உப்பு பற்றிக் கூறுகிறார்கள். அது ஏன்?**
தைரொக்சின் ஹோமோன் உற்பத்தி செய்யப்படுவதற்கு அயடீன் உப்பு, தைரோகுளோ பியூலின் புரதம் போன்ற பதார்த்தங்கள் தேவைப்படுகின்றன. அயடீனின் பற்றாக்குறையினால் தைரொக்சின் ஹோமோனின் உற்பத்தி பாதிப்படையும். அயடீன் சேர்த்த உப்பு அல்லது கடல் உணவு வகைகளில் அயடீன் சத்து கூடுதலாக உண்டு. அவற்றை உணவில் சேர்க்கவும். கோவா போன்ற சில உணவு வகைகள் அயடீனின் பாவனையைக் குறைத்து விடுவதால் வைத்தியர்கள் சில உணவுகளைத் தவிர்க்கும் படி கூறுவார்கள்.

**நலந்தானா! - 6**

***Dr. K. Senthilnathan***
Health Educator
(Certified First Aid and CPR Instructor)
***To learn and receive certificates on First aid and CPR courses. Pl. call 416-502-9252***

**20. தைரொயிட்டுக்கழலைகள்** (Thyroid Nodule) **என்பன யாவை?**
சிறிய கழலைகள் தைரொயிட்டுத் தசைகளின் வளர்ச்சியாகவோ அல்லது திரவம் நிரம்பிய கழலையாகவோ இருக்கலாம். அநேகமான கழலைகள், தீங்கற்றவையாக இருப்பினும் புற்று நோய்க்குரியதா என்று சோதித்து அறிதல் வேண்டும். சில பெரிய கட்டிகள் சுவாசத்தடையை ஏற்படுத்தலாம். அவை சத்திர சிகிச்சை மூலம் அகற்றப்படுதல் வேண்டும்.

**21. சோதனையில் என்ன செய்வார்கள்?**
• கட்டியைத் தொட்டு உணர்தல். அதன் கடுமை, அகலம், நீளம் என்பவற்றுடன் தாடையின் அடியில் நிணநீர்க்கட்டிகள் (நெறிகள்) வீங்கியுள்ளனவா என்றும் பரிசோதிப்பர்.

• மெல்லிய ஊசி மூலம் அகற்றப்படும் திசுப்பரிசோதனை.
• Ultrasound
• Thyroid Scan
• குருதிச் சோதனை - ($T_4$, $T_3$, TSH, Calcitonin AntiBodies)

# நீரிழிவு நீங்க யோகாசன சிகிச்சை

## பகுதி - 3


## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

முன்பு வெளியாகிய இரண்டு இதழ்களிலும் நீரிழிவு நோயின் தன்மைகள், அதன் பிரிவுகள், காரணங்கள், அறிகுறிகள் என்பன பற்றித் தெரிந்து கொண்டோம். இந்த கட்டுரையில் அதற்குப் பொருத்தமான யோகாசன சிகிச்சை முறைகளைப் பற்றிப் பார்ப்போம்.

**நீரிழிவு நோய்பற்றிய முக்கிய குறிப்பு**

நீரிழிவு நோய் இருந்த போதிலும் ஒரு குறிப்பிட்ட யோகாசனங்களைத் தினமும் 10 முதல் 15 நிமிடங்கள் வரை பழகி வந்தால் நீரிழிவு நோயாளியும் பூரண வாழ்வு வாழலாம். நீண்ட ஆயுள் அடையலாம். நீரிழிவு நோய் இல்லாது வாழ்பவர்களைக் காட்டிலும் நீரிழிவு நோயோடு பலர் அதிக காலம் வாழ்ந்து கொண்டிருக்கின்றனரென்று மிகவும் ஆராய்ந்து மேல்நாட்டு நீரிழிவு நோய் நிபுணர்கள் கூறுகின்றனர். பல துறைகளில் பெரும் சாதனைகள் புரிந்த பலர் இந்த நீரிழிவுடன் பல காலம் வாழ்ந்துள்ளனர். ஆனால் அவர்கள் தினமும் யோகாசனப் பயிற்சி செய்து கொண்டிருந்தனர். யோகாசனத்தின் மூலம் இன்சுலின் உற்பத்தி செய்யும் கணையத்தின் வேலைத்திறன் அதிகமாகிறது. நான் பெற்ற யோகாசனத்தின் நன்மைகளை எல்லோரும் பெற்று நோய் இல்லாது வாழ வேண்டும் என்பது எனது அவா, குறிக்கோள்.

**சிகிச்சைத் திட்டம் முதல் இரண்டு வாரம்**



ஆசனத்தின் பெயர் ஒருமுறைசெய்யவேண்டிய நேரம் எத்தனைமுறை செய்ய வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1. பவனமுத்தாசனம் | 10 வினாடி | 5 முறை |
| 2. மூச்சுப்பயிற்சி நாடிசுத்தி | 21 வினாடி | 12 முறை |
| 3. மகாமுத்ரா | 2 நிமிடம் | 3 முறை |
| 4. சலபாசனம் | 10 வினாடி | 10 முறை |
| 5. தனூராசனம் | 15 வினாடி | 5 முறை |
| 6. நவாசனம் | 30 வினாடி | 2 முறை |
| 7. சாந்தி ஆசனம் | 5 நிமிடம் | 1 முறை |

**சிகிச்சைத் திட்டம் 3, 4, 5, 6 வாரங்கள்**

ஆசனத்தின் பெயர் ஒருமுறை செய்ய வேண்டிய நேரம் எத்தனைமுறை செய்ய வேண்டும்

| | | |
|---|---|---|
| 1. பவனமுத்தாசனம் 6 நிலைகள் | 10 வினாடி | 3 முறை |
| 2. மூச்சுப்பயிற்சி கபாலபதி | 30 வினாடி | 3 முறை |
| நாடிசுத்தி | 21 வினாடி | 7 முறை |
| 3. மகாமுத்ரா | 2 நிமிடம் | 3 முறை |
| 4. சலபாசனம் | 10 வினாடி | 5 முறை |
| 5. பட்சிமொத்தாசனம் | 10 வினாடி | 5 முறை |
| 6. சர்வாங்காசனம் | 10 நிமிடம் | 1 முறை |
| 7. ஹலாசனம் | 10 வினாடி | 3 முறை |
| 8. பாதஹஸ்தாசனம் | 10 வினாடி | 3 முறை |
| 9. நவாசனம் | 2 நிமிடம் | 3 முறை |
| 10. சாந்தி ஆசனம் | 5 நிமிடம் | 1 முறை |

நோயாளிகள் சிகிச்சைத் திட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள ஆசனங்களைச் செய்து நோய் நீங்கப்பெற்றவுடன் பயிற்சிகளை நிறுத்தாமல் தொடர்ந்தும் ஒரு குறிப்பிட்ட ஆசனங்களையாவது பழகி வரும்போது நமது உடலினுள் இயற்கையாக அமைந்துள்ள நோய் எதிர்ப்பு சக்தி வலிமை பெறுவதோடு ஆரோக்கியமும் உடல் உறுதியும் நாளடைவில் மேலோங்கும்.

வருடக்கணக்கில் நீரிழிவு நோய் உள்ளவர்களின் உடலில் உள்ள ரத்தக் குழாய்கள் தடித்துவிடுகிறது. இதனால் குறிப்பாக கால்கள் மரத்துப் போகும். இதனை சர்வாங்காசனம் மூலம் சரி செய்து விடலாம்.

நீரிழிவு நோயாளிகள் பயப்படத் தேவையில்லை. யோகாசனங்களுடன் தியானப் பயிற்சியும் (Meditation) மேற்கொண்டால் பூரண பயன்பெறுவது உறுதி.

மேற்குறிப்பிட்ட பயிற்சிகளை முதலில் கண்டிப்பாக ஒரு யோகாசன நிபுணரின் உதவியுடன் தான் பழக வேண்டும்.



**ஆரோக்கிய வாழ்வு**
**N. செல்வசோதி**
Diploma in Yoga Therapy (India)
***416.289.2033 after 7:00pm***


**YOGA - MEDITATION CLASSLESS**

**ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்**





மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



தொடர்புகளுக்கு: ***Scarborough - Markham*** - செல்வ சோதி - ***416.289.2033***

**ELECTRICAL WORKS**



***FRIDGE, WASHER, DRYER*** போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: **ஈசன்** - ***416-286-2880***

# உண்மையான நட்பு

## ஓடும் நீர் உறைவதில்லை 87

நாம் ஒவ்வொருவரும் உறவு அல்லது நட்பு என்ற தொடர்புடன் நமது வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருக்கின்றோம். இங்கே ஒன்று இருப்பின் மற்றது இருப்பதில்லை. அதாவது ஒருவர் உறவினராக இருப்பின் அவர் நண்பராக இருப்பதில்லை என்பதை விட இருக்க முடியாது என்பது தான் பொருத்தம். அதே போன்று ஒருவர் நண்பராக இருப்பின் அவர் உறவினராக இருக்க முடியாது. ஆனால் நண்பர் உறவினராகலாம். ஒருமுறை உறவினர் ஆனவர் பின்னர் நண்பர் என்ற நிலைக்கும் செல்லமுடியாது. எனவே நட்பும் உறவும் வேறு வேறு இணைப்புக்களாகும்.

நமது வாழ்க்கையானது குடும்பம் என்ற இணைப்புடன் ஆரம்பமாகின்றது. நாம் பிறக்கும் போதே குடும்ப இணைப்புடன் பிறக்கின்றோம். இந்தக் குடும்ப இணைப்பில் நமது ஆரம்பம் உறவுடன் தொடர்புபடுகின்றது. அப்பா, அம்மா, குழந்தை என்ற உறவுகளின் இணைப்பாக ஆரம்பமாகின்றது. ஆனால் இந்த உறவுமுறைக்கு அடிப்படையாக அமைகின்ற கணவனும், மனைவியும் நட்பின் அடிப்படையில் இணைந்தவர்கள், உறவின் அடிப்படையில் அல்ல. இப்போது ஒரு முக்கியமான விடயத்தை நாம் தெளிவுபடுத்திக் கொள்கிறோம். உறவுடன் ஆரம்பிக்கும் எமது வாழ்க்கை மீண்டும் ஒரு குடும்பமாகி அமையவும் குழந்தை என்ற உறவுகளை உருவாக்குவதற்கும் நட்பு அடித்தளமாகி விடுகின்றது. இதனால் தான் உறவும் நட்பும் வேறுவேறாயினும் ஒன்று மற்றையதற்கு அடித்தளமாக அமைகின்றது. எனவே குடும்ப அமைப்பில் நட்பும் உறவும் சரிசமமான நிலையில் கையாளப்படுகின்றன. ஆனால் நட்பின் ஆழத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவும் உண்மையான நட்பு என்றால் என்ன என்பதை நாம் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காகவும் குடும்பத்திற்கு அப்பாற்பட்ட நட்பு எது என்பதை ஆராய்வதே எனது நோக்கமாகும்.

நடைமுறையில் உறவினர்கள் அல்லாதவர்களை மிகவும் சாதாரணமாக நண்பர்கள் என்று கூறுகின்றோம். இவர் நண்பர் என அறிமுகப்படுத்துகின்றோம். சிலரை அறிமுகமாகியவுடன் நண்பர் என்ற இணைப்புக்குள் கொண்டுவந்து விடுகிறோம். நட்பு அவ்வளவு இலகுவாகக் கருதப்படக் கூடியதா என்பது கூட நமக்குப் புரிவதில்லை. பல வாழ்வியல் அனுபவங்களின் ஊடாகச் சில உண்மைகளை நாம் உணர்ந்து கொள்கிறோம். ஆனால் அதன் மூலமான செயற்பாடுகளை மாற்றத் தவறிவிடுகின்றோம் அல்லது அனுபவரீதியான உணர்வுகளில் இருந்து புரிந்து கொள்ள வேண்டியவற்றைத் தவற விடுகின்றோம். இதனால் தான் மீண்டும் மீண்டும் நட்பு, பகை, துரோகம் என்ற சக்கரத்துக்குள் அகப்பட்டு அல்லற்படுகின்றோம்.

> அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் வாரம் தோறும் திங்கட்கிழமைகளில் இரவு 9.30 மணிக்கு கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.
>
> *நன்றியுடன் KG Master*

நட்பை நாம் அறிந்து கொள்வதற்கு பகைபற்றிய தெளிவும் அவசியமாகின்றது. இனிப்பு எது என்பதை உணர உறைப்பு உதவுவது போல், பகை என்பது ஒரு பொதுவான காரணி. உறவுக்கும் எதிர் பகைதான் நட்புக்கும் எதிர் பகை தான். இந்தப் பகையை அடிப்படையாக வைத்துப் பார்க்கும் போது உறவு நட்பு என்பதற்கு மாறான அனைத்தும் பகையாகி விடுகின்றது. துரோகம் பகையை உச்சநிலைப்படுத்தும் ஒன்றாகும்.

இப்போது நட்பு என்பது என்ன என்பதை புரிந்து கொள்ளல் அவசியமாகின்றது. உண்மையான நட்பு எது? நாம் நடைமுறையில் பயன்படுத்தும் 'நண்பன்' என்பது எந்த ஆழத்தைக் கொண்டிருக்கின்றது? நட்பின் வாழ்காலம் எவ்வளவு? நட்புக்கு முறிவு உண்டா? நட்பு பகையாக மாறக் கூடாதா? நட்புக்குள் துரோகம் இடம் பெறுமா? நட்பின் அடித்தளம் எது? இவ்வாறான எல்லையற்ற வினாக்களுக்கு இலகுவான விளக்கத்தைக் கொடுப்பதே இக் கட்டுரையின் எதிர்பார்ப்பாகும்.

**KG Master-*kgmaster@rogers.com***

உண்மையில் எம்மில் பெரும்பாலனவர்கள் வெண்ணெய்யைக் கையில் வைத்துக் கொண்டு நெய்க்கு அலைந்து கொண்டிருக்கின்றோம். உண்மையான நட்பின் அடித்தளம் உருவாக்கப்பட்டிருந்தும் அதை நாம் அறியாமையால் புறக்கணித்து விடுகிறோம். அல்லது புரிந்து கொள்ள மறுக்கின்றோம். வாழ்க்கையின் ஏதாவது ஒரு புள்ளியில் பலமான வேதனையின் வெளிப்பாடாக நெய் வெண்ணெய்யில் தானே இருந்திருக்கிறது. நாம் தான் அதைக் கடையவில்லை என்பதை உணர்ந்து கொள்கிறோம். இந்த உணர்வு நமது வாழ்க்கையின் ஆரம்ப காலங்களில் ஏற்படுமாயின் நாம் அதிஷ்டசாலி. மாறாக வாழ்வின் பிற்பகுதியில் ஏற்படுமாயின் பயனற்ற அனுபவசாலி.

நட்பு பற்றிய மிகச் சிறந்த விடயம் என்னவெனில் அதன் ஆழத்தை நாம் அளவிட முடியாது என்பது தான். உறவுக்கு அளவீடு உண்டு. உறவின் ஒவ்வொரு நிலைக்கும் அதற்கென்று அளவும் மதிப்பும் உண்டு. அப்பா, அம்மா, அண்ணன், தம்பி, அக்கா, தங்கை, தாத்தா, பாட்டி, பூட்டன், பூட்டி என்பதற்கெல்லாம் அளவும் அது சார்ந்த மதிப்பும் உண்டு. ஆனால் நட்பிற்கு ஆழம் உண்டு. ஆனால் அதனை அளவிடமுடியாது.

நட்பு பற்றிய இன்னுமொரு சிறப்பு என்னவெனில் அதன் வாழ்காலம் என்பது நட்புக்குரியவர்களின் ஆயுட்காலம் என்பது தான். நட்புக்குரியவர்களில் ஒருவர் இழக்கப்பட்டதும் அந்த நட்பின் வாழ்காலமும் முடிந்து விடுகின்றது. ஆனால் உறவானது உயிர் வாழ்தலுக்கும் அப்பாலும் தொடர்ந்து செல்கின்றது. இந்த உலகத்தைவிட்டுச் சென்ற உறவினர்கள் அனைவரும் உருவத்தால் மறைந்தாலும் உறவால் நீடிக்கின்றார்கள்.ஆனால் நட்பு அவ்வாறு நீடிப்பதில்லை. ஆச்சரியமாக இருக்கிறதா?

நட்பு என்பதற்கு நாம் கொடுக்கும் விளக்கம் அல்லது அது பற்றிய நமது புரிந்துணர்வு மீளாய்வுக்குட்படுத்தப்படுவது அவசியமாகும். ஏனெனில் நட்பு ஒன்றின் முடிவு என்பது அந்த நட்புக்குரியவர்களில் ஒருவரது இழப்பால் மட்டுமே ஏற்படுகின்றது என்ற உண்மையை நாம் அறிந்து கொண்டால் உண்மையான நண்பன் யார் என்பதையும் அந்த நட்பின் எதிர்பார்ப்பு என்ன என்பதையும் நாம் இனங்கண்டு கொள்ளலாம். அதாவது நட்புக்குப் பகை கிடையாது. துரோகம் கிடையாது. விரோதம் கிடையாது. வெறுப்பு கிடையாது. விரக்தி கிடையாது. அப்படியானவை இவற்றுக்கு இடமளிக்காத நட்பு என்பது என்ன என்ற கேள்வியும் இந்த இடத்தில் உங்கள் உள்ளத்தில் எழுந்தேயாக வேண்டும்.

எத்தனை தடவைகள் எத்தனை பேரை நாம் நண்பர்களாக எதிர்பார்த்து 'இலவு காத்த கிளியாக' ஏமாற்றம் அடைந்துள்ளோம். எத்தனைபேரை நாமும் இலவு காத்த கிளியாக்கியிருக்கின்றோம். எத்தனை பேர் பத்துப்பதினைந்து இருபது வருடங்களாக நண்பர்களாக இருந்தவர்கள் திடீரென, பகைவர்களாகவும், விரோதிகளாகவும், துரோகிகளாகவும் மாறியிருக்கிறார்கள். இவர்கள் உண்மையில் நண்பர்களாக இருந்தவர்கள் அல்ல. நட்பு பற்றிய நமது தவறான கணிப்பீட்டால் இவர்களுக்கு நாம் நமது தவறான கணிப்பீட்டால் இவர்களுக்கு நாம் கொடுத்த விலை மதிப்பற்ற பெயர்தான் நண்பன். உண்மையில் தவறு முற்றுமுழுதாக எமது பக்கம் தான். ஏனெனில் உண்மையான நட்பு ஒருபோதும் பகையாகவோ, விரோதமாகவோ அல்லது துரோகமாகவோ மாறுவதில்லை. மறந்து விடாதீர்கள். அப்படியானால் இவர்கள் யார்? அதாவது இவர்கள் யாராக இருந்தார்கள்? பொருத்தமான இடத்தில் பொருத்தமான கேள்வி இதுதான்.

நமது வாழ்வியல் நகர்வானது மற்றவர்களது இணைப்புடனேயே நகர்த்தப்படுகின்றது. இந்த இணைப்பானது உறவுடன் ஆரம்பித்து உறவுக்கும் அப்பால் விரிவடைகின்றது. உறவினர்களின் எண்ணிக்கை வரையறுக்கப்படுவால் உறவுக்கு அப்பால் அளவு கடந்த இணைப்புக்கள் இடம் பெறுகின்றன. இந்த இணைப்புக்களுக்குள் வருபவர்கள் அனைவரையும் நாம் நட்புக்குட்படுத்தி நண்பர்கள் என்ற அந்தஸ்தைக் கொடுத்துவிடுகின்றோம். இவர்கள் யார்?

உறவுக்கு அப்பால் எம்முடன் இணைப்பவர்கள் நான்கு வகைப்படுகிறார்கள். அன்பர்கள், ஆதரவாளர்கள், பிரியமானவர்கள், நண்பர்கள் என்பவர்களே அவர்கள். ஆனால் நாம் இவர்கள் அனைவருக்கும் நண்பர்கள் என்ற நிலையைக் கொடுத்துவிடுகின்றோம். இப்போது இவர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாகப் பார்ப்போம்.

முதலில் அன்பர்கள் என்பவர்கள் எம்மீது அன்பு செலுத்துபவர்கள். ஒருவகையான உள்ளத்து உணர்வால் ஒரு இணைப்பை உருவாக்கிக் கொள்பவர்கள். இவர்கள் தங்களது அன்புக்குப் பங்கம் ஏற்படாமல் மிகவும் மெதுமையாக இணைப்பை நகர்த்துபவர்கள. இந்த அன்பில் இன்பம் காணும் இவர்கள் சிலவேளைகளில் சொல்ல வேண்டிய திருத்த வேண்டிய என இருக்கு சில விடயங்களை மறைத்து விடுவார்கள். காரணமாக தனது அன்புக்கு அது தடையாக அமைந்து விடும் என்ற அச்சமே. இவர்கள் உள்ளத்தால் நல்லவர்கள். ஆனால் மாற்றத்துக்கான உதவியில் இருந்து பின்வாங்கிக் கொள்வார்கள். நண்பர்கள் அல்ல.

ஆதரவானவர்கள் இரண்டு வகைப்படுவர். முற்றுமுழுதாக நமது கருத்துக்களை, செயற்பாடுகளை ஏற்றுக் கொள்பவர்களையும் நடைமுறைப்படுத்துபவர்களாகவும் இருப்பவர்கள். தங்களது நலனைவிட எமது நலனில் எமது வெற்றியில் முழுமையான உழைப்பவர்கள் ஒருவகையினர். சிறிதளவு சுய நலனும் பெரிதளவு கடமை உணர்வும் கொண்டு ஆதரவளிப்பவர்கள் மறுவகையினர். இவர்கள் ஒத்துழைப்புத் தருவதை முதன்மைப்படுத்துபவர்கள் நண்பர்கள் அல்ல.

மூன்றாவது வகையினர் பிரியமானவர்கள். எம்மீது ஏதோ ஒருவகையான கவர்ச்சியால் தம்மை இணைத்துக் கொண்டவர்கள். எப்போதும் எமது சிறந்த இயல்புகளை முன்னிலைப்படுத்தியவர்கள். நம்முடன் இணைப்பை வைத்திருப்பதால் பெருமைப்படுவர்கள், நம்மீது திடமான நம்பிக்கையை வைத்திருப்பவர்கள். அதனால் எமது கருத்துக்களுக்கு அதிகமுக்கியத்துவம் கொடுக்கும் மனப்பாங்கு உடையவர்கள். மிகவும் நல்லவர்கள். நண்பர்கள் அல்ல.

நண்பர்கள் யார்? நட்பை அடிப்படையாக வைத்து இணைப்பவர்கள். நட்பு என்றால் என்ன? கொள்ளலும் புரிதலும் என்ற இரண்டினதும் அடிப்படைகளைத் தளமாகக் கொண்டு உயிரிழப்பு ஒன்றைத்தவிர வேறு எதுவும் அதன் எல்லையைத் தீர்மானிக்க முடியாத இணைப்புத்தான் நட்பு. நம் ஒவ்வொருவருக்கும் நட்பின் உயர்வையும் அதன் ஆழத்தையும் அனுபவரீதியாகப் புரிந்து கொள்வதற்குத் தரப்படும் அதி முக்கியமான வாய்ப்பு கணவன் - மனைவி எனும் பந்தமாகும். ஏனெனில் ஒருவர் மற்றவருக்காவும் ஒருவரை ஒருவர் தாங்கிக் கொள்ளவும் தூய்மையான புரிந்துணர்வுடன் வாழ்க்கையை நகர்த்துவதன் மூலம் நட்பின் பலத்தை மேலும் மேலும் உறுதியாக்குவது மட்டுமல்ல உயிர்வாழ்காலம் முழுவதும் நீடித்து நிற்பதற்காக அமைவதும் இந்த நட்பின் சிறப்பம்சமாகும்.

### ஆம் வாசகர்களே!

உண்மையான நட்பு என்பது கொள்ளல் (Hold) புரிதல் (Understand) எனும் இரண்டினதும் அடித்தளமாக அமைவது தான். நட்புக்குரியவர்களில் ஒருவர் எந்தவொரு காரணத்தாலும் தாழ்ந்த போக விடாமல் அவரைத் தாங்கி உயர்நிலைக்குக் கொண்டுவருவதும் அவரது செயற்பாடுகளைப் புரிந்து கொள்ளக்கூடிய அதாவது புரிந்துணர்வுடன் கூடிய இதயபூர்வமான இணைப்பு முறையை பேணுவதும்தான் நட்பின் அடிப்படையாகும். அதாவது 'Hand to hold and heart to understand' என்பதே நட்பின் அடிப்படையும் எதிர்பார்ப்புமாகும். நட்பின் இந்தச் சிறப்பை வெளிப்படுத்துவதற்கு நமக்குக் கிடைக்கும் அரிய வாய்ப்புக்களில் ஒன்று கணவன் - மனைவி நட்பாகும். இதை தவறவிடக் கூடாது. அதுமட்டுமல்ல இதற்கு அப்பாலும் நாம் 'கொள்ளல் புரிதல்' என்ற அடிப்படையில் மற்றவர்களுடன் நட்பு என்பதன் சிறப்பை நடைமுறைப்படுத்துவதே நமது வாழ்வின் குறிக்கோளாக அமையட்டும்.


**அமைதியின் குரல் - Words of Peace**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

**1-877-707-3223 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**



**மஹராஜியின் உரைகள்**

| On DVD | On TV |
| --- | --- |
| இலவச DVDக்கு அழையுங்கள் | Saturdays at 10:30 am |
| (416) 431-5000 | Rogers Cable Channel - 20 |
| 1 877 707 3223 | Bell Express vu Channel - 219 |

# பெருஞ்சாந்தி காண்பதற்கு அருந்தவம் செய்திருக்க வேண்டும்



சிவகுடும்பம் கடவுளர் சிவன், உமை, விநாயர், முருகன், வீரபத்திரர், வைரவர், ஐயப்பன் எல்லாம் பரப்பிரமத்தின் வெவ்வேறு வடிவங்களாகும். இறைவனைப் பல பெயர்களைக் குறிப்பிட்டு அழைப்பினும் கடவுள் என்ற பெயரே முற்றிலும் பொருத்தமானது. மனம், வாக்கு என்பவற்றை கடந்து நிற்பதாலும் எல்லாவற்றிலும் கலந்து நிற்பதாலும் (கட+உள்) என்று பெயரிட்டு மகிழ்ந்தனர் தமிழர். அவன் இன்றி அணுவும் அசையாது என்று எல்லா மதத்தினரும் பரம்பொருளிடம் அசைக்க முடியாத, ஆழமான பக்தி கொண்டுள்ளனர்.

பிடியதன் உருஉமை கொள மிகு கரியது சிவன் கொள விநாயர் உருப்பெற்றார் என்று தேவாரம் செப்புகின்றது. சிவனது நெற்றிக் கண்ணினின்றும் நிலமிசை வந்தவன் நெடுவேற்குமரன் தக்கன் வேள்வியைத் தகர்க்க வீரபத்திரர் உருவம் வெளிப்பட்டது. இப்படியாக எல்லாக் கடவுளர்களும் சிவ அம்சம் உடையவர்களாக இருப்பதைக் காணலாம். ஆனாலும் பலவகையாகப் பரவிடப்படும் பரம்பொருள் ஒன்றேயாம். ஒருநாமம் ஓர் உருவம் இல்லாற்கு ஆயிரம் பரம் பொருள் ஒன்றேயாம். திருநாமம் செப்புகின்றோம். அந்தப்பரம் பொருளை அவனருளாலே தான் அறிய முடியும். அடைய முடியம். அவன் அருளாலே அவன் தாள் வணங்கி என்றார் மணிவாசகர். இதனை நீ அன்றி நான் ஆர், நினைவு ஆர், என் நெஞ்சம் ஆர் தாயன்றிகச் சூலும் உண்டோ சாற்றாய் பராபரமே என்று தாயுமானார் கூறியுள்ளார்.

தெய்வீக உள்ளுணர்வு தோன்றுதற்கு இறைவனே திருவருள் அளிக்கின்றான் என்று கீழை நாட்டினர் மாத்திரமன்றி மேலை நாட்டு மெய்யுணர்வாளர்களும் கூறியுள்ளனர். ஆன்மீகம் என்றால் ஆன்மாவின் தகுதியை உயர்த்தும் கோட்பாடு என்று கொள்வதே பொருத்தமானது. ஆன்மா குறையுடையது தான். அறியாமை அதன் இயல்பு. அறியாமை என்றால் ஒன்றும் தெரியாமை அல்ல. ஒன்றை மற்றொன்றாகக் கருதுதல், துய்த்தல், தீமையை நன்மையாகவும் நன்மையைத் தீமையாகவும் எண்ணித் துய்த்தலும் துன்புறுதலுமாகும். ஆன்மாவை அறிவார்ந்த வகையில் பேணி வளர்க்க வேண்டும். அன்பார்ந்த முறையில் இயக்கி உயர்த்த வேண்டும். அறிவின் முயற்சியாலும் அன்பின் நெகிழ்ச்சியாலும் அறியாமையில் இருந்து விடுபடுகின்ற ஆன்மா பக்குவப்பட்டு யாரையும் ஒதுக்காமலும், யாரிடமிருந்தும் ஒதுங்காமலும் உயிர்க்குலம் அனைத்தையும் பேதமுறாது பேணும் பெருநெறியை உடைமையாக கொண்டு நிறை நலம் அடையும். அத்தகைய நிறை நலமே ஆன்மீகம். அதற்கு ஆலயங்கள் அதிக அளவில் உதவி புரிகின்றன. சிறியதும் பெரியதுமான முப்பது வரையிலான இந்து ஆலயங்கள் கனடா திருநாட்டில் உள்ளன. றிச்மண்ட் பிள்ளையார் ஆலயம், கனடா துர்க்கை அம்மன் ஆலயம், கனடா கந்தசாமி ஆலயம், வரசித்தி விநாயகர் ஆலயம், கனடா ஐயப்பன் ஆலயம் அவற்றுள் குறிப்பிடத்தக்வை. இவற்றுள் கோபுரத்துடன் கூடிய ஆலயம் என்ற பெருமையை ஐயப்பன் ஆலயம் முதலில் பெறுகின்றது. கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பதற்கு ஏற்ப கோபுரம் ஒரு ஆலயத்திற்கு அழகும் அருளும் சேர்க்கின்றது. இது ஸ்தூலலிங்கம் எனப்படும். சிதம்பரத்தில் நான்கு திசைகளிலும் நான்கு கோபுரங்கள் உள்ளன.தூரத்திலிருப்பவர்க்கே இறையுணர்வை ஏற்படுத்துவது கோபுரம். ஐயப்பன் ஆலயம் பாரிய அளவில் அமைக்கப்பட்டு அருள் வளம் மிக்க ஆலயமாக திகழ்கின்றது. சபரிமலைக்கு செல்ல முடியாதவர்கள் ஐயப்பனை தரிசிப்பதற்கு தகுந்த ஆலயமாக இது விளங்குவது குறிப்பிடத்தக்கது. இச்சந்தர்ப்பத்தில் ஐயப்பனது வரலாறு பற்றி அறிந்து கொள்வது பொருத்தமுடையது. சிவனுக்கும் விஷ்ணுவிற்கு பிறந்தவர் தான் ஐயப்பன். பரமாத்மா ஒன்றே சிவனாகவும் நாராயணனாகவும் உருவம் தரிக்கின்றார். சிவனாக இருக்கும் போது ஞான மூர்த்தியாகவும் நாராயணனாக இருக்கும் போது லோக மூர்த்தியாகவும் அவர் திகழ்கின்றார். அவரவர் செய்கின்ற அநுக்கிரகத்தையே இது குறிக்கின்றது.

ஈஸ்வரனுக்கு எப்போதும் ஸ்நானத்தில் பிரியம். இதனால் வட இந்தியாவில் ஈஸ்வரன் கோயில்களில் சிவலிங்கத்தின் மீது நீர் (ஜலம்) கொட்டிக் கொண்டிருக்க வகை செய்திருக்கின்றார்கள். மகா விஷ்ணுவிற்கோ அலங்காரத்தில் பிரியம். இதனால் அவருக்கு பட்டும், பொன்னும் புனைந்து மகிழ்கின்றனர் பக்தர்கள்.

ஈசுவரனின் அழகு மனதை அடக்கச் செய்கின்ற சாந்த சுபாவம் கொண்டது. ஆனால் நாராயணனின் செளந்தரியமோ மனதைக் கவரக் கூடிய காந்த சக்தி உடையது. விஷ்ணுவின் திவ்விய சொரூபத்தில் வைத்த கண் வாங்காமல் எல்லோரும் சொக்கிக் கிடக்கின்றோம். இத்தகையவர் மோகினி என்ற ஓர் உருவம் கொண்டாரானால் எத்தகைய அழகு படைத்தவராக இருப்பார் என்று சொல்லவே வேண்டியதில்லை. பரமஞானியாக ஜொலித்து கொண்டிருந்த பரமேஸ்வரனின் மனதைக் கூட மகாவிஷ்ணுவின் மோகினி சொரூபம் மயக்கி விட்டது என்று புராணங்கள் கூறுகின்றன.

மோகினியாக வந்த நாராயணனின் காருண்ய லாவண்ணமும் பரமேசுவரனின் சாந்த ஞானமும் ஒன்று சேர்ந்தவுடன் இரண்டு மகா சக்திகளும் கூடிய ஒரு பெருஞ் சோதி பிறந்தது என்று தான் ஐயப்பன் பிறப்பினைக் கூறலாம். இந்த தேஜசே ஐயப்பனாக உருவம் கொண்டது. ஹரி ஹர புத்திரம் என்றும் சாஸ்தா என்றும் ஐயனார் என்றும் அழைக்கப்படுவது இந்த ஐயப்பன் தான் கேரளாவில் தெய்வமாக வழிபடப்படும் ஐயப்பனை தமிழ் நாட்டில் கிராம தேவதையாக வழிபடுகின்றார்கள்.

கோயில்களில் கும்பாபிடேகம் நடத்துவதற்குப் பல காரணங்கள் உள. புதிதாக ஆலயம் அமைக்கப்படும் போதும், வெள்ளத்தால் ஆலயம் மூழ்கடிக்கப்பட்டு மறுபடியும் ஆலயம் அமைக்கப்பட்டு மூர்த்தி ஸ்தாபிக்கப்படும் போதும், மூல மூர்த்தியின் தேசசு குறையும் போதும் அஷ்டபந்தான மருந்து சாந்தி அருட்திறனை மேலோங்கச் செய்வதற்கு, திருடர்களால் அபகரிக்கப்பட்ட மூர்த்திகளை மீண்டும் பிரதிஷ்டை செய்யும் போதும் கும்பாபிடேகம் நடைபெறுகின்றது. ஆவர்த்தம், அனுவர்த்தம், புனஸ்வர்த்தம், அந்தரிதம் என கும்பாபிடேகம் நான்கு வகைப்படும். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கும்பாபிடேகம் நடைபெறுவதுண்டு.

ஆவர்த்தம் - ஆலயத்தையும் மூர்த்திகளையும் புதியதாக அமைக்கும் போது

அனுவர்த்தம் - ஆலயமோ, மூர்த்தியோ வெள்ளத்தால் அழிந்து விட்டால் மறுபடியும் ஆலயம் எழுப்பி மூர்த்தியை பிரதிஷ்டை செய்யும் போது

புனஸ்வர்த்தம் - ஆலயம் ஜீர்ணமாகி அஷ்ட பந்தன மருந்து சாந்தி ஜீர்ணமானதை மீண்டும் புதுப்பித்தல் செய்யும் போது

அந்தரிகம் - திருடர்களால் அபகரிக்கப்பட்ட மூர்த்திகளை மீண்டும் பிரதிஷ்டை செய்யும் போது நீடித்த இளமையுடனும் சுறுசுறுப்பான வலிமையுடனும் மனித உடலை வைத்திருப்பதற்கு காய கஸ்பம் உதவுகின்றது. இக்காய கல்பத்தை பலவித கூட்டு மருந்துகளை உரிய விகிதத்தில் முறையான பக்குவத்தில் கலந்து நியதி மாறாமல் உண்ணுதல் வேண்டும். கிட்டத்தட்ட இதேமுறையில் மருந்து கலவை செய்து கோயில் விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்யும் போது அஷ்டபந்தனம் என்ற முறையில் சக்தி ஏற்படுவதுண்டு. இதன் மூலம் சாதாரண ஒரு கற்சிலை சக்திமிக்க தெய்வத்துவம் பெறுகின்றது. அது ஆகன்ன சக்தி உடையதாக விளங்குகின்றது. அருள் ஊற்றாவும் பரிணமித்து அடியார்களை அலை அலையாக ஈர்க்கின்றது.

காணக்கண் அடியேன் பெற்றவாறே என்று சுந்தரர் கூறியவாறு ஐயப்பனது கும்பாபிடேகம் காணக்கிடைத்தமை இப்பிறவியில் எமக்குக் கிடைத்த பெரும் பேறு எனலாம்.


திருக்கோயில் இல்லாத திருவில் உளர் அடவிகாடு என்பது அப்பர் தேவாரம் கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பதற்கமைய கோயில்கள் மலிந்த கனடா நாட்டில் நாம் வசிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்தமை நமது பெரும் பாக்கியம் எனலாம்.

தேர்ந்த தீட்சை பெற்ற ஆச்சாரியர் மூலம் மந்திர சக்தி ஏற்பட்ட யாத்திர பிரதிஷ்டையுடன் உண்டான மூர்த்தியை பிரதிஷ்டை செய்து ஆகம வைதிக முறைப்படி கும்பாபிடேகம் நடக்கவிருக்கிறது.

நா. க. சிவராமலிங்கம்



## REDEVELOPMENT PROPERTY WITH MOTEL FOR SALE



- Prime property by river in downtown Niagara Falls.
- A short walk from train and bus stations.
- Designated "Major Commercial" in the Official Plan.
- Potential for high-rise residential redevelopment.
- Eligible for local and regional government incentives under City's Community Improvement Plan.
- Currently houses 33-room motel with outdoor heated pool and attached four-bedroom house.

Inquires Tel: **416-669-3101**

## Driving School



- ஓட்டுனர் பயிற்சியில் நட்பான அணுகுமுறை
- நவீனத்துவமான பயிற்சி முறையுடன் நம்பிகையான வெற்றி
- ***G1, G2*** தேர்வுப் பயிற்சிகள், போக்குவரத்து வசதிகள், தெளிவான விளக்க வகுப்புகள்,
- வீதித் தேர்வுக்கான வாகன ஒழுங்குகள், வசதிக்கேற்ற தேர்வு நாட்கள்
- நீண்டகால அனுபவத்தின் தனித்துவமான பயிற்சி - General Driving School

**Ministry of Transportation Approved Instructor - பேரின்பநாதன் வேந்தன் - 416-731-2829**

**Email: venthanctr@yahoo.com**

# "பாலாஜி சக்திவேல் - அம்மா, சமுத்திரக்கனி - அப்பா"

## நேர்காணல்: நடிகர் பரணி

"கல்லூரி", "நாடோடிகள்" என்று இரண்டே படங்களில்தான் நடித்திருக்கிறார். அதற்குள் யார் இவர் என்று கோடம்பாக்கத்தில் தேட ஆரம்பித்துவிட்டார்கள். மட்டுமல்லாமல் தமிழ் சினிமா ரசிகர்கள் மனதிலும் நல்ல நடிகர் என பதிந்துவிட்டார். தனது எளிமையான, இயல்பான, யதார்த்தமான நடிப்பின் மூலமாக "சிறந்த நடிகர்" என்கிற பெயரைத் தட்டிக் கொண்டு போயிருக்கும் நடிகர் பரணியை "விளம்பரம்" பத்திரிகைக்காகச் சந்தித்தோம்.

"உங்களோட சொந்த ஊர் எது? எப்பிடி சினிமாவுல நடிக்கணும்னு ஆசை வந்தது?"

"எனக்கு பூர்வீகம் பரமக்குடி. ஆனா, வளர்ந்ததெல்லாம் மதுரை அனுப்பானடிலதான். அப்பா, அம்மா, ஒரு தம்பி, தங்கச்சின்னு நிறை வான குடும்பம். அப்பா டிபார்ட்மெண்ட்டல் ஸ்டோர் வச்சிருக்கார். தம்பி தகவல் தொழில் நுட்பம் படிக்கிறான். எங்க குடும்பத்துல யாருக்குமே சினிமா ஆர்வம் கிடையாது. அப்பாவுக்கு சினிமான்னா சுத்தமா பிடிக்காது. நான் அஞ்சாவது படிக்கறப்போ மறக்க முடியாத ஒரு சம்பவம் நடந்துச்சு. நோட்டுல கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் - பரணின்னு எழுதி வச்சிருந்தேன். அது அப்பா கண்ணுல பட்டுடுச்சு. அடி அடின்னு அடிச்சுத் தள்ளிட்டார். அப்பா எவ்வளவுதான் தடுத்தாலும் அது என்னவோ எனக்கு சினிமா மேல அப்படி ஒரு ஈடுபாடு.

நான் பத்தாவது வரைக்கும்தான் படிச்சேன். மதுரை சௌராஷ்டிரா பள்ளிக்கூடத்துல படிச்சேன். அப்போ அங்கே இருந்த வாலிபால் டீம்ல நானும் இருந்தேன். வகுப்பு நடந்துக்கிட்டு இருக்கும். நான் வாத்தியார்கிட்ட "சார்! கோச்சிங் கிளாஸுக்குப் போறேன்"னு சொல்வேன். அவரும் அனுப்பிடுவார். வெளியே வந்ததும் நேரா சினி-மா தியேட்டர்லதான் போய் நிப்பேன். நான் பாடம் படிச்சதைவிட தியேட்டர்ல படம் பாத்ததுதான் அதிகம். ஆனா இப்பிடி கிளாஸுக்குக் கட் அடிச்சுட்டு படம் பார்த்ததை எங்க அம்மாகிட்ட மட்டும் சொல்லிடுவேன். அப்பவே சினிமா ஆசை அதிகமா இருந்துச்சுன்னுதான் சொல்லணும்."

**- பாலு சத்யா -**

"அப்பவே நடிகனாகணும்னு முடிவு பண்ணிட்டீங்களா?"

"இல்ல... இல்ல. நான் நடிகனாவேன்னு நானே எதிர்பார்க்கலை. எனக்கு பெரிய இயக்குநராகணுங்கறதுதான் ஆசை. மதுரையிலிருந்து சென்னைக்கு வந்ததே அந்த ஆசையிலதான். இயக்குநர் பாலாஜி சக்திவேல் சாரைப் பார்த்தேன். அவர்கிட்ட உதவி இயக்குநரா எப்பிடியாவது சேர்ந்துடணும்னு முயற்சி பண்ணினேன். ஆனா, அவர்கிட்ட உதவி இயக்குநரா சேரணும்னா ஏதாவது ஒரு பட்டப்படிப்பு முடிச்சிருக்கணும்னு சொன்னாங்க. அதுக்கப்புறம் ப்ளஸ் டூ படிச்சேன். பாஸ் பண்ணினேன். மெட்ராஸ் யுனிவர்சிட்டியில கரஸ்பாண்டண்ட் கோர்ஸ்ல டிகிரில சேர்ந்தேன். இடையில இடையில பாலாஜி சக்திவேல் சார் ஆபீஸுக்குப் போய்ட்டும் வந்துக்கிட்டும் இருந்தேன். ஒரு நாள் அவர் என்கிட்ட "நான் எடுக்குற "கல்லூரி" படத்துல ஒரு நல்ல ரோல் இருக்கு. நடிக்கிறியா?"ன்னு கேட்டார். சரின்னு சொன்னேன். கிட்டத்தட்ட ஒண்ணரை வருடம் அவர் எனக்கு நடிப்பு சொல்லிக் குடுத்தார். ஏதாவது ஒரு காட்சியை சொல்லி நடிக்கச் சொல்லுவார். வசனம் பேசச் சொல்லுவார். கதையைப் பத்தித் திரும்பத் திரும்ப விவாதிப்பார். அவர் சொன்னதை எல்லாம் செஞ்சேன். இத்தனைக்கும் அந்தப் படத்துல என்ன பாத்திரம்னு எனக்குத் தெரியாது. இது ஒரு பக்கம் நடந்துக்கிட்டே இருந்தது. ஒரு நாள் நான் ஏதோ யோசனையில பாலாஜி சக்திவேல் சார் ஆபீஸ்ல உக்காந்திருந்தேன். ஒரு டான்ஸ் மாஸ்டர் இயக்குநரை பார்க்கறதுக்காக வந்திருந்தார். அவர் தமிழ் சினிமாவுல பெரிய டான்ஸ் மாஸ்டர்னெல்லாம் எனக்குத் தெரியாது. என்கிட்ட "டைரக்டர் இருக்காரா?"ன்னு கேட்டார். நான் "தெரியாது"ன்னு சொன்னேன். அவர் நேரா உள்ள போயிட்டார். உள்ள இயக்குநர் இருந்தார். அவர்கிட்ட அந்த டான்ஸ் மாஸ்டர், "என்ன சார்! நீங்க உள்ள இருக்கீங்க! உங்க ஆபீஸ் பாயைக் கேட்டா தெரியாதுன்னு பொறுப்பு இல்லாம சொல்றானே?"ன்னு சொல்லியிருக்கார். நான் யதேச்சையா அப்போ உள்ள நுழைஞ்சேன். இயக்குநர் சொன்னார்: "ஆபீஸ் பாயா? அவன் டீ வாங்க வெளியில இல்ல போயிருக்கான்?"உடனே, அந்த டான்ஸ் மாஸ்டர் என்னைக் காட்டி "இது யாரு?"ன்னு கேட்டார். "இவன் நம்ம படத்துல செகண்ட் ஹீரோ!"ன்னார் இயக்குநர். அப்போதான் அந்தப் படத்துல நான் இரண்டாவது கதாநாயகன்னு எனக்கே தெரியும். "கல்லூரி" படம் மெகா ஹிட் இல்லன்னாலும் ஹிட் ஆச்சு. நான் வெளியில தெரிய ஆரம்பிச்சேன்."

"கல்லூரியில் நடிச்ச அனுபவம் எப்படி இருந்தது?"

"அது எனக்கு முதல் படம். அந்தப் படத்தோட தயாரிப்பாளர் 'ங்கர். தமிழ் சினிமாவுல ரொம்ப முக்கியமான ஒரு இயக்குநர். அவர் முன்னாடி எப்பிடி நடிக்கப் போறேனோன்னு உள்ளுக்குள்ள ஒரு உதறல் இருக்கத்தான் செஞ்சுது. நான் நடிச்ச முதல் மூணு ஷாட்லயும் ஒரே டேக்ல நான் சரியா நடிச்சுட்டேன். ஷங்கர் சார் ரொம்ப பாராட்டினார். நாலாவது ஷாட்லருந்துதான் பிரச்னை ஆரம்பிச்சுது. ஒவ்வொரு சீனுக்கும் அஞ்சு டேக், ஆறு டேக்குன்னு நடிக்க வேண்டி யிருந்துச்சு. அப்போ ஷங்கர் சார் சிரிச்சுக்கிட்டே சொன்னார்: "நான் தான் பரணியைப் பாத்து கண்ணு வச்சுட்டேன். அதுனாலதான் இத்தனை டேக் வாங்கறான்." அதுக்கப்புறம் எப்பிடியோ சமாளிச்சுக்கிட்டு நல்லா நடிக்க ஆரம்பிச்சேன்."

"நாடோடிகள்" பட வாய்ப்பு எப்பிடி கிடைச்சுது?"

"கல்லூரி" படம் பாத்துட்டு இயக்குநர் சமுத்திரகனி சார் கூப்பிட்டு விட்டார். அவரை நான் எப்பவும் அண்ணன்னுதான் சொல்லுவேன். ஆனாலும், எனக்கு குழப்பமாவே இருந்துச்சு, தொடர்ந்து நடிக்கறதா, இயக்குநரா ஆகறதுக்கு முயற்சி பண்றதான்னு. ஆனா, அந்தப் படத்துல சமுத்திரகனி அண்ணன் அவரே நடிக்க வேண்டிய பாத்திரத்தை எனக்குக் குடுத்தார். அவர்கூடவே இருபது, முப்பது நாள் தங்கியிருந்தேன். அவரை மாதிரியே முடி வளர்த்தேன். அவரோட உடல் மொழி ஒவ்வொண்ணையும் பாத்துப் பாத்து கத்துக்கிட்டேன். அப்புறம் சமுத்திரகனி அண்ணன் ஃபோட்டோ ஷூட் எடுத்தாங்க. திருப்தியா யிட்டாங்க. "நாடோடிகள்" என் வாழ்க்கையையே மாத்திடுச்சு. இனிமே எந்தப் படத்துல நடிச்சாலும் அந்தப் படத்தோட தாக்கம் இருக்கும். இனிமே அப்பிடி ஒரு படம் கிடைக்குமான்னு எனக்குத் தெரியல. பாலாஜி சக்திவேல் சார் எனக்கு அம்மான்னா, சமுத்திரக்கனி சார் எனக்கு அப்பா மாதிரி.




"நாடோடிகள்" படத்துக்கு அப்புறம் ரசிகர்கள் மத்தியில் எனக்கு நல்ல வரவேற்பு இருந்துச்சு. ஒரு சட்டை கிழிஞ்சு போச்சு, கன்னத்துல கீறல் விழுந்து ரத்த காயம் ஏற்பட்டிருக்கு. ரெண்டுமே ரசிகர்களால ஏற்பட்டதுதான். ஆனா, இதுல எனக்குக் கொஞ்சம்கூட வருத்தம் இல்ல. ரொம்ப சந்தோசமா இருக்கு. ஒரு தியேட்டர்ல படம் பாக்கப் போனப்போதான் இப்பிடி ஆச்சு. இத்தனை வருஷம் கஷ்டப்பட்டதுக்கு பலன் கிடைச்சிடுச் சுன்னு எனக்கு ரொம்ப மகிழ்ச்சியா இருக்கு. நான் ரோட்ல நடந்து போனா, எல்லாருக்குமே என்னை அடையாளம் தெரியுது. இது மட்டும் இல்ல. எதிர்பாராத இடங்கள்ல இருந்தெல்லாம் எனக்குப் பாராட்டு கிடைச்சுது.



கன்னடத்து நடிகர் உபேந்திரா அங்க "சூப்பர் ஸ்டார்." அவர் "நாடோடிகள்" படத்தைப் பாத்துட்டு "இந்தப் பையன் பத்து வருஷத்துக்கு முன்னாடி நான் எப்பிடி இருந்தேனோ, அதே மாதிரி இருக்கேன்"னு சொல்லியிருக்கார். இதைக் கேட்டப்போ எனக்கு ரொம்ப சந்தோஷமா இருந்துச்சு. அதோட, பாலாஜி சக்திவேல் சார் "ரொம்ப நல்லா பண்ணியிருக்கே"ன்னு என்னைப் பாராட்டினதுதான் மறக்க முடியாத பாராட்டா இருந்துச்சு."

"இனிமே எந்த மாதிரியான வேடங்கள்ல நடிக்கப் போறீங்க?"

"வர்றது எல்லாமே கொலை பண்ற கதாநாயகன் பாத்திரமாவே இருக்கு. கேட்டா, "உங்க கண்ணு அவ்வளவு பவர்ஃபுல்லா இருக்கு. இந்த மாதிரி வேடம்தான் உங்களுக்குப் பொருத்தமா இருக்கும்"னு சொல்றாங்க. ஆனா, என்னோட ஆசையெல்லாம் ஒரு நடிகனா ரசி-கனை அழ வைக்கணும், சிரிக்கவும் வைக்கணும். பரபரப்பான கதாநாயகன் வேடமும் பண்ணணும், குணசித்திர வேடத்துலயும் நடிக்கணும், வில்லனாவும் நடிக்கணும். இப்பிடி வச்சுக்கங்களேன், "திருடா திருடி" மாதிரியான படத்துலயும் நடிக்கணும், "கற்றது தமிழ்" மாதிரியான படத்துலயும் நடிக்கணும். நல்ல கதை, நல்ல இயக்குநர் கிடைச்சா போதும். இயக்குநர் எதிர்பார்க்குற நூறு சதவீத உழைப்பைத் தர்றதுக்கு நான் தயாரா இருக்கேன். எனக்கு நிறையா ஆசை இருக்கு சார். வில்லனா நடிக்கணும், சைக்கோ கேரக்டர்ல நடிக்கணும், நெகட்டிவ் ஹீரோவா நடிக்கணும்... இப்பிடி நிறையா."

"அடுத்து நீங்க நடிக்கு படம் முடிவாயிடுச்சா?"

"எனக்கு நிறையா வாய்ப்பு வந்தாலும் எல்லாத்தையும் ஒத்துக்கறதில்ல. எனக்குப் பொருத்தமா, சரியான பாத்திரம் அமையணும் இல்லையா? அதுக்காக. இதுவரைக்கும் 20 பேர்கிட்ட கதை கேட்டிருக்கேன். அதுல அஞ்சு பேர்கிட்டதான் சரின்னு சொல்லியிருக்கேன். கடைசியா ரெண்டு பேரைத் தேர்ந்தெடுத்து படம் பண்ணுவேன். இன்னும் ரெண்டு மூணு வாரத்துல தெரிஞ்சிடும்."

# திரை விமர்சனம் - கந்தசாமி



நீண்ட இடைவெளிக்குப் பிறகு வரும் விக்ரம் படம். பெரிய முதலீடு. மூன்று வருடங்கள் இழைத்து இழைத்து செய்யப்பட்ட படம்... என்று ஏகப்பட்ட எதிர்பார்ப்புகள். இந்த எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்தாரா ஷகந்தசாமி? பார்ப்போம்.

கஷ்டப்படும் ஒரு ஏழை பெண், தன் குடும்ப கஷ்டத்தை திருப்போரூர் கந்தசாமி கோயில் மரத்தில் ஒரு கோரிக்கையாக எழுதி கட்டி வைப்பதுடன் படம் தொடங்குகிறது. அடுத்த நாள் அவள் வீட்டில் கருப்பு பையில் பணம் இருக்கிறது. தனக்கு உதவி செய்தது கடவுள்தான் என்று அவள் நம்புகிறாள். இந்தச் செய்தி ஊர் முழுக்க பரவுகிறது. தங்கள் பிரச்சினைகளை காகிதத்தில் எழுதி, திருப்போரூர் கந்தசாமி கோயில் மரத்தில் கட்டிவைத்தால், அந்தப் பிரச்சினைகள் தீரும் என்று மக்கள் நம்புகிறார்கள். அப்படியே தொடர்ந்து நடக்கவும் செய்கின்றன. கொஞ்ச நாட்களிலேயே அந்த கிராமம் மற்றும் சுற்றுப்புறங்களில் உள்ளவர்களின் வாழ்க்கை பசுமையாகிவிடுகிறது. இதுபற்றி கேள்விப்படும் காவல்துறை அதிகாரி பிரபுவுக்கு இதில் ஏதோ வில்லங்கம் இருக்கிறது என்று சந்தேகம் வருகிறது. விசாரணையை ஆரம்பிக்கிறார்.

இந்த நேரத்தில் சிபிஐ பொருளாதாரக் குற்றப்பிரிவு அதிகாரியாக அறிமுகமாகிறார், கந்தசாமி (விக்ரம்). நேர்மையானவர். கறுப்புப் பணத்தை அடியோடு ஒழித்தால் நாடு திருந்திவிடும் என்பதில் நம்பிக்கை கொண்டவர். எங்கெல்லாம் கறுப்புப் பணம் பதுக்கப்பட்டிருக்கிறதோ அங்கெல்லாம் ஒரு அதிரடி சோதனை நடத்தி, மொத்தப் பணத்தையும் கைப்பற்றுகிறார். ஆனால், அவற்றை அரசு கஜானாவுக்கு அனுப்பாமல் தாமே முன்னின்று கஷ்டப்படும் ஏழைகளுக்கு வழங்குகிறார். தனக்கு மிகவும் நெருக்கமான நண்பர்கள் எட்டுப் பேரின் துணையுடன் இந்த உதவிகளைத் தொடர்ந்து செய்கிறார் கந்தசாமி. இந்த எட்டுப் பேரும் சிபிஐ பொருளாதார குற்றப்பிரிவில் வெவ்வேறு பணிகளை மேற்கொண்டிருப்பவர்கள். கந்தசாமியின் அதிரடி சோதனையொன்றில் சிக்கி பணத்தையெல்லாம் இழக்கிறார் ஆசிஷ் வித்யார்த்தி. அவரது மகளாக வரும் ஸ்ரேயா, தந்தைக்கு நேர்ந்த இழப்புக்கு கந்தசாமியைப் பழிவாங்கப் புறப்படுகிறார். முதலில் காதலிப்பது போல் நடிக்க ஆரம்பித்து, பின் காதலில் விழுகிறார்.

இந்நிலையில் சேவல் வேடம் போட்ட திருப்போரூர் கந்தசாமியும், சிபிஜ அதிகாரி கந்தசாமியும் ஒருவரே என்பதை ஆசிஷ் வித்யார்த்தி கண்டுபிடிக்கிறார். மட்டுமல்லாமல், அதை கந்தசாமி வாயாலேயே ஒப்புக்கொள்ள வைத்து அதை வீடியோ ஆதாரமாக்கிவிடுகிறார். ஆனால், அந்த வீடியோ ஆதாரத்தை அரசிடம் ஒப்படைப்பதுக்கு மாறாக கந்தசாமியுடன் ஒரு ஒப்பந்தம் போடுகிறார்கள். கந்தசாமி ஏழைகளுக்காக கைப்பற்றும் பணத்தில் பாதியைத் தனக்குத் தந்துவிட வேண்டும் என்பது அந்த ஒப்பந்தம். அவர் வழியாக மெக்ஸிகோ (சுவிஸ்!) வங்கிகளில் பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் இந்திய பெரு முதலாளிகள் சிலரது கருப்புப் பணத்தை அள்ளிவரத் திட்டம் போடும் கந்தசாமி, இதற்கு ஒப்புக்கொள்கிறார். இதில் வில்லனாக வரும் ஆர்எம்ஜி குழுமத்தின் ராஜ்மோகனுடன் மோதல் வருகிறது. தமிழ் சினிமாவின் வழக்கம்போல் கடைசியில் கதாநாயகன் வெற்றிபெறுகிறான்.



இயக்கம்: சுசி கணேசன். இருப்பவர்களிடம் பிடுங்கி இல்லாதவர்களுக்குத் தரும் ராபின்ஹுட் பாணி கதைதான். தமிழ் சினிமாவிலேயே பலமுறை அரங்கேறி பார்த்து சலித்துவிட்ட சரக்கு. ஆனாலும், தொழில் நுட்பத்தின் துணையுடன் பிரமாண்டமும் பளபளப்புமாக சுவாரஸ்யமாகவே கொடுத்திருக்கிறார் சுசி கணேசன். பக்கா தமிழ் சினிமா ரசிகர்களுக்கு இந்தப் படம் திருப்தியைத் தந்திருக்கிறது என்பதுதான் கந்தசாமியின் வெற்றி. இதுபோன்ற படத்தில் லாஜிக் இருப்பதில்லை. 'கந்தசாமி' அதற்கு விதிவிலக்கல்ல.

நடிகர்கள்: விக்ரம், ஸ்ரேயா, கிருஷ்ணா, பிரபு, வடிவேலு, ஆசிஷ் வித்யார்த்தி, இயக்குநர் சுசி கணேசனும் கவுரவ வேடத்தில் வந்துபோகிறார். விக்ரமுக்கு கிட்டத்தட்ட 'அன்னியன்' படத்தில் செய்த வேடம். அம்பி பாத்திரம் மட்டும் இல்லை. பழக்கப்பட்ட பாதை என்பதாலோ என்னவோ அலட்டிக்கொள்ளாமல் நடித்துவிட்டுப் போகிறார், விக்ரம். ஸ்ரேயாவுக்கு வில்லத்தனம், கவர்ச்சி, நடிப்பு எல்லாம் தேவைப்படும் பாத்திரம். ஆனால், கவர்ச்சியை மட்டும் வைத்து மற்ற இரண்டையும் சரிகட்டிவிட்டார். முக்கால் நிர்வாணமாக வந்தாலும், 'அய்யோ பாவம்' என்று உச்சுக்கொட்டத்தான் தோன்றுகிறது. 'மியாவ்..மியாவ்' பாடலில் ஒரு துண்டை மட்டும் கட்டிக்கொண்டு ஸ்ரேயா போடும் கெட்ட ஆட்டம் நிச்சயம் ரசிகர்களுக்கு நல்ல விருந்துதான். அண்மையில் மலேசியாவில் விக்ரமுடன் காந்தீபன் நடத்திய நேர்காணலில், "கந்தசாமி படத்தில் வரும் பாடல்களெல்லாம் குழந்தைகளுக்காக எழுதப்பட்டது, 'போடா போடி... மியாவ் மியாவ்...' பாட்டைப் பார்த்தீங்கனா சின்ன பிள்ளைங்கத்தான் இப்படி விரும்புவாங்க, பேசுவாங்க" என்று சொன்னார், விக்ரம். 'குழந்தைகளுக்கான பாடல்' என்று விரைவில் அறிவிப்பு வந்தாலும் ஆச்சரியமில்லை. தமிழ் தாய்க்குலங்களும் அதை தங்கள் குழந்தைகளுக்கு காட்டி ரசிக்க வைப்பதுடன், ஆடவும் வைப்பார்கள். வாழ்க, தமிழ் கூறும் நல்லுலகம்!

வடிவேலு வரும் காட்சிகளில் சிரிப்பு மூட்டுகிறார் என்றாலும், படத்தோடு ஒட்டாமல் வந்து போகிறார். கட்டாயமாகத் திணிக்கப்பட்டிருக்கிறார் என்பது அப்பட்டமாகத் தெரிகிறது.

இசை: தேவி ஸ்ரீ பிரசாத், ஒளிப்பதிவு: என்.கே. ஏகாம்பரம். ஒளிப்பதிவு, இசை, எடிட்டிங் எல்லாமே படத்திற்குப் பலம் சேர்க்கின்றன. பாடல்கள் ஏற்கெனவே ஹிட். அவை படமாக்கப்பட்டு விதமும் ரசிக்கும்படியாகவே இருக்கின்றன.

மூன்றேகால் மணி நேரம் படம் என்பதுதான் அயர்ச்சியூட்டுகிறது. கொஞ்சம் குறைக்கலாம்.

கந்தசாமி - 'ஜென்டில்மேன்', 'அன்னியன்', 'ரமணா', 'சிவாஜி' 'இந்தியன்', 'முதல்வன்', 'சாமுராய்' என பல பழைய படங்களின் 'கலக்கல்' சாமி!

- பிலிம்நியூஸ் கிருஷ்ணன் -

வீடு, மனை, நிலம் வியாபாரம், வியாபாரக்கட்டிடம் வாங்க, விற்க அழையுங்கள் Ratheesh





Ratheesh Subramaniam, B. Sc (Hons)
Sales Representative

Cell: 416-303-4005 Office: 416 - 321-6969
Email: ratheesh_maniam@hotmail.com

HomeLife GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Rd. #206, Toronto
145 Traders Blvd # 28, Mississauga - 905.712.2666
*Independently owned & operated

கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது

# பவள விழா அணை - மேட்டூர் அணை



## தமிழ்நாடு சுற்றுலா இடங்கள்- 62

பல லட்சம் தமிழக விவசாயிகளின் வாழ்க்கை ஒளியான மேட்டூர் அணைதான் இந்த முறை நம் சுற்றுலா தலம். ஒகேனக்கலில் நூற்றுக்கணக்கான அருவிகளாக சீறிப்பாய்ந்து சேட்டைக்கார குழந்தையாக தமிழகத்துக்குள் நுழையும் காவிரி ஆற்றை, அதன் வேகத்தை தடுத்து நிறுத்தி, சமைந்த பெண்ணாக உட்கார வைத்திருக்கும் இடம். பீதியூட்டும் பிரமாண்டமும் சிலிர்ப்பூட்டும் அழகும் இணைந்த நீர்த்தேக்கம். தமிழகத்திலேயே மிகப்பெரிய அணைக்கட்டு என்பதுடன், இந்த ஆண்டு தன் பவளவிழாவைக் கொண்டாடும் அணை என்ற சிறப்பும் சேர, இரண்டு மலைகளுக்கு நடுவே கடல் போல் பரந்து விரிந்து கிடக்கிறது மேட்டூர் அணை. போய் பார்ப்போமா?

தமிழகத்தில் மேற்கு தொடர்ச்சி மலைத்தொடரை ஒட்டி, சேலம் மாவட்டத்தில் மேட்டூர் அருகில் உள்ள சீதா மலைக்கும் சோனாங்கரடுக்கும் இடையே, காவிரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட அணை தான் மேட்டூர் அணை. இந்த நீர்த்தேக்கம் கட்டி முடிக்கப்பட்ட போது, இதுதான் ஆசியாவிலேயே மிக உயரமானதும் உலகிலேயே மிகப்பெரியதுமான ஏரியாக விளங்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

மேட்டூர் அணையின் மொத்த நீளம் 1700 மீட்டர்கள். உயரம் 125 அடி. இதில் 120 அடி வரை நீரைத் தேக்கமுடியும். மொத்த கொள்ளளவு 93.47 டிஎம்சி. (1 டி.எம்.சி என்பது 100 கோடி கன அடி.) ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட இந்த அணை இதுவரைக்கும் இரண்டு முறை இடி, மின்னலால் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறது. ஆனாலும், எவ்வித சேதமும் இன்றி கம்பீரமாக காட்சி அளிக்கிறது. இந்த அணையில் இருந்து வெளியேறும் தண்ணீரின் மூலம் 400 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. சேலம், நாமக்கல், கரூர், திருச்சி, தஞ்சை உள்பட 11 மாவட்டங்களில் மொத்தம் 16 லட்சம் ஏக்கர் நிலம் இந்த அணையின் மூலம் பாசன வசதி பெறுகிறது.

இன்று, கர்நாடக மாநிலத்துக்கும் தமிழ்நாட்டுக்கும் தீராத பிரச்சினையாக இருந்துவரும் இந்த பிரமாண்ட அணை, அது ஒரு எண்ணமாக பிறந்த காலத்திலேயே பிரச்சினையுடன் தான் உருவாகியிருக்கிறது. 1801ஆம் ஆண்டிலேயே மேட்டூரில் அணை கட்டுவதற்கு அப்போதைய பிரிட்டிஸ் கிழக்கிந்திய சபை முயன்றது. ஆனால், அந்நாள் மைசூர் சமஸ்தானம் ஆட்சேபனைகள் எழுப்பியதால் அத்திட்டம் கைவிடப்பட்டது. பின்பு, திரும்பவும் 1835ஆம் ஆண்டு சர் ஆர்தர் காட்டன் என்ற பொறியாளரை அணை கட்ட சம்மதம் பெற மைசூருக்கு அனுப்பி வைத்தது, ஆங்கில அரசு. மைசூர் சமஸ்தானம் மீண்டும் எதிர்த்ததால் முயற்சி கைவிடப்பட்டது. இந்த அணை கட்டப்பட்டால், மேட்டூர் தொடங்கி வடதமிழகம் முழுக்க பாசனத்துக்கும் குடிநீருக்கும் தண்ணீர் கிடைக்கும் என்பதுடன், வருடம்தோறும் மழைக்காலங்களில் கரைபுரண்டோடும் காவிரியின் பெருக்கால் திருச்சி, தஞ்சை பகுதியினர் பாதிக்கப்படுவதில் இருந்தும் விடுதலையடையலாம் என்னும் நிலை. எனவே, மீண்டும் 1923இல் தஞ்சையைப் பூர்வீகமாகக் கொண்ட திருவாங்கூர் சமஸ்தான திவான் பகதூர் சர் சி.பி.ராமசாமி அய்யரிடம் ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்ட விவசாயிகள் அணையின் நியாயத்தை எடுத்து விளக்கினர். அவர் மைசூர் சமஸ்தான திவான் பகதூர் விஸ்வேஸ்வரய்யா என்பவரிடம் இது குறித்து எடுத்துரைத்தார். மைசூர் சமஸ்தானத்தார் மீண்டும் ஆட்சேபனைத் தெரிவித்தார்கள்.


மைசூர் சமஸ்தானத்தார் ஒரு வழிக்கு வரமாட்டார்கள் என உறுதிப்பட்டதும் தஞ்சை மாவட்ட விவசாயிகள் ஒன்று சேர்ந்து ஒரு காரியம் செய்தார்கள். புயல் மற்றும் வெள்ள சேதத்தினால் ஏற்படும் இழப்புகளுக்கு ஆண்டு தோறும் 30 லட்சம் ரூபாயை நஷ்ட ஈடாக மைசூர் சமஸ்தானத்தார் கொடுக்கவேண்டும் என தஞ்சை மாவட்ட ஆட்சி தலைவர் மூலம் மைசூர் சமஸ்தானத்திற்கு நோட்டீஸ் அனுப்பினர். (அன்றைய தேதியில் தங்கம் ஒரு பவுண் விலை ரூ.30, அதன்படி கணக்கிட்டால் ஒரு லட்சம் பவுன் தங்கம் நஷ்ட ஈடாகக் கேட்கப்பட்டது எனலாம். இன்றைய தங்கம் விலையுடன் ஒப்பிட்டால் எவ்வளவு வரும் கணக்கிட்டுக் கொள்ளுங்கள்.) இவ்வளவு பெரிய தொகையை வருடாவருடம் கொடுப்பதைக் காட்டிலும், மேட்டூரில் அணைகட்டுவதற்கு சம்மதம் கொடுப்பதே சிறந்தது என திருவாங்கூர் சமஸ்தான திவான் பகதூர் சர்.சி.பி.ராமசாமி அய்யர் மைசூர் சமஸ்தானத்திற்கு எடுத்துக்கூறினார். அவர்கள் சம்மதித்தனர். கையோடு சம்மதக் கடிதத்தையும் பெற்று தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி வைத்தார், ராமசாமி அய்யர்.

சம்மதம் கிடைத்ததும், மளமளவென அணைகட்டும் வேலைகள் தொடங்கின. அணை குறித்த திட்ட ஆய்வு பணி 1905இல் துவங்கி 1910 வரை நடந்தது. இறுதியில் 1924 மார்ச் 31ஆம் தேதி இந்திய அரசின் ஒப்புதலுக்கு திட்ட அறிக்கை அனுப்பப்பட்டது. 11 டிசம்பர் 1924 அன்று அரசு அனுமதி வழங்கியது. அதே ஆண்டு அப்போது சென்னையில் வசித்து வந்த இங்கிலாந்தைச் சேர்ந்த ஸ்டேன்லி என்ற பொறியாளர் அணைகட்டும் வேலைக்கு நியமிக்கப்பட்டார். 1925 ஜூலை 20ஆம் தேதி மேட்டூர் அணை கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. 24 என்ஜினியர்கள் அடங்கிய குழுவின் மேற்பார்வையில் ஒன்பது ஆண்டுகாலம் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பணியாளர்கள் கடுமையாக உழைத்து மேட்டூர் அணைக்கு வடிவம் கொடுத்தனர். இறுதியில் 1934ஆம் ஆண்டு ஜூலை 14ஆம் தேதி கடைசி கல் வைக்கப்பட்டு கட்டுமானப் பணி நிறைவு பெற்றது. அணையைக் கட்டி முடிக்க அப்போது ஆன செலவு ரூ.4.80 கோடியாகும். அப்போதைய சென்னை மாகாண கவர்னர் ஜான் பெடரிக் ஸ்டான்லி, 1934ஆம் ஆண்டு ஆகஸ்ட் 21ஆம் தேதி பாசனத்திற்கு நீரை திறந்து வைத்து, அணையை நாட்டிற்கு அர்ப்பணித்தார். பொறியாளர் ஸ்டேன்லியின் பெயர் வைக்கப்பட்டு ஆளுநர் ஸ்டான்லியின் பெயரையே அணைக்கும் சூட்டி, ஸ்டான்லி நீர்த்தேக்கம் என வைத்தனர்.

தொடர்ச்சி 25ஆம் பக்கம்



# நூலாய்வு




## - துறையூரான் -

மேற்படி நூல் ஒரு ஆங்கில நூலை அடியொற்றி எழுதப்பட்டுள்ளது. இந்நூலில் பல சிறப்பம்சங்கள் காணப்படுகின்றன. முதலில் ஆங்கில நூலை எழுதியவர் ஒரு அமெரிக்கக் கறுப்பின பெண். வாழ்க்கையின் ஆரம்பமட்டத்தில் அநேக சவால்களைச் சந்தித்து வைராக்கியத்துடன் முன்னேறிச் சாதனை படைத்தவர். இன்று ஒரு பிரபலமான எழுத்தாளராக, சட்ட வல்லுனராக, மதகுருவாக, தேசிய கல்வியின் ஆதரவாளராக, தொலைக்காட்சி நிகழ்ச்சி நடத்துனராகப் பல்வேறுபட்ட முகங்களை உடையவராகக் காட்சி தருகிறார். இவர் 12 நூல்களை எழுதியுள்ளார். அவர் எழுதிய நூலொன்றை அடியொற்றி திருமதி லலிதா புரூடி ஏறக்குறைய இரு வருடங்களாக விளம்பரம் பத்திரிகையில் எழுதி வந்த கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல். எனவே வாழ்க்கையில் எதிர் நீச்சல் போட்டு வெற்றி கண்ட ஒரு பெண்ணின் நூலை அடியொற்றி இன்னுமொரு தமிழ்ப் பெண் தனது அனுபவங்களையும் ஆங்காங்கே ஏற்ற இடங்களில் எழுதிச் சாதனை படைத்துள்ளார். இவரும் கனடாவில் பல்வேறு பணிகளில் ஈடுபட்டுள்ளார் என்பது 'விளம்பரம்' பத்திரிகை வாசகர்களும், தொலைக்காட்சி, வானொலி நேயர்களும் அறிவர்.

இனி இந்நூல் பற்றி ஆராய்வோம். ஆளுமை வளர்ச்சி என்றால் 'மானிடத்தின் பரிமாணங்களாகிய ஆத்மா, உள்ளம், உணர்வு, உடல் ஆகியவற்றை சரிவிகித சமானமாகப் போஷித்துக் கட்டியெழுப்புவது தான் ஆளுமை வளர்ச்சி' என வரைவிலக்கணம் நூலின் ஆரம்பத்திலுள்ளது. எனவே ஒரு மனிதனின் வாழ்க்கையில் அவன் கடக்க வேண்டிய, உணர வேண்டிய, செய்ய வேண்டிய, நடக்க வேண்டிய நல்ல முறைகளை, வழிகளைப் பற்றி இந்நூல் விபரமாக எடுத்துக் கூறுகிறது என்பது வெள்ளிடைமலை. இந்நூல் முழுவதும் அனுபவமும், ஆழ்ந்த ஆன்மீக அறிவும், பட்டறிவும் பேசுகிறது என்பது புலனாகிறது. வாழ்க்கையில் நாம் ஒவ்வொருவரும் எண்ணற்ற சோதனைகளையும், இன்ப துன்பங்களையும் சவால்களையும் எதிர் நோக்குகிறோம். இவற்றையெல்லாம் எதிர்த்து நீச்சலடித்து எவ்வாறு எமது ஆளுமையையும் வாழ்க்கைத் தரத்தையும் வளர்த்துக் கொள்ளலாம் என்ற போதனைகள் நிறைந்த பொக்கிஷமாக இந்நூல் திகழ்கிறது. இந்நூல் எழுதப்பட்டுள்ள விதமும் புதுமையானது. அதாவது ஒரு கிறிஸ்தவ ஆலயத்தில் ஒரு குருவானவர் எவ்வாறு போதனை செய்கிறாரோ அவ்வாறே இது எழுதப் பட்டுள்ளது. பிரியமானவர்களே, அன்பானவர் களே, நண்பர்களே என்ற வார்த்தைகள் அடிக்கடி வந்து வந்து உங்களை நூலில் கூறப்பட்டுள்ள விடயங்களில் ஊன்றிக் கவனஞ் செலுத்த வைக்கின்றன. மேலும் எழுத்தாளர் உங்களோடு நேரில் பேசுவது போன்ற பிரமையையும் ஏற்படுத்துகிறது. இது ஒரு நல்ல யுக்தி என்றே எனக்குத் தோன்றுகின்றது. மேலும் இங்கு கூறப்பட்டுள்ள விடயங்கள் வாசகர்களுக்குத் தென்பையும், நம்பிக்கையை யும், ஆன்மீக நாட்டத்தையும் அளிப்பனவாக அமைந்திருப்பதும் ஒரு சிறப்பு. எனவே இதை வயது வித்தியாசமோ, நிற, மத பேதமோ இல்லாது யாவரும் படித்துப் பயன் பெறுவது நல்லது.

இனி இந்நூலில் கூறப்பட்டுள்ள பல்வேறு விடயங்கள் பற்றிப் பார்ப்போம். இந்நூல் 12 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன - வாழ்வு, அன்பு, விழிப்புணர்வு, ஏற்புடைமை, அங்கீகாரம், மன்னிப்பு, புரிந்துணர்வு, விசுவாசம், நம்பிக்கை, தகுதி, சேவை, அமைதி. இவையாவும் மனிதனின் ஐம்புலன்களோடு தொடர்புடைய அகநிலைப் பருப்பொருட்கள் என்பது தெளிவு. எனவே இவற்றை விளக்குவதும், விவரிப்பதும் இலேசான விடயமல்ல. ஆனால் இவை பற்றிய விளக்கங்களும் உதாரணங்களும் சிறப்பாக கூறப்பட்டுள்ளன. எனவே இது ஒரு உளஞ்சார்ந்த உளவியல் சார்ந்த ஆன்மீக வழிகாட்டி நூல் எனக் கூறலாம். இந்நூலை வாசிப்பதற்கு முன் நீங்கள் உங்களைத் தயார் செய்து கொள்வது



நல்லது என நான் கருதுகிறேன். அதாவது ஒரு நாவலைப் போன்றோ அல்லது ஒரு சிறுகதை போன்றோ இதனை நீங்கள் இலகுவாக வாசிக்க முடியாது. ஒவ்வொரு சொல்லையும் ஒவ்வொரு வசனத்தையும் ஆறுதலாக வாசித்து நன்கு விளங்கிக் கொண்டுதான் நீங்கள் தொடர வேண்டும். ஏனெனில் கூறப்பட்டுள்ள விடயங்கள் யாவும் கனதியானவையும் பொருள் பொதிந்தவையும் உள்ளத்தால் வாசிப்பு ஆமை வேகத்தில் போக வேண்டியது அவசியம். உங்கள் ஆளுமையை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற ஆவல் உங்களுக்கு இருந்தால் நீங்கள் அவ்வாறு தான் செல்ல வேண்டும். அவசரமான வாழ்வில் ஆற அமர இருந்து அமைதியாக வாசித்துப் பயன்பெற இது ஒரு அருமையான நூல் என்பது எனது அபிப்பிராயம். மாதிரிக்கு சில விடயங்களை உங்களுக்குத் தருகிறேன்.

1. புதிய பிரச்சினைகளும் அவற்றைச் சமாளிப்பதும்.
2. உங்கள் குறைநிறைகளைக் காகிதத்தில் எழுதுதல்.
3. இறைபக்தியின் மகிமை.
4. ஆழ்மனதிலிருந்து வெளிவரும் சிந்தனைகளையும் உணர்வுகளையும் அலசி ஆராய்ந்து தீயவற்றை மாற்றியமைத்து

தொடர்ச்சி 32ஆம் பக்கம்

**HomeLife GTA Realty Inc., Brokerage***

Independently owned & operated

**"Dream is yours responsibility is ours"**

• எமது நிறுவனத்தின் வீட்டு முகவர்கள் மூலம் வீடு, மனை, வியாபார நிலையம், வியாபாரம் வாங்குவதன் அல்லது விற்பதன் மூலம் நீங்களும் அதிர்ஷ்டசாலி ஆகலாம்.










• some conditions may apply

To Join the Success full & Respectful Team

Please Call @ 416.321.6969 / 905.712.2666

www.homelifegtarealty.com Email: gtarealty@gmail.com

1711 McCowan Rd. #206, Toronto / 145 Traders Blvd # 29, Mississauga

SAMY & SONS GRAND SALE சாமி அன் சன்ஸ் மாபெரும் மலிவு விற்பனை

# சாமி அன் சன்ஸ்

## ரெக்ஸ்ரைல்ஸ் அன் (F)பான்ஸி

ஆகஸ்ட் 26ம் திகதி தொடக்கம் செப்டம்பர் 27ம் திகதி வரை

16வது ஆண்டு விழாவை முன்னிட்டு
ரொறன்ரோ மாநகரம் இதுவரை கண்டிராத
மாபெரும் மலிவு விற்பனை

☑வரவேற்பு
☑விலை
☑தரம்
☑தெரிவு

**25% - 75%**
இந்த விசேட தள்ளுபடி விற்பனை தினங்களில்
$100 க்கு மேல் கொள்முதல் செய்பவர்களுக்கு
Special Discount Coupon வழங்கப்படும்


Roti Maker
$38.99

10 Cups Rice Cooker

$24.99

### பெண்களுக்கான உடைகள்

| | | |
|---|---|---|
| Saree Underskirt | 3 for | $ 9.99 |
| சாறி பிளவுஸ் | 3 for | $ 9.99 |
| Batic Gown (Indonesia) | 3 for | $ 9.99 |
| Senorita & Angelina (Bra) | 3 for | $ 9.99 |
| Skirt & Blouse | 2pcs | $ 24.99 |
| Frocks (Indonesia) | | $ 14.99 |
| Maternity Frock | | $ 13.99 |
| பஞ்சாபி உடைகள் | | $ 9.99 |
| Bangalore Silk Saree | | $ 19.99 |
| Fashion Saree Blouse | | $ 6.99 |
| Skirt (Indonesia) | | $ 8.99 |
| கனகாம்பர மாலை கழுவக்கூடியது | | $ 1.99 |
| Hair Bun | | $ 1.99 |
| முடி மயிர் | | $ 1.99 |
| சாறி குஞ்சம் | | $ 0.99 |

### ஆண்களுக்கான உடைகள்

| | | |
|---|---|---|
| Men Lunkies | 3 for | $ 9.99 |
| Baniyan | 3 for | $ 9.99 |
| Underwear | 3for | $ 3.99 |
| Singapore Denim Pants | | $14.99 |
| Singapore Pants | | $14.99 |
| T-Shirt | | $ 8.99 |
| Men Shirts | | $ 8.99 |

2009 இற்கான புதியவரவுகளில் சில பட்டு சேலைகள், பான்சி சேலைகள், லங்கா சூட், அனார்கலி, பட்டேலா, டான்சிங் சுரிதார், பான்சி நகைகள், பரதநாட்டிய உடைகள், மிருதங்கம், தபேலா, வயலின், சுருதிப்பெட்டி, கரம்போட், இடியப்ப மெசின், Sumeet, Preethi, Bajaj Grinders, Roti Maker, Press Cooker இன்னும் எண்ணிலடங்கா பல பொருட்கள் மிக மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

அத்துடன் துரித பணமாற்றுச் சேவை, கதிரைகள், மேசைகள், மேடை அலங்காரங்கள், குத்துவிளக்குகள் வாடகைக்கு உண்டு.

திருமணம், பிறந்தநாள், பூப்புனித நீராட்டு விழா போன்ற வைபவங்களுக்கு தேவையான அன்பளிப்புப் பொருட்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.




### சிறுவர்களுக்கான உடைகள்

| | |
|---|---|
| Pants & Shirts (USA) | $18.99 |
| Party Frock | $18.99 |
| பட்டுப்பாவாடை சட்டை | $18.99 |
| பான்ஸ் & சேட் (Indonesia) | $12.99 |
| பஞ்சாபி | $ 9.99 |
| குர்தா பியாமா | $ 8.99 |
| Children's T. Shirts | $ 6.99 |

### பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| அடுக்குச்சட்டி தடிப்பானது | (24Pcs) | $39.99 |
| நிறைகுடம் Set | (9Pcs) | $24.99 |
| அடுக்குச்சட்டி கைபிடியுடன் | (6Pcs) | $16.99 |
| ஐஸ்கிறீம் Cup Set | (13Pcs) | $13.99 |
| ஸ்ரீமர் | | $14.99 |
| இட்லிச் சட்டி | | $13.99 |
| பிட்டுக் குடம்(கைபிடியுள்ளது) | | $ 9.99 |
| மில்க் குக்கர் | | $ 9.99 |

### ஏனையவை

| | |
|---|---|
| Citizen Watch (Temperature) | $124.99 |
| Citizen Watch (Ladies & Gents) | $ 49.99 |
| Rice Cooker Sanyo (10cups) | $ 38.99 |
| பாய் Double | $12.99 |
| Charlie Perfume | $ 9.99 |
| Jasmin Perfume | $ 7.99 |
| கார் (Reverse Hone) | $ 7.99 |
| CD இசைத்தட்டுக்கள் | $ 1.99 |
| மிருதங்கம் | $174.99 |
| சுருதிப்பெட்டி | $69.99 |



**Preethi, Bajaj Grinders On Sale $169.99**



**Tel: 416-298-1598 Fax: 416-298-2849**
**1884B KENNEDY ROAD, SCARBOROUGH**

SAMY & SONS GRAND SALE சாமி அன் சன்ஸ் மாபெரும் மலிவு விற்பனை

SAMY & SONS GRAND SALE SAMY & SONS GRAND SALE சாமி அன் சன்ஸ் மாபெரும் மலிவு விற்பனை

# BASEMENT RENT

**VICTORIAPARK & ELLESMERE**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, laundry. Close to TTC, stores, mall & more. Avail. immediately
தொடர்புகளுக்கு: 416.576.2655 / 416.444.2655/ 416.844.2655

**McCOWAN & DENISON**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking. Close to TTC, YRT, Park, school, etc. Avail. immediately.
416.816.4311 / 905.948.0136

**NEILSON & FINCH**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, cable, washer & dryer. Close to school, TTC, mall. Avail. immediately. Also 1 room available in main floor.
647.833.7492/ 416.298.7492

**WARDEN & MCNICOLL**
Newly renovated 1 bedroom bsmt. apt. for rent. 5 year old house. Sep. entrance. sep. washer & dryer, cable. Close to Earnest McMillan & Beverly Glen School, mall & bus. Avail. October 01, 09.
தொடர்புகட்கு: 416.494.0850

**KENNEDY & STEELES**
1 Bedroom bsmt. for rent. Sep. entrance. Parking, laundry. Close to TTC, mall, etc. Avail. September 01st, 2009.
தொடர்புகளுக்கு: 905.479.9722

**WARDEN & FINCH**
1 Bedroom bsmt. apt for rent. Attached washroom. Sep. entrance. Parking, cable & laundry. Close to school, mall, doctors & bus. Avail. immediately. பெண்கள், வயதானவர்கள் அல்லது சிறு குடும்பம் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.519.0505

**NEILSON & SHEPPARD**
2 Bedroom walk out bsmt for rent. Parking, utilities inclu.. Close to bus, school, shopping, Centennial college, Scarborough campus . Couple / single preferred. Avail. immediately.
416.913.4094 / 647.237.4094

**BRIMLEY & EGLINTON**
1Bedroom in bsmt. for rent with all facilities. Sep. entrance, parking, laundry. Close to TTC, school & stores. Avail. immediately.
தொடர்புகட்கு: 416.577.7757

**McCOWAN & DENISON**
New 1 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking, laundry & cable. Close to all amenities. Avail. immediately.
905.472.8156 / 647.403.6268

**EGLINTON & MIDLAND**
**DANFORTH RD. & MIDLAND**
2 Bedroom bsmt. for rent. Big living room, full kitchen, full washroom. Bachelor working people. Non smoker. No pets. Avail. September 01, 09.
தொடர்புகளுக்கு: 647.342.5075

**NEILSON & FINCH**
2 Bedroom bsmt. apt for rent. Sep. entrance. Parking & laundry. Close to Malvern Mall, school & TTC. Avail. October 01, 09. Family or ladies Preferred.
தொடர்புகளுக்கு: 416.951.7645

**McCOWAN & ELSON**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance, parking, laundry, cable, TVI included. Close to TTC, school. Family preferred. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.737.3891

**MORNINGSIDE & STAINES**
**1** Bedroom bsmt. apt. for rent. Newly renovated. Sep. entrance. Parking, utilities. Close to ttc, mall, hwy 401, Scarborough campus. Avail. September 01, 09. Couple preferred.
தொடர்புகளுக்கு: 416.509.0102

**MCCOWAN & ELSON**
Newly renovated 1 large bedroom bsmt apt. for rent. Sep. entrance. Parking, laundry. Close to TTC, School. Avail. immediately.
416.357.1097 / 905.472.5570

**NEILSON & SHEPPARD**
1 bedroom bsmt Apt. for rent. Sep. entrance, parking, laundry. Avail. September 01, 09. Close to ttc, hwy 401, mall, schools, etc.
தொடர்புகளுக்கு: 416.846.6258

**MARKHAM & BRIMORTON**
2 Bedroom bsmt. for rent. Sep. entrance. Inclusive all bills. No Parking. Close to all facilities. Also can provide separate rooms.
416.439.6080 / 416.906.5331

**FINCH & KENNEDY**
2 Bedroom bsmt. for rent. Including bills, cable, parking. Close to TTC, school park, tamil stores, temple. Avail. September 01, 09.
தொடர்புகளுக்கு: 416.558.8562

**SCAR. GOLF CLUB & LAWRENCE**
ஒரு படுக்கை அறை கொண்ட Bsmt Apt. வாடகைக்கு உண்டு. Kitchen, living room, washroom, sep. entrance. Close to ttc, shopping, etc. தொடர்புகளுக்கு: 416.320.6156

**BRIMLEY & STEELES**
2 Bedroom basement Apt. for rent. Rent. Sept. entrance. Parking, bills inclusive. Close to TTC, mall, school & shopping.
416.335.3172 / Cell: 647.866.9464

**McCOWAN & STEELES**
1 Bedroom bsmt. for rent. Parking, cable, laundry. Couple or ladies preferred. Close to TTC, YRT, shopping centre, school, etc. Avail. September 01, 09.
தொடர்புகளுக்கு: 416.903.2437

**NEILSON & MORNINGSIDE**
2 Bedroom bsmt. apt for rent. Sep. entrance. Parking. Free cable. All bills inclusive Close to Mall, school, TTC, Uof T.
416.299.3529 / 647.808.3529

**McCOWAN & ELSON**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking. Close to TTC, YRT, shopping centre, school, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.268.1739

**MIDDLEFIELD & STEELES**
1 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking. Close to bus, shopping, doctors & many more. Avail. immediately. Also 1 room available at ***KEENNEDY & DENISON***
தொடர்புகளுக்கு: 416.878.5144

**WARDEN & FINCH**
1 bedroom bsmt. apt. for rent. Ladies preferred. All bill inclusive. Close to Shopping mall, bus, schools, bank & all amenities. Avail. October 01, 09. தொடர்புகளுக்கு: 416.492.6819 leave message

**MORNINGSIDE & SEWELLS**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc. தொடர்புகளுக்கு: 416.708.2377

**MIDDLEFIELD & DENISON**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, laundry, utilities inclu. Close to bus, shopping, school, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.201.4812

**WARDEN & ELLESMERE**
2 bedroom bsmt for rent - bungalow house. Sep. entrance. 4 pc washroom, parking. Wood & carpet. Avail. immediately. Close to ttc, hwy 401, mall, public & catholic schools, stores. 416.510.6932 / 416.819.6431 weekdays after 6:30pm / weekends anytime

**MARKHAM & LAWRENCE**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, laundry. Close to TTC, tamil stores, malls, doctors & more. Avail. September 01st, 2009. Also 1 room with food available for students. தொடர்புகட்கு: 647.219.4558

**BELLAMY & LAWRENCE**
1 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, cable, internet, washer & dryer. School in front, Close to TTC, Cedarbrae mall. Avail. September 01st, 09.
தொடர்புகட்கு: 416.431.5062

**TAPSCOTT & McLEVIN**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, laundry. Behind Malvern Mall. Doctors & TTC near by. Avail. immediately. Also 1 room available for rent.
தொடர்புகட்கு: 416.754.8947

**FINCH & NEILSON**
2 Bedroom bsmt for rent. Kitchen, laundry, sep. entrance for immediate rent. Minute walk to school & bus. Suitable for couple or small family. Affordable rent.
தொடர்புகட்கு: 647.830.1915

**EGLINTON & MIDLAND**
2 Bedroom walk-out bsmt. for rent. Parking, cable & laundry. Close to kennedy subway. All facilities close by. Avail. immediately.
647.886.3920/905.471.0958

**McCOWAN & DENISON**
Brand new 1 bedroom thermally insulated bsmt. apt. for rent. Living & dining rooms. Sep. entrance. Parking, cable, internet & laundry & utilities inclusive. Single or couple preferred. Close to TTC & YRT. Avail. immediately.
905.948.9574/647.239.9088

**MIDDLEFIELD & FINCH**
1 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking, cable & laundry.Close to mall, school, Aiyappan temple & tamil stores. Avail. immediately. பெண்கள் விரும்பத்தக்கது.
416.299.5871 / 416.562.0781

**BIRCHMOUNT & EGLINTON**
1 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Close to bus, school, many stores & subway. Convenient location. Avail. immediately.
தொடர்புகட்கு: 416.906.8086

**KENNEDY & EGLINTON**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Living, dining kitchen with stove & fridge. Parking & washer. Walk to subway,TTC & banks.Suitable for couple. Avail. immediately.
416.285.4695 (call after 6 pm)

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

**VICTORIA PARK & FINCH**
2 Bedroom walk-out bsmt. for rent. Parking, cable & laundry. Utilities inclusive. Close to TTC, school. Avail. September 1st, 2009.
தொடர்புகட்கு: 416.499.6893

**BRIMLEY & LAWRENCE**
1 Large bedroom bsmt. apt. for rent. Large living room. Sep. entrance, parking, laundry. Steps to school, mall & TTC. Avail. immediately.
416.799.3221/647.344.2435

**WARDEN & SHEPPARD**
1 bedroom bsmt apt. for rent. Sep. entrance. Parking, cable, laundry. Close to 24 hrs bus, stores, etc. Couple /single preferred.
தொடர்புகளுக்கு: 416.494.7547

**McCOWAN & DENISON**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Washer, dryer, internet, cable & parking. Close to mall, TTC, tamil stores & hospital. Avail. immediately.
தொடர்புகட்கு: 905.554.2496

**LAWRENCE & MORNINGSIDE**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to TTC, school, mall, & library. Avail.immediately
416.724.7595/416.998.2760

**MARKHAM & SHEPPARD**
2 Bedroom walk-out bsmt.apt. for rent. Sep. entrance. Parking, cable & laundry. Close to TTC, Spiceland grocery store, School. Avail. September 01, 09. Also 1 room avail. for rent.
416.291.9964 / 416.520.2754 cell

# CONDO. FOR RENT

**KENNEDY & HWY 401** பகுதியில் அமைந்துள்ள Condo. தொடர்மாடியில் 3 Bedroom October 01st இல் இருந்து வாடகைக்கு உண்டு. Cable, washer & dryer all inclusive. Close to TTC, Shopping mall, substation, school, etc.
தொடர்புகளுக்கு: Mohan-416.419.5790

**FINCH & NEILSON**
2 Bedroom condo. for rent. One Under ground parking, including all amenities.Near Malvern Mall. Avail. immediately.
தொடர்புகட்கு: 416.904.2844

# JOB JOB JOB

**KENNEDY & ELLESMERE** சந்திப்புக்கு அருகாமையில் அமைந்துள்ள தமிழ் சுப்பர் மார்கட் ஒன்றிற்கு மீன் பகுதிக்கு வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. மேலதிக
தொடர்புகளுக்கு: 647.430.8238

# DAYCARE AVAILABLE

**MARKHAM & DENISON**
Well experienced, First Aid trained lady. Limited space. School drop-off & pick-up. Space available for kids on summer holidays.
தொடர்புகட்கு: ***905.209.7012***

# VAN FOR HIRE

***WEDDING, AIR PORT, TEMPLE, SPECIAL OCCASION*** போன்ற தேவைகளுக்கும்
Limousine தேவைகளுக்கும்
அழையுங்கள் ***416.835.6951***

மேலும் பக்கங்கம் 21, 23

# ROOM RENT

**McCOWAN & FINCH**
1 room available. Parking, Avail. immediately. Close to ttc, stores, etc.
416.720.5933/416.564.8119

**MIDLAND & SHEPPARD**
ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. full washroom, parking, laundry. Avail. immediately. Close to bus, RT, mall, school.
தொடர்புகளுக்கு: 416.266.4789 / leave message/ 416.980.5697 8:00am - 4:00pm

**SHEPPARD & MEADOWVALE**
1 bedroom for rent in a 3 bedroom house. 2 washrooms, parking, utilities inclu. Close to school, shopping, TTC 5 minutes walk.
தொடர்புகளுக்கு: 647.883.3492

**WESTON & RUTHERFORD**
Master bedroom வாடகைக்கு உண்டு. Full furnished room. Sep. washroom, parking, laundry. Avail. immediately. Close to bus, school, shopping. 416.266.4789 / leave message/ 416.980.5697 8:00am - 4:00pm

**BRIMLEY & LAWRENCE**
1 Room in basement for rent. Sep. entrance & parking, laundry. Close to TTC, stores & other facilities. Very quiet place. Avail. October 01, 09. தொடர்புகளுக்கு: 416.264.8177

**WARDEN & SHEPPARD**
ஒரு அறை basement ல் 2 நேர சாப்பாட்டுடன் வாடகைக்கு November 1st, 2009 இல் இருந்து உண்டு. எல்லா வசதிகளும் அண்மையில் உண்டு. அழையுங்கள்
416.299.4895 / 416.201.1222

**NEILSON & FINCH**
1 Room for rent in a bsmt with meal. Sep. entrance. Parking cable & laundry. Close to Malvern Mall, school, TTC. Avail. immediately. ஆண்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகட்கு: 416.298.9913

**MARKHAM & LAWRENCE**
Master bedroom for rent. Cable inclusive. Close to TTC & plaza. Room $275
416.439.4076/416.728.0807

**MARKHAM & STEELES**
Room for rent. 1 meal optional. ஒரு அறை உடனடியாக வாடகைக்கு உண்டு. விரும்பினால் ஒருநேர சாப்பாடு தரப்படும். Close to nofrills and many malls, TTC & YRT. Avail. immediately.
416.951.0034/905.294.7026

**1 Room in condo. townhouse**
for immediate rent. Internet & cable available. Close to TTC, University, Centennial College, mall, HWY & tamil stores. Ladies preferred. call: 416.388.5484
MORNINGSIDE & ELLESMERE

**TAPSCOTT & NEILSON**
1 Room in main floor for rent. Parking, laundry, cable & internet. Close to malvern mall & TTC. Ladies preferred. Rent negotiable. Avail. immediately.
தொடர்புகட்கு: 416.283.9817

**KENNEDY & EGLINTON** சந்திப்புக்கு அருகாமையில் அமைந்துள்ள BSMT இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance, parking, cable. No alcohol, no smoking. Avail. anytime. Rent $375. Close to bus, Kennedy subway, stores, etc.
647.290.8636 / leave message

**NEILSON & ELLESMERE**
Room for rent. Sep. kitchen, sep. entrance. Parking, utilities inclu. Close to TTC, bank, hosipatal, food basic, etc. Avail. immediately.
தொடர்புகட்கு: 416.284.9129

**NEILSON & FINCH**
அறை உடன் வாடகைக்கு உண்டு. தனி குளியலறை. சமைக்கும் வசதி அல்லது உணவு தரலாம். வயதான பெண்கள் விரும்பத்தக்கது. குறைந்த வாடகை.
தொடர்புகட்கு: 416.554.4416

**9th LINE & 14TH AVENUE**
1 large Bedroom for rent. Attached washroom. Parking, cable, internet, utilities inclu. Close to shopping. Avail. immediately. Couple or பெண்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகட்கு: 416.828.7822

**HURONTARIO & DUNDAS**
1 Bedroom in an apt. for rent. Parking & cable available. Close to all facilities. Ladies only. Avail. immediately.
தொடர்புகட்கு: 905.279.4960

**MARKHAM & SHEPPARD**
1 Room for rent. Parking available. Close to 3 schools, TTC, many malls. Ladies or elders preferred. Avail. immediately.
தொடர்புகட்கு: 416.754.7172

**MARKHAM & SHEPPARD**
1 Room in condo for rent with all facilities. All amenities close by.
Avail. immediately. Call: 416.412.7582

**DANFORTH & EGLINTON**
Shared Room for rent in bsmt. Another room available for a lady in main floor. Close to bus, stores, 5 min. to Kennedy subway. Males only. Avail. immediately.
தொடர்புகட்கு: 647.201.3111

**LAWRENCE & BELLAMY**
Room in main floor for rent. $350. Room in bsmt. for $290. TTC at door step. Avail. immediately.
416.289.3459 / 416.433.0491(cell)

**2** நேரச் சாப்பாட்டுடன் (**2 meals)** நாலு அறைகள் கொண்ட **BSMT** இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. **Free internet.** ***Close to all*** facilities. Avail. immediately.
**PHARMACY & LAWRENCE**
தொடர்புகட்கு: 416.288.0303

**MORNINGSIDE & McLEVIN**
2 அறைகள் உடன் வாடகைக்கு உண்டு. இணைந்த தனி குளியலறை. எல்லா வசதிகளும் அண்மையில் உண்டு. பெண்கள், வயதானவர்கள், சிறு குடும்பம் விரும்பத்தக்கது. விபரங்கட்கு:
416.732.6931/416.281.9888

**BRIMLEY & STEELES**
தனி வீடு ஒன்றின் மேல் தளத்தில் அறை ஒன்று வாடகைக்கு உண்டு. Parking, Laundry, cooking facilities. Close to bus, school, தமிழ் கடைகள். Avail. immediately.
தொடர்புகட்கு: 416.844.7550

**NEILSON & TAPSCOT**
1 Room for rent. Meals on request. Internet, parking. Cooking facilities. Close to Centennial College. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகட்கு: 647.500.6409

**McCOWAN & LAWRENCE**
Room for rent in bsmt. Sep. entrance.Parking. Close to hospital, tamil stores, 2 min. to bus. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.885.0454

**BIRCHMOUNT & MCNICOLL**
அறைகள் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் வாடகைக்குக் கொடுக்கப்படும். Attached washroom, Double garage. Close to everything.
Call: 416.335.8055/905.294.2674

# TEACHER/TUTOR WANTED

***Neilson & Mclevin***
Experienced English Teacher for Spelling Bee preparation wanted.
More information: 416.281.2105
Call After 6:00pm

## *SALE! SALE!! SALE!!!*

இந்தியாவில் இருந்து புதிதாக தருவிக்கப்பட்ட பெண்களுக்கான நவீன ஆடை வகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. தொடர்புகளுக்கு:
416.400.7398 / 905.201.6791

## CAR FOR SALE

2004 Honda Civic LX car for sale. 4 door. 96,000 km, fully loaded. Gray mist.
Pl. call: 416.319.1106

# TUTION CLASSES

Maths, English, Science, Art & Tamil.
(JK – Gr. 3) Preparation for next grade.
• Homework help • Flexible time.
1 to 1 or group classes.
Call: 905.554.2496

# CARE GIVER WANTED

***WARDEN & STEELES***
Live-in trust worthy care giver wanted to look after elderly lady. வயது வந்த அம்மாவை பராமரிக்க நம்பிக்கையான பெண் தேவை.
விபரங்கட்கு: 905.946.9456
Weekdays 6:00pm - 9:00 pm/ Weekends 9:00Am - 8:00pm

# SCHOOL TRANSPORTATION

***BRIMLEY & HUNTINGWOOD***
பகுதியில் அமைந்துள்ள பாடசாலைக்கு உங்கள் பிள்ளைகளைக் கூட்டிச்செல்ல வேண்டுமா?
தொடர்புகளுக்கு: 416.274.9726

# HOUSE FOR RENT

**MARKHAM & ELLESMERE**
3 Bedroom bungalow house or 2 bedroom bsmt. for rent. Parking & laundry. Close to Woburn Collegiate. Avail. immediately.
Contact:416.266.5440

**MARTIN GROVE & STEELES**
3 Bedroom house with 1 Bedroom basement for rent. Detached house. 3 washrooms. Parking. Availlable immediately.
தொடர்புகளுக்கு: 416.230.2318

**KENNEDY & ELLESMERE**
4 Bedroom Town house for rent. Garage parking. Available immediately. Close to highland farm, 24 hrs. TTC, Tamil stores, etc.
தொடர்புகளுக்கு:: 416.298.1598

**WARDEN & FINCH**
4 Bedroom house with basement for rent. Rent $1500. Available immediately.
Contact: 416.458.0537

**MORNING & McLEVIN**
3 Bedroom house for rent. Close to Junior & High school, TTC & stores. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும். உடன் வாடகைக்குண்டு.
416.286.3544/647.836.3440
( Leave Mesage)

**MORNINGSIDE & MCLEVIN**
3 bedroom house for rent main floor. Living room, kitchen, Parking. Small family preferred. Close to everything. பிறந்த குழந்தையையும் தாயையும் வீட்டில் வந்து பராமரிக்கக் கூடிய பெண் தேவையா?
416.724.1837 / 416.357.5683

# மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தில், வேளாளர் குலத்தில் பிறந்து, தற்போது பிரான்ஸில் நிரந்தர பிரஜையாக வசிக்கும் 5'.8" உயரமும், 37 வயதும் உடைய ஆணுக்கு பொருத்தமான பெண் தேவை, மூலம் 4ம் பாதம்.
விபரங்கட்கு: 416.284.8369

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
***www.vlambaram.com***

மேலும் பக்கங்கம் 20, 23


# TENNIS LESSONS

By Australian certified, U.S trained professional former Srilankan Davis cup player and Coach catering for Scarborough, Markham & Richmond Hill Areas. 36 years of experience. Group Classes & Private Coaching Possible. Pl. Call: **David Selvadurai**
**416.495.1277/416.436.1765**



# ► K. G. S. MOVING ◄

**MOVING & DELIVERY**

- House
- Appartment
- Office
- Basement

- Toronto
- Kitchener
- Ottawa
- Montreal

Call: Sasi -☎: **416.844.7274**



# கணினி எண்...

05ஆம் பக்கத்தொடர்ச்சி

எண்ணைவிடக் கூடுதலாக இருக்கும்படி இரண்டின் சிறிய மடிப்பைக் கண்டுபிடிக்க வேண்டும். அத்தனை இலக்கங்கள் இருக்கும் எடுத்துக்காட்டாக 23 என்ற எண்ணில் 5 இலக்கங்கள் இருக்கும். $16 < 23 < 32$

$$2^4 < 23 < 2^5$$

இந்த முறையில் ஒரு எண்ணை இருநிலை முறையில் எழுதாமலேயே அதில் எத்தனை இலக்கங்கள் இருக்கின்றன என்பதைக் கண்டறியலாம். எடுத்துக்காட்டாக 36ஐ எடுத்து கொள்வோம். இங்கு $32 < 36 < 64$ $2^5 < 36 < 2^6$. ஆகவே 36 இன் இருநிலை எண்ணில் 6 பிட்டுகள் இருக்கும்.

## இரண்டின் மடிப்புகளின் கூட்டல்

ஒரு பதின்மநிலை எண் எந்தேந்த இரண்டின் மடிப்புகளின் கூட்டு தொகை என்பதை கண்டுபிடிப்பதன் மூலம், தேவையான இலக்கங்களை பெறலாம். எடுத்து காட்டாக 36ஐ எடுத்து கொள்வோம்.

1. இந்த எண்ணைவிடச் சிறியதாக அல்லது சமமாக இருக்கும்படி இரண்டின் மடிப்பை கண்டுபிடிக்கவும். $36_{10} > 32_{10}$
2. அதனால் 32க்கான இடத்தில் 1என வைக்கவும். அத்துடன் கொடுத்து எண்ணிருந்து இந்த இரண்டின் மடிப்பைக் கழிக்கவும். $36 - 32 = 4$
3. 32க்கு அடுத்த இரண்டின் மடிப்பான 16 மீதியை (4) விட அதிகம். அதனால் 16ஐ 4இல் இருந்து கழிக்க முடியாது. அதனால் 16க்கான இடத்தில் 0 என வைக்கவும்.
4. 16க்கு அடுத்த இரண்டின் மடிப்பின் மதிப்பு 4 இதை மீதியில் (4) இருந்து கழிக்க முடியும். மீதி 0 அதனால் 4 இன் இடத்தில் 1 என வைக்கவும்.

5 மீதி 0 என்பதால் மற்ற எல்லா இரண்டின் மதிப்புகளான 2 ($= 2^1$), ($1 = 2^0$) என்ற இடங்களிலும் 0 என வைக்கவும் எனவே $36 = 100100_2$ மற்றும் மடிப்புகளை இவ்வாறு எழுதலாம்.

***32 16 8 4 2 1***
***1*** — ***36 - 32 = 4***
***32 16 8 4 2 1***
***1 0 0 1*** — ***4 - 4 = 0***
***32 16 8 4 21***
***1 0 0 1 0 0*** — ***$36_{10}$ = 1001002***
***32***

அடுத்த இதழில் நாம் காண இருப்பது பதின்ம நிலை பின்னம் இருநிலைக்கும் மாற்றம் என்ற கணித வழிமுறைகளை ஆகும்.

# ஒன்ராரியோ...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

பழகவும் முடியாது.

**ஆனால் இங்கு பரீட்சை நிலையங்களின் வேலை நிறுத்தம் என்பது தொடர்ந்தால் இவ் அனுமதிப்பத்திரம் காலவதியாகும் நிலையில் உள்ளவர்கள் வீதி பரீட்சைக்கும் தோற்ற முடியாத நிலையில் என்ன செய்ய முடியும்?**

அதற்காக மாகாண அரசு விசேட ஒரு சலுகையினை அவரசர சட்ட மூலமாக தற்காலிகமாக உருவாக்கியுள்ளது. அதாவது இவ் வேலை நிறுத்த காலங்களில் G(1) மற்றும் G(2) அனுமதிபத்திரம் காலாவதியாகும் நிலைக்கு உள்ளாக வேண்டியவர்களின் அனுமதிப்பத்திரம் தொடர்ந்து, அனுமதிப்பத்திரம் எதுவித பதிவும் மேற்கொள்ளாத நிலையில் வேலை நிறுத்தம் முடிந்து வீதி பரீட்சைக்கு தோற்றும் வரை நீடித்ததாகக் கருதி உபயோகித்துக் கொள்ளலாம். இவ் வேலை நிறுத்த காலத்தில் காலாவதியாகின அனுமதிப்பத்திரத்துடன் வாகனம் செலுத்துகின்றார் என பொலீசார் பிடித்தாலும் அதனை நீடிக்கப்பட்ட அனுமதிப்பத்திரமாகவே கருதப்படல் வேண்டும் என்பது கனடா, அமெரிக்கா முழுவதும் வாகனம் செலுத்த அனுமதிக்கும் அதிகார எல்லைக்குள் உள்ள சகல பொலீஸ் கண்காணிப்பாளருக்கும் அறிவிக்கப்பட்ட செய்தியாகும்.

ஆனால் இங்கு ஒரு முக்கியமான விடயம் G சாரதி அனுமதிப்பத்திரம் (Fully Graduated License) வைத்திருப்பவருக்கு அவர்களின் பத்திரம் காலாவதியானால் இவ்விசேட சட்டம் பொருந்தாது. இப் பத்திரத்துக்கு உரியவர்கள் இவற்றினை புதுப்பிப்பது மாகாண அரச அலுவலகங்களில் ஆகும். அவ் அலுவலகங்கள் வேலை நிறுத்தம் இல்லாது இயங்கி கொண்டேயுள்ளன.

இது தவிர வீதி பரீட்சைக்கு திகதி நிர்ணயம் செய்தவர்கள் அதனை 48 மணித்தியாலாத்திற்கு முன்னர் தோன்றவில்லையானால் ரத்து செய்ய வேண்டும். இல்லையேல் அதற்கு ஒரு பணதண்டனை அறவிடுவது வழமையாகும். ஆனால் இவ் வேலை நிறுத்த காலங்களில் திகதி நிர்ணயம் செய்தவர்களுக்கு இத்தகைய தண்டனை பண பிரச்சினை இல்லை.

வர்த்தகதுறை வாகனம் செலுத்தும் சாரதி அனுமதி பத்திரம் (Truck, School Bus, Public Passenger Bus, Ambulance) வைத்திருப்பவர்கள் இந் நிலையத்தில் இது காலவதியாகும் தினத்துக்கு முன்பு மீண்டும் எழுத்துப்பரீட்டை, வீதிப்பரீட்சைகளை சில சாரதிகள் எதிர்கொள்ள வேண்டி வரும். இவ்வேலைநிறுத்தகத் காலங்களில் இப்பத்திரம் காலாவதியானால் இக்காலவதியான பத்திரத்தினை வலிமையுடைய பத்திரமாக அவர்களும் தொடரலாம்.

இதேபோல எண்பது வயதுக்கு மேற்பட்ட தங்கள் 'சாரதி அனுமதி' பத்திரத்தினை புதுப்பிக்கும் போது கண்டிப்பாக வீதி பரீட்சைக்கு ஒவ்வொரு முறையும் தோற்ற வேண்டும் என்பது மாகாண அரசின் நியதி ஆகும்.

இவ்வேலை நிறுத்த காலத்தில் பத்திரம் காலாவதியாகும் 80வயதுக்கு மேற்பட்டவர்களும், வேலை நிறுத்தம் முடியும் வரை காலாவதியான பத்திரத்தில் வாகனம் செலுத்தலாகும்.


**மேலே குறிப்பிடப்பட்ட தற்காலிகமான சாரதிகளுக்கு வழங்கப்பட்ட அவசர சலுகை என்பது நிஜமானது என்பதனை எப்படி நம்புவது?**
இதனை நம்புவதற்கு இரு வழிகள் தரப்பட்டுள்ளன.

1. வாகன சாரதிகளின் அனுமதிப்பத்திரம் வழங்கும் வாடிக்கையாளர் சேவை பிரிவுக்கு அழைத்து உறுதிப்படுத்துவது. அவர்களின் தொலைபேசி இலக்கம்
***Driver & Vehicle Licensing***
***Call Centre***
***416.235.2999 or 1.800.387.3445***

***2. www.drive test.ca*** அல்லது ***www.mto.ca***
என்னும் இணையதளத்தினுள் போய் இதே தகவல்களை பெறலாம்.



## HOUSE FOR SALE IN CHENNAI



சென்னை - அடையார் பகுதியில் அமைந்துள்ள 1,000 சதுரஅடி பரப்பளவு கொண்ட Condo. Apartment விற்பனைக்கு உண்டு. 3 அறைகளுடன் 1st floor இல் அமைந்துள்ளது. 2 washrooms, 2 balcony. நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம். Close to hospital, shopping, school, bus வசதிகள் கொண்ட இடம்.

தொடர்புகளுக்கு: ***905.554.1245 / anjal_narayan@yahoo.com***

## Preschool

**NEILSON & McLEVIN**

Ready your kids to school. We help them to write, recognize letters & numbers, develop their fine motor skills, physical activities & more. Cheap as $5 per day (2½ hrs). English Tuition also available

Call - ***Sujanthy: 416.332.1254***
***416.844.9178***

## TUTION CLASSES

***McCOWN & FINCH***

Math & Tamil Language ( Jk - Gr.9).
Individual or group classes available. By Qualified, Trained & Experienced teachers
Call: 416.519.4336

## தமிழ் வகுப்பு

பல வருடகாலம் பட்டறிவுள்ள ஆசிரியையால் தரம் 1 - தரம் 12 வரை உள்ள மாணவர்களுக்கு தமிழ் கற்பிக்கப்படும். உங்கள் பிள்ளைகளும் தமிழில் எழுத வாசிக்க அழையுங்கள்.

தொடர்புகட்கு: 905.554.2496

## TUTORING - SCHOOL READINESS CLASSES

*Home base nursery montessori school*

**HURONTARIO & CENTRAL PARK WAY / DUNDAS**



Homework help, Phonics, Reading, Writing, Math, English, Spelling, Science, etc.

Before & After school Pick-up & Drop-off from Fairview Public school Mississauga.

Ages: 1½ to 10 years

***Mississauga - Etobicoke - Brampton - Mon - Friday***
***Scarborough - Markham - Saturday & Sunday***

Contact: ***Gangi,*** ECE / Montessori & Preschool diploma (Peel Private school Teacher)
***Thurai*** , B.A

**905.949.1075**

## BUSINESS FOR SALE

***VARIETY PLUS***

**DONMILLS & McNICOLL**

நல்ல வியாபார நிலையிலும், நிரந்தர வாடிக்கையாளரை கொண்டதும், நல்ல வருமானம் ஈட்டுகின்ற மேற்படி வியாபார நிலையம் விற்பனைக்குண்டு.

விலை $45,000.

416.491.1931/647.281.0846

## உடனடி வேலை வாய்ப்பு

**A1 கொழும்பு போட்டோ & வீடியோ**

முதல்தர அதிக அனுபவம் உள்ள

வீடியோ எடிற்றர், போட்டோ டிசைனர் - **1Hr $15.**

வீடியோ எடுப்பவர் **1Hr $15 +** கமரா **Rent**

போட்டோ எடுப்பவர் **1Hr $15 +** கமரா **Rent**

L. L. 3- 2296 EGLINTON AVE. EAST @ BIRCHMOUNT ROAD,

**Mobile: 416-752-4444 Tel: 416-755-2333**

## ENGLISH CLASSES FOR ALL

◆ **Grades 6 - 12 starting in September 1st week**

AT SCARBOROUGH

◆ By an Experienced Canadian Retired English Teacher Mr. Fred

**To Register call : 416.431.6774 or 647.831.0 070**

## Tutoring - (416) 859 4492

Tutoring - (416) 859 4492

Tutoring - (416) 859 4492

**TRINITY TUTORS**
3482 Lawrence Ave. East, Scarborough, ON)

**Gr.1-12, College & University**
English - French - Math - Science

# TUTORING
**(416) 859 4492**

அடிப்படை அறிவைப் பெறுவதற்கான தகுந்த முறையிலானதும் ஒன்ராறியோ அரசின் பாடத்திட்டத்திற்குமான ஒழுங்கு முறையில் கற்பித்தல்.

**அதியுயர்தரமான சேவை, நியாயமான கட்டணம்**

**Tutoring - (416) 859 4492**

## CARS FOR SALE

- 2001 Toyota Corolla, 73 K
- 1995 Toyota Camry, 143K
- 1995 Chevy Lumina, 145 K



Many more.

Pl. Call:***905.770.2575*** 9:00am - 6:00pm
***416.399.6640*** After 6:00 pm

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
***www.vlambaram.com***

மேலும் பக்கங்கம் 20, 21

## விற்பனையாகின்றது!

***லலிதா புரூடியின்***

### "ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்"



எனும் அரிய நூல்

மனதை கட்டுப்படுத்தி நல்வழியில் செலுத்த, ஆளுமையை வளர்க்க, மனதில் நின்மதியை பெற வாசிக்க வேண்டிய அருமையான நூல்

**கிடைக்குமிடம்: விளம்பரம் பத்திரிகை காரியாலயம்**
**தொலைபேசி இலக்கம்: 416.282.8059**

***GTA Square - 5215 Finch Ave. E., #201***
***Middlefield & Finch***

## COMMERCIAL KITCHEN FOR SALE

NORTH OF ***STEELES & WARDEN***
1335 Sq.ft
Rent w / TM $1735 per month



Full equipment - Walk in Cooler, Hood, Gas Burners, 3 Refrigerators, 2 Freezers, Stem Tables, 3 Compartment Sinks, 3 Work Tables, Shelves.
Lots of free parking

For Appt. Call Ursula: ***905.940.0180***
Cell:***416.554.0930***

# கூதிர்காலக் குலாவல்கள் _ குறுநாவல்

## சென்ற இதழ் தொடர்ச்சி

## vi

வரும்போது இருவரும் பேசிக்கொள்ளவில்லை. தத்தம் சிந்தனையுள் ஆழ்ந்து வந்தனர். சுந்தரி இவர்கள் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தாள். கணவனைக் கண்டதும்,

“என்னங்கோ, முகமெல்லாம் சிலிர்த்துப் போய் இருக்கு. தேவா ஏதும் ஏசிக் கோபப்படுத்தினவரோ” சிரித்துக் கொண்டே கேட்டாள்.

“இந்த ஆற்றோரம் எனக்கு நல்லாய் இருந்தது. ஸ்மோக் பண்ணியபடியே சிறுவர்கள் படகோட்டி (Jet Ski) விளையாடுவதை பார்த்திருந்தேன். இந்த பபாவுக்கு அந்தக் காற்று உதைச்சு முகம் சிவந்து போச்சு. தஸ்ஸ" புஸ்ஸ" என்று மூச்சு விடுகிறாள். குளிர்நாட்டிலை வாழ்ந்து பழகிய இவனுக்கே இப்படியென்றால் எனக்கு எப்படி இருக்கும்? விளைஞ்சு போய் அரக்கி அரக்கி வாறான்”.

சிரித்துக் கொண்டே மூவருக்கும் கோப்பி போடப் போகிறார் திலகராசா. “பகிடி பண்ணாதையுங்கோ. பாவம் அவர். ஆன தேகப்பயிற்சி இல்லை. நான் மடங்கியதோடை உந்தமாதிரியான ஓய்வு நேரத்தைக் கைவிட்டு விட்டார். வழக்கமாகவே வாசிப்பு, தொலைக்காட்சி, ஏதும் கூட்டம், கடைத்தெரு அவ்வளவு தான். முந்தி அவர் மாட்டன் என்றாலும் நான் இழுத்துக் கொண்டு முதியோர் சங்கங்களோடைதான் பொழுது போக்கு. இப்ப தூர இடத்துக்கு வந்து விட்டதாலை அதுவும் போச்சு”.

காப்பியைக் கொடுத்தபின் “தலைவலிக்குது நான் கொஞ்சநேரம் சரிஞ்சு கிடந்திட்டு வாறன், தேவா, நீ பேசிக்கொண்டிரு. மக்கள் பேரன்மார் வந்தால் போலே சாப்பிட்டுப் போகலாம். நான் கொண்டே விடுறன்’.

“ஓ கே! சுந்தரியை எழுப்பிச் சமைச்சுத்தர வைக்கிறதுதானே இனி என் வேலை. ஒரு மாதத்திலே எழும்பி நடப்பா பாருமன். நீயும் பத்து நாத்தல் குறைவாய்”
சுந்தரியின் சிரிப்பு நீண்டநாட்கள் கேளாத ஒன்று.

கட்டிலில் நீண்டு படுத்துக் கொண்டே சென்ற காலத்தில் மூழ்கிப்போனான் திலகராசா. அஞ்சல் அலுவலர் பயிற்சி முடிந்ததும் பொல்கொல்லை என்னும் இடத்துக்கு அவனும்; சிலமைல் தூரத்திலுள்ள ஒரு கிராமத்துக்கு தேவசிகாமணியும் நியமனம் பெற்றார்கள். அங்கே விக்கரமநாயக்கா என்பவர் அதிபராக இருந்தார். அருமையான மனிதர். எடுத்த எடுப்பிலேயே உதவியதிபராக வந்த திலக் அவரது கணிப்புக்குரியவரானார். அவர் எந்த இனப்பாகுபாடும் காட்டாதவர். தமிழ் தபால்காரரோடும் சரிசமமாகப் பழகுவார். ‘திலக்’ கின் புத்திக்கூர்மையை அவர் வியந்தார். சில சமயங்களில் வீட்டுக்கழைத்து சில ஆங்கில அறிவித்தல்களைத் தமிழில் பெயர்ப்பிப்பார். அது துண்டுப் பிரசுரங்களாக அக்கிராமத்து தமிழ் பேசுவோருக்கு வழங்கப்படும்.

ஒருநாள் சில ஆசிரிய பயிற்சிக் கல்லூரி மாணவிகள் அங்கே வந்து அதிபரோடு பேசிக் கொண்டிருந்தனர். திலகராசா அழைக்கப்பட்டார். தம்பி என்றுதான் அழைப்பார்.

“இவர்கள் ஆசிரிய மாணவிகள். ஏதோ ஆய்வுக் கட்டுரை எழுதுகிறார்களாம். அஞ்சல் திணைக்களம் பற்றி எழுத வேண்டுமாம். நீர்தானே புதிதாக படித்தவர். ஒருக்கால் இவர்களுக்கு உதவி பண்ணும். அவர்கள் ஏதும் தருவார்கள் என்று கண்ணைச் சிமிட்டினார்’.

இவனுக்கு உதறல் எடுத்தது. சிங்கள நங்கையர் - அவர்களது அழகும் பந்துக் கொண்டையும் எதற்கும் துணிந்த அச்சமற்றவர்கள் - எனவும் சிறிது காலத்துள்ளேயே கண்டு கொண்டவன். அதற்குள் அவர்கள் காச்சு மூச்சென்று கேள்விகள் கேட்கத் தொடங்கிவிட்டனர். பயிற்சிக்காலத்தில் சிறிது எழுதவும் வாசிக்கவும் கற்றுக்கொண்டானே தவிர, கவுண்டருக்கு வருகிறவர்களுக்கான என்னவேணும், எத்தனை சதத்துக்கு என்பன மட்டுமே தெரியும். ‘மே வறேங்’ என்று தபால்காரனுக்கு சொல்வது போல் சொல்லலாமா? “ஐயா எனக்கு அந்த அளவுக்கு சிங்களம் தெரியாதையா பிளீஸ்”.

**- வாலின்-**

“ஓ! அது ஒரு பிரச்சினை. யாருக்காவது இங்கிலிஸ் அல்லது தமிழ் தெரியுமா? கேட்டார் விக்கிரமநாயகா.

“சிறாணியைக் கேட்பமா சேர். அவ எங்கடை நண்பி சேர்”

‘’HSC யல்லவா படிக்கிறா. எந்த நேரமும் படிப்புத்தான். கேட்டுப் பாருங்கோ அவ ஓம் என்றால் சரி’

எங்கள் குழுவில் ஐந்து பேர் சேர். 6 மணிக்குமுதல் விடுதிக்குப் போக வேண்டும். அதற்குப் பின் ஆயின் நீங்கள் அங்கதான் வரவேணும்.

“சரி நாளைக்கு வாங்கோ. முற்றுச் சொல்கிறேன்”. என்றான் திலக்.

அன்றிரவே ஒரு அட்டவணை தயாரித்தான். அந்தக்குழுவில் ஐந்து பேர் இருந்தமையால் ஐந்து தலையங்கங்களில் கீழ் கட்டுரையை வகுத்தான். பிரதமமந்திரியின் கீழிருந்து வரை-படமாக வேலைத்திட்ட அட்டவணை சாதாரண பிரஜைகள் வரை எப்படி போகிறதெனவும் அவர்களிடமிருந்து பார்சல் கடிதம் எப்படி உரியவரிடம் போகிறது, வெளிநாட்டுக்கு எப்படிப் போகிறது, வரைபடங்களின் கீழ் புகையிரதம், விமானம், பஸ், மிதிவண்டி என பிறிஸ்டல் மட்டையில் செய்து வைத்துவிட்டான்.

செய்துவைத்ததை எல்லாம் அழகுபார்த்து திருப்திப்பட்டுக்கொண்டு மகிழ்ச்சியாகப் படுக்கும் போது சாமம் 1:00 மணி. ஆசிரியர் தொழிலையும் வகுப்பறையையும் மாணவர்களையும் இழந்த தன்னிலைக்காக வருந்திய துக்கமே மேலோங்கி நின்றது.

மறுநாள் மாணவர் வருமுன் திலகராசாவை அழைத்து, “சிறாணி 6 மணிக்குத்தான் ரியூசன் முடிந்து வருவா. அவ உங்களையும் கூட்டிக்கொண்டு கலாசாலைக்குப் போறாவாம். 7.30 மணிக்கு வந்து ஓய்வெடுத்து பின் படிக்க வேண்டுமாம். இறுதியாண்டு பல்கலைக்கழகப் பிரவேச பரீட்சையல்லவோ ஆனாலும் உதவி செய்யப் பின்னிற்கமாட்டா. உமக்கு ‘சிவ்ற்’ முறையென்றால் பெரராவோடு மாற்றி எடும்” என்றார்.

விக்கிரமநாயக்கா மகளை அறிமுகப்படுத்திவைத்தார். பண்பான ஒரு ‘ஆயுபோவன்’ மௌனமாகவே நடந்தனர். ஒருகட்டத்தில் ‘திலக்’ என்ன ஆசிரியர்மார் மாதிரி மட்டைச்சுருளோடு வாறியள்’ குரலைக் கேட்டதும் உள்ளுக்குள்ளே ஒரு உதறல். பேசுவதற்கு முடியவில்லை. நாக்கு அண்ணத்தோடு ஒட்டிவிட்ட மாதிரியான ஓர் உணர்வு. திரும்பவும் “மன்னிக்கவும், உங்களுக்கு சிங்களம் தெரியாதென்று தெரிந்தும்....ஏது இவையெல்லாம் என ஆங்கிலத்தில் கேட்டாள். சிறாணியின் எளிமையான பேச்சால் உந்தப்பட்டு “எனது சின்னம்மா ஒருவர் கோப்பாய் ஆசிரியகலாசாலையில் படித்தவ. அவ இப்படித்தான் கீறி, காட்சிகளும் வரைந்து கொண்டு போவா. பரீட்சைக்காலங்களில் அயலில் இருக்கும் பிள்ளைகளையும் என்னையும் வைத்துப் படிப்பித்துப் பழகுவா. அம்மாவும் ஒரு ரீச்சர். அவகுறை நிறை சொல்லுவா. அதுதான் வேலையைச் சுலப-மாக்க செய்துகொண்டே போறம். படிப்படியாக விளங்கப்படுத்த எனக்கும் சுலபம். இப்படி செயல்முறை வரைபடம் அவர்களுக்கும் சிந்தனையைத் தூண்டும்”.

“அப்பாடா இவ்வளவு தூரம் பேசிட்டீங்களே! ‘டடி சொன்னார்’; அவர் சில சொற்கள்தான் கதைக்கிற ஆள் என்று. நீங்களும் மௌன-மாக வர, நானும் பயத்தில் பேசாது விட்டேன் என்றாலும் ஆராய்வூக்கம் தொழிற்பட்டிட்டுது’.

மெல்லச் சிரித்தான் திலக். “அப்பாவுக்கு எல்லாம் தெரியும். நீங்கள் மாணவிதானே. அதுதான் விளங்கப்படுத்தினேன். ‘அன்பாகச் சிரித்தாள் சிறாணி.
கலாசாலை விடுதிமேற்பார்வையாளர் வந்து ஒரு மண்டபத்தைத் திறந்து விட்டுப் போக 10பேர் வந்திட்டார்கள். தலைமை மாணவி “நாங்கள் 5பேர் தான். இவை சும்மா வந்தவை”.

“இவை ஐந்து பேருக்கும்தான் நான் உதவி செய்ய வேண்டும். மற்றவர்கள் நின்று கேள்விகள் கேட்டு ஒரு ஒழுங்குமுறை இல்லாமல் போய்விடும். தயவு செய்து நீங்கள் இவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள் என்று பணிவோடு சொன்னான். அவர்கள் எழுந்து சென்று விட்டார்கள்.

அதிலிருந்த பணிவும் அதேநேரத்தில் தொனித்த இறுக்கமும் சிறாணியை வியக்கவைத்தன. பார்த்தால் அப்பாவி மாதிரி. ஆனால் ஒரு ஆசிரியருக்குரிய கண்டிப்பும் வார்த்தைகளின் தெரிந்தெடுத்த சொற்களின் பண்பும் ஒரு சேர, இவன் சாதாரணமானவன் அல்ல என்று நினைக்க வைத்தது.

பொருள்பற்றி அவர்களின் முன்னறிவை வினாக்கள் மூலம் கேட்டு கரும்பலகையில் எழுதி அவற்றை வகைப்படுத்திய பின் அமைப்புப் பற்றி ஒரு பட்சிப் பார்வையாக வரைபடத்தை வைத்துவிளக்கத் தொடங்கினான்.

முகவுரை:
மேல்நாடுகளில் ஆரம்பத்தில் குதிரையிலும் குதிரை வண்டிகளிலும் கடிதங்கள் பட்டுவாடா செய்யப்பட்டன.

1. 22 நாடுகள் ஒன்று சேர்ந்து ‘பொது அஞ்சல் ஒன்றியம்’ 09. 10. 1984 இல் தொடங்கப்பட்டது. நோக்கம்: அ. அஞ்சல் பொருள்களை பொறுப்புடன் கையாள்தல், ஆ. அஞ்சல் கட்டணங்களை நிர்ணயம் செய்தல். 1878 இல் பாரிஸ் நகரத்தில் நடந்த மாநாட்டில் ‘சர்வதேச அஞ்சல் ஒன்றியம்’ என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

2. இலங்கை: 1877 இல் குடியேற்ற நாடாக இதில் இணைந்தது. சுதந்திரம் பெற்றபின் 1949 இல் ஒரு தனிநாடாக தன் அந்தஸ்தை உயர்த்தியது. தொடக்கத்தில் கொழும்பு, காலி, மாத்தறை, மன்னார், திருகோணமலை எனும் ஆறு தபால் நிலையங்கள் தான் செயல்ப்பட்டன.

3. இலங்கையின் செயற்பாடுகளும், விரிவுகளும்.

4. முத்திரைகளின் வரலாறு: அஞ்சல் முத்திரைகளை உலகுக்கு அறிமுகம் செய்தவர் சேர். றோலன்ட் ஹில். 1840 இல் இம்முத்திரை விக்ரோறியா மகாராணியின் உருவப்படத்தைத் தாங்கி மறுபக்கம் ஒரு பென்னி எனவும் எழுதப்பட்டு (Black Penny) என்று அழைக்கப்பட்டது. 1860 இல் ‘சேர்’ பட்டம் கொடுத்து றோலன்ட் ஹில் கௌரவிக்கப்பட்டார்.

5. முடிவுரை. வெளிக்கள வேலையாக இவைபற்றிய தகவல்களை சேகரித்து விளக்கித் தொகுத்தால் அருமையான கட்டுரை அமையும்.

கேட்டுக்கொண்டிருக்கவே ஆசையாக இருந்தாலும் பௌதீகவியலில் வகுப்புப்பரீட்சைக்கு படிக்க வேணும் என நினைக்கவும், இன்று நேரமாகிவிட்டது. இனி “ஒவ்வொரு நிலையின் கடமைகள், அவரவருக்குரிய உரிமைகள் இன்னொரு நாள் பார்போம்” என விளக்கத்தை முடித்துக் கொண்டானன். மாணவிகள் அனைவரும் ‘சேர், சேர்’ என்று ஒரே புழுகித்தள்ளினாலும் அவன் சிறாணியைப் பார்த்து ‘நல்லகாலம் எனக்கொன்றும் புரியவில்லை’ என்பதுபோல ஒரு அப்பாவிப் புன்னகை விட்டான்.

வரும்போது சிறாணியும் ‘இதற்குள் இவ்வளவு விடயம் இருக்கா என்று மலைச்சுப் போனான். நன்றி, டடியின் வேலை ஏதோ முத்திரை விற்கிறதுதான் என நையாண்டி பண்ணுவன்’.

“ஆசிரியத் தொழில்தான் எனக்கும் விருப்பம். ஆனால் எங்கள் வீடு வசதியாக வாழுகிறதுக்கு அந்த வேதனம் காணாது. வாத்திமார் என்று சொல்லி சாப்பாட்டுக்கே காணாத பிச்சைச் சம்பளம். புனிதமான தொழில் என்று சொல்லிச் சொல்லி அதுகளும் முறியுதுகள். இனியாலும் கவனிப்பினமோ தெரியாது. அஞ்சல்திணைக்கள வேலை என்றால், வேதனம் ஒருபுறம், மேலதிக வேலை, பிரயாணச் செலவு என்றெல்லாம்

தொடர்ச்சி 25ஆம் பக்கம்



ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஜோதிடம் - கேரளா

திருப்பதி சாஸ்திரியார் குருஜி



647 894 5922 905- 201 5740

ஐரோப்பிய நாடுகளில் புகழ்பெற்ற திருப்பதி சாஸ்திரியார் அவர்கள் கனடா வருகை தந்துள்ளார்.

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள சாஸ்திரியார் அவர்கள் கைரேகை, சாதகம் என்பவற்றை 1941ம் ஆண்டில் இருந்து சரியாக கணித்து கூறி வருகின்றார். 2009 ம் ஆண்டு வரைக்கும் சாதகம் இல்லாதவர்களுக்கும் சாதகம் கணித்து தரப்படும்.

முகநாடி கொண்டு நடந்தவை, நடக்க இருப்பவை, நடப்பவை பற்றி துல்லியமாக கூறுவார். உங்கள் விவாக யோகம், வியாபாரம், கல்வி, ஆரோக்கியம், சந்தான யோகம், குடும்பத்தில் வரும் சஞ்சலங்கள் ஆகியவை பற்றி விபரமாக கூறுவார்.

கடவுள் எவ்வளவு உண்மையோ அதே போல், கிரகங்களும், தோஷங்கள் சோதிடங்களும் உண்மை. நீங்கள் பலபேரிடம் சோதிடம் பார்த்திருப்பீர்கள். இவரிடமும் ஒரு முறை கேட்டுப்பாருங்கள். உண்மை விளங்கும் அத்துடன் வீடுகளுக்கும் சாந்தி செய்து கொடுக்கப்படும்.

Embassy's Convenience & grocery (Near the SAMOSA KING)
5200 Finch Ave, East Unit 101 – 103 Scarborough, Ont M1S 4Z3 (Millefield / Finch)
Tamil, Hindi, English – From 9:30am to 8:30 Pm
7 days a Week

**ASTROLOGER PALMISTRY**
Sri Kamachi Ampal Jothidam From Kerala
**Thirupathy Shasthiriyar Guruji**
**Tel: 647 894 5922, 905- 201 5740**



*shasthiriyar Came from India. and he is able to read your past. present and futureand also face reading. Hand reading. money problem. love problem Family & Education Problems Businessand etc.he has experience in horoscope making from 1941 to 2009 and he performs poojas and prayers for the protection of your home from enemies. After touring all across Europe he has now come to Canada to help you have seen many astrologers but give him a try.*

# கூதிர்கால...

வரும் என்றார்கள். அதுதான் வந்திட்டன். இப்ப இதுவும் கவர்ச்சியான வேலைதான். அவனுக்கே ஆச்சரியம்'.

பெண்கள் என்றாலே ஒதுங்கி ஒதுங்கி மரியாதை கொடுத்து வாழ்பவன், இன்று முன்பின் தெரியாத ஒருத்தியோடு நிறையவே பேசிவிட்டானே. ஏன்? எப்படி? அவளது குழந்தைத்தனமான கேள்விகளாலும் நடத்தையினாலுமா?

உணவு மேசையில் சிறாணி தகப்பனுக்கு ஒரே வியப்பான அந்த சம்பவத்தைச் சொல்லிக் கொண்டே இருந்தாள்.

உண்மைதானம்மா, "நீ சொல்றதெல்லாம் நல்லதொரு தலைமைக்கு இருக்க வேண்டிய பண்புகள். எனக்கே சிக்கலாக இருக்கிற சில பிரச்சினைகளை அவன் நிமிடத்தில் தீர்த்துவிடுவான். நான் நடப்பாகச் சொல்லிவிடுவன் உதுகளை எல்லாம் தீர்த்து வைக்க எனக்கு வேற வேலை இல்லையோ? உப அதிபரிட்டை போங்கோ" என்று. எங்கடை போஸ்ட்மன்மாரைத் தெரியும் தானே. பாவம் தமிழன்கள் பரம்பரை பரம்பரையாக படித்தவங்கள். பண்பாடானவங்கள். அடித்தாலும் திருப்பி அடிக்கமாட்டான்கள். எனக்கு திலக் மீது ஒரு பாசம், மகன்மாதிரி".

மேலும் இருநாட்கள் அந்த செயல்திட்டத்துக்கு உதவி செய்ய வேண்டி வந்துவிட்டது. வெளிக்கள வேலையாக மாகாண தலைமை அஞ்சலகத்திற்கு அழைத்துச் சென்றான். சிறாணியோடு போவதும் வருவதும் இருவரும் வாயோயாமல் கதைப்பதும் திலக்கின் வாழ்க்கையில் வசந்தம் வீசுவது போலிருந்தது.

கிராமத்தில் இருந்த தேவசிகாமணி ஒவ்வொருவார விடுமுறைக்கும் நண்பனின் அறைக்கு வந்து விடுவான். இருவரும் ஊரளப்பார்கள். மகாவலிகங்கை வடக்கு நோக்கித் திருப்பும் திட்டமொன்று பொல்கொல்லையில் ஆரம்பமாகப் போகிறதெனும் கதை ஒன்று அடிபட்டது. டேய்! நீ வந்த அதிட்டம் தானடா என்ற தேவா, சிறாணியைப் பற்றியும் நன்றாக அறிந்து கொண்டான். 'ஆழமறியாமல் காலை விடாதை', கவனம். அடிக்கடி 56ஆம் ஆண்டை நினைத்துக்கொள். மனம் காயப்படும் அல்லது உடல் காயப்படும். நான் என்ன உனக்கு சொல்லுறது. நீ புத்திசாலி, யோசனை பண்ணு. மனதை அலையவிடாதை'.

**தொடரும்**

# பவளவிழா...

17ஆம் பக்கத்தொடர்ச்சி

இதுவரைக்கும் மேட்டூர் அணை 36 முறை முழுமையாக நிறைந்துள்ளது. அணை முழுமையாக நிறையும் போது, மேட்டூரில் இருந்து 70 - 80 கிலோமீட்டர் தொலைவில் இருக்கும் ஒகேனக்கலில் எல்லா அருவிகளும் அணை நீருக்குள் மூழ்கிவிடுமாம். அவ்வளவு பெரியது மேட்டூர் அணை.

ஒரு இடத்தில் அணை கட்டினால் பல கிராமங்களை, விளை நிலங்களை தூக்க வேண்டி வரும். மேட்டூர் போன்ற ஒரு பெரிய நீர்த்தேக்கத்தில் கேட்கவா வேண்டும். பல கிராமங்களும் கோவில்களும் மேட்டூர் அணைக்குள் மூழ்கி உள்ளன. இன்றும் தண்ணீர் குறைந்ததும் அந்த கோவில்கள் வெளியே தெரியும்.

### எப்படி செல்வது? எங்கே தங்குவது?

சென்னையில் இருந்து தினமும் சேலத்து ரயிலும் பேருந்தும் உள்ளது. விமானமும் இயக்கப்படுகிறது. சேலத்தில் இருந்து மேட்டூருக்கு அடிக்கடி பேருந்து போக்குவரத்து உள்ளது. திருநெல்வேலியில் அல்வா சாப்பிடுவது போல், சேலத்தில் தெருவோரக் கடைகளில் உள்ளூர்க்காரர்கள் கிராம் கிராமாகா பொரித்த மீன் வாங்கிச் சாப்பிடுவதைப் பார்க்கலாம். எல்லாம் மேட்டூர் அணையில் பிடித்த மீன்கள். மேட்டூரிலும் இப்படி பொரித்த மீன் கிடைக்கும். நல்ல சுவையுடன் அருமையான அனுபவமும்கூட. சேலத்தில் நல்ல தங்கும் விடுதிகள் உள்ளன. மேட்டூர் பார்த்துவிட்டு ஒகேனக்கல் செல்ல விரும்புபவர்களுக்கு ஒகேனக்கலிலேயே நல்ல தங்கும் விடுதிகள் கிடைக்கும்.

**வழிப்போக்கன்**

இப்பொழுது 90 அடி தண்ணீருடன் குறுங்கடலாக காட்சியளிக்கிறது மேட்டூர் அண!

JB Towing
1335112 Ontario Inc

- Fast & Reliable
- Reasonable rates

☎ Call RaJ: 647.271.5319



◈ பழைய (Scrap) கார்களை விலைக்கு வாங்குவோம் ◈



Niru Niru
நிரு
பிராண்ட்

தமிழர் மத்தியில் என்றும் தரமானதாகவும் ருசியானதாகவும்
சுகாதாரமுறைக்கேற்ப உணவுப்பொருட்களை வழங்குவது
**நிரு பிராண்ட் தயாரிப்புக்களே.**

# பேரண்டக் கதை

காலத்தின் ஊடாக எமது பேரண்டத்தினை என்ன வடிவங்களில் பூமியின் மக்கள் பார்த்துக்கொண்டு வந்தார்கள் என்பதை பேரண்டக்கதையின் ஊடாகப் பார்த்துக் கொண்டு வருகின்றோம். அந்த வகையில், நமது பால்வழி கலக்சியினையே பேரண்ட வடிவம் என பூமியில் உள்ளவர்கள் கருதும் காலம் வரையிலான கதையினை அறிந்து கொண்டோம்.

இக்காலத்தில் தொலைக்காட்டிகள் நவீன மயமாக்கப்பட்டதினால் அவற்றின் உருப் பெருக்க வலுக்களும் உயர்வுடையனவாக இருந்து வந்தன. இத்தொலைக்காட்டிகளின் ஊடாகப் பால்வழியினைப் பார்த்த ஆய்வாளர்களின் கண்களுக்கு, பால்வழியினுள் பல ஆயிரம் தூசுக்கூட்டங்கள் ஆங்காங்கே இருப்பது தெரிந்தது. இத்தூசுக்கூட்டங்களின் மர்மத்தினை அறிய விரும்பிய வானவியலாளர்கள் இத்தூசுக்கூட்டங்களை நோக்கித் தமது தொலைக்காட்டிகளை திருப்பினார்கள். என்ன ஆச்சரியம்! அவை உண்மையில் தூசுக் கூட்டங்கள் இல்லை. ஒன்றிரண்டு தூசுக் கூட்டங்கள் இருந்தாலும் ஏராளமானவை பல விண்மீன்களைத் தத்தமக்கே கொண்ட பெரிய விண்மீன் தொகுதிகளாக இருந்தன. அதாவது அவைகள் தனித்தனி கலக்சிகளாக இருந்தன. அத்துடன், உண்மையில் அக்கலக்சிகள் எமது பால்வெளிக் கலக்சியின் உள்ளும் இருக்கவில்லை. ஒவ்வொரு கலக்சிகளுக்கும் இடையில் பலநூறு பில்லியன் ஒளியாண்டு இடைவெளிகளும் இருந்தன.

1920 - 1936 காலப்பகுதியில் பிரபலமான விஞ்ஞானியான ஹபிள் (Heibble) இதனைக் கூறி, நிருபித்த போது உலகமே அதிசயித்தது எனலாம். ஹபிளின் இந்தப் புதிய கண்டுபிடிப்பானது, பேரண்டத்திற்குப் புதிய வடிவினைக் கொடுத்தது. வெறுமனே எமது பால்வெளி கலக்சியையே பேரண்டம் எனக் கருதிய வானவியலாளர்களுக்கு, பேரண்ட மானது இன்னம் பல கலக்சிகளைக் கொண்ட பிரமாண்டமான ஒன்று என்பது புலனாகியது. ஆக 20ஆம் நூற்றாண்டின் ஆரம்ப பகுதிகளில், பேரண்டமானது, பல கலக்சிகளைத் தன்னுள்ளே கொண்ட, ஒரு நிலையான, மிகமிகப் பெரிய ஒன்று என்ற கருத்து வானவியலாளர்களிடையே வர, அக்கருத்தானது சாதாரண மக்களிடையேயும் வந்துவிட்டது.

## பிரபஞ்சம் - 47

இக்காலகட்டத்தில் தான் அல்பேட் அயன்ரைன் அவர்கள், புதன், கிரகத்தின் வித்தியாசமான நடத்தைக்கு விளக்கம் கூற முற்பட்டார். நியூட்டன் கொண்ட சில கருத்துக்களை, எடுகோள்களைத் தவறானவை எனக் காட்டிய அயன்ஸ்ரைன் அதன்வழியே தமது சிறப்புச் சார்புத்தத்துவம் பொதுச் சார்புத் தத்துவம் என்பவற்றை தந்து அவை சரியானவை என்வும் நிறுவிக் காட்டினார். அவரின் கருத்துப்படி பேரண்டமானது ஈதர் என்ற ஊடகத்தால் நிரம்பியில்லை. அது வெறும் வெற்றிடமே ஆகும். பேரண்டமானது சக்தியையும், சடத்தினையும் தன்னகத்தே கொண்ட ஒன்று எனவும் கூறினார். (நியூட்டனைப் பொறுத்தவரையில் பேரண்டமானது வெறுமனே சடங்களினால் நிரப்பப்பட்டது என்ற கருத்தாகும்) இந்த சக்தியிற்கும், சடத்திற்கும் இடையேயான தொடர்பு $E = mc^2$ என்றார். இதுவரையில் வந்த பௌதீகச் சமன்பாடுகளில் இதுவே மிகவும் பிரசித்தி பெற்றது என்பேன். இவ் E என்பது சக்தி, m என்பது சடத்தினை திணிவு, c என்பது ஒளியின் வேகம். இந்த ஒளியின் வேகமானது வெற்றிடத்தில் மாறாத ஒன்று, ஏனெனில் ஒளியான ஒரு மின்காந்த அலை எனவும் அயன்ஸ்ரைன் கூறினார்.

மேலும், பொதுச்சார்புக் கொள்கையின் வழியே, ஈர்ப்புவிசை என ஒன்றுமே இல்லை எனக்காட்டிய அயன்ஸ்ரைன், புதியதாக வெளி நேரம் என்ற கணியத்தினைக் கூறினார். இதன்படி பேரண்டத்தில் உள்ள பொருட்கள் எல்லாமுமே, வெளி நேரம் என்ற கணியத்திலேயே (இதனைப் பரிமாணம் எனவும் கூறுவர்) இயங்குகின்றன என கணித ரீதியில் நிறுவிக்காட்டினார். இதன்படி, வெளி என்று எதுவுமே தனியனாக இல்லை. இந்த வெளியுடன் எப்பொழுதும் நேரம் என்பது இணைந்தே இருக்கின்றது. நேரமும் தனியனாக இல்லை. ஆனால் நியூட்டனின் கருத்துப்படி, எடுகோள்களின்படி, வெளியும், நேரமும் தனித்தனியானவை. எதனுடனும் சாராதவை என்பதாகும். இதன் அடிப்படை யிலேயே நியூட்டன் ஈர்ப்புவிசையைத் தந்திருந்தார்.

நியூட்டனின் பொருந்தாத அல்லது தவறான எடுகோளின் காரணமாகவே புதன் கோளானது அவரது ஈர்ப்புவிதிக்கமைவாக இயங்கவில்லை. அயன்ஸ்ரைனின் பொதுச்சார்புக் கொள்கை யின் வழியே புதன் கிரகத்தின் இயக்கமானது மிகத் துல்லியமாகக் கூறப்பட்டது. அத்துடன் ஏனைய வான்பொருட்களின் இயக்கங்களும் பொதுச்சார்புக் கொள்கையின் வழியே விளங்கப்படுத்தக் கூடியனவாக உள்ளன.

குறிப்பு - நியூட்டனின் ஈர்ப்புவிதியானது சிறிய தூர அளவுகளில் மிகச் சரியானது. பேரண்டத்தினை பெரிய அளவில் பார்க்கை யில் அயன்ஸ்ரைனின் பொதுச் சார்புக் கொள்கையே பொருத்தமானது. நியூட்டனின் ஈர்ப்புவிதியின் திருத்தப்பட்ட வடிவமே பொதுச்சார்புக் கொள்கை எனப்படுகின்றது. இதன்படி ஈர்ப்பு என்பது பொதுச்சார்புக் கொள்கை எனலாம். மேலதிகமாக தெளிவாக அறிவதற்கு 'புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விடயங்கள்' எனும் எனது நூலினை வாசித்துப் பாருங்கள்.

பேரண்டக்கதை இன்னமும் முடியவில்லை; வரும்.

- கனி -



FOR ALL YOUR REAL ESTATE NEEDS...



Jayanthi Sritharan
Real Estate Broker
416.918.5872
sritharanj@rogers.com
www.jrealhomes.com

Call me for a tour of METROGATE, "THE GREEN COMMUNITY" located on a 17-acre site. Comprised of 46 stacked townhouses, two 35-storey residential towers, a 23-storey office tower, two 30-storey residential towers, and two 40-storey residential towers, as well as a 1.65 acre city park and two day care facilities. Steps from planned GO, TTC subway and bus stations.

Call Now For Best Prices & Best Suites!

IF YOU BUY, SELL OR INVEST IN ANY RESIDENTIAL OR COMMERCIAL PROPERTIES FROM ME, here is your chance to win!




BMW


CUBA


LCD TV


HOMELIFE
HIGHER STANDARDS

HomeLife GTA Realty Inc., Brokerage*

Tel: 416.321.6969 Fax: 416.321.6963 1711 McCowan Rd, Suite 206, Scarborough, On, M1S 2Y3 *Each office independently owned and operated

This is not intend to solicit properties currently listed for sale ** some conditions may apply

# Last Stop 174, Visitor ஆகிய படங்களை முன்வைத்து

There's a Brazilian quote, "equals are treated equally in front of the law,". கடந்த வாரங்களில் நடைபெற்ற இரு சம்பவங்கள் 'சட்டத்திற்கு முன்னால் மட்டும் சமமாக நடாத்தப்படுவார்கள்' என மேற்கூறிய கூற்றை வாசிக்க வைக்கின்றது. ஒன்று சோமாலியாவில் பிறந்த கனடிய பெண்மணி நைரோபியில் விமானம் ஏற முற்பட்ட பொழுது போலிப் படத்தைக் கொண்ட கடவுச் சீட்டு எனக் கூறி சுமார் மூன்று மாதங்கள் அந்தரத்திலும் இதில் ஒரு கிழமை சிறையிலும் கழித்த சம்பவம். இரண்டாவது சம்பவம் தொடர்ச்சியான ரோ ரமிழ் (To Tamil)(TorontoTamils) இளைஞர்கள் பழிக்கு பழி வாங்கிய அடுத்து அடுத்த துப்பாக்கி சூட்டு சம்பவங்கள்.



கனரிக்கட் (Connecticut) மாகாணத்தில் பேராசிரியராக வேலை பார்க்கும் வோல்ரர் மனைவியை இழந்தவர். இருபது வருடங்களாக ஒரே பாடத்தையே படிப்பிக்கும் இவருக்கு இந்த வேலையும் போரடிக்கத் தொடங்கிவிட்டது. ஒரு மாநாட்டிற்காக நியு யோர்க் நகரத்திற்கு வருகின்றார். அங்கு இவருக்கு ஒரு தொடர் மாடிக் கட்டிடத்தில் வீடு ஒன்று உண்டு. அங்கு வரும் அவருக்கு அதிர்ச்சி ஒன்று காத்திருக்கின்றது. அவரது வீட்டில் ஒரு சிரிய-பாலஸ்தீனிய இளைஞன் ரெரியும், அவனது கறுப்பின செனகல் நாட்டு முஸ்லீம் பெண் சிநேகிதியும் வசித்து வருகின்றனர். அது தனது வீடென்றும் அவர்களை வெளியே போகுமாறும் கூறுகின்றார். இது பற்றி நகர் காவலர்களுக்கு இவர் அறிவிக்கவில்லை. அவர்கள் அன்றிரவு தங்க இடமில்லை எனத் தெரிந்து அவர்களுக்கு மீண்டும் அங்கே தங்க அனுமதிக்கின்றார். படிப்படியாக இவர்கள் இருவருக்கும் இடையே ஓர் பிணைப்பு ஏற்படுகின்றது. ரெரிக் ஓர் Drumer. பேராசிரியரும் ரெரிக்கிடம் ஆபிரிக்க மேளம் அடிக்க கற்றுக் கொள்கின்றார். ஒரு நாள் இவர்கள் இருவரும் சுரங்க புகையிரத நிலையத்தினுள் சென்ற பொழுது ரெரிக் நகர் காவலர்களால் கைது செய்யப்படுகின்றார். பின்னர் இவர் சட்டத்திற்கு புறம்பாக நாட்டிற்குள் வந்துள்ளார் எனக் கூறி தடுத்து வைக்கப்படுகின்றார். பேராசிரியர் ரெரிக்கை தொடர்ச்சியாக தடுப்பு முகாமில் சந்தித்து வருகின்றார். ரெரிக்கு ஓர் சிறந்த சட்டத்தரணியையும் ஏற்பாடு செய்கின்றார். ரெரிக்கின் தாய் மூனா, மிச்சிக்கன் மாநிலத்தில் வசித்து வருகின்றார். ரெரிக் தொலைபேசியில் தன்னுடன் சில நாட்கள் கதைக்கவில்லை என்பதால், இவர் நியு யோர்க் நகரத்திற்கு வருகின்றார். அங்கு பேராசிரியர் உண்மையை கூறுகின்றார். தொடர்ந்து பேராசிரியர் ரெரிக்கை வெளியே எடுக்க முயற்சிக்கின்றார். ரெரிக்கின் தாய்க்கும் பேராசிரியருக்குமான நட்பு மேலும் மெருகேறுகின்றது. மூனா விரும்பும் இசை நிகழ்ச்சிக்கு போராசிரியர் மூனாவை அழைத்துச் செல்கின்றார். ரெரிக்கை திடீரென ஒரு நாள் நாடு கடத்தி விடுகின்றனர். மூனா ரெரிக் நாடு கடத்தப்பட்ட சிரியாவிற்கு தானும் செல்கின்றார்.

போரசிரியராக ரிச்சட் ஜென்க்கிஸ் (Richard Jenkins) சிறப்பாக இயல்பாக நடித்துள்ளார். மூனாவாக இஸ்ரேலிய நடிகை Hiam Abbass நடித்துள்ளார். இயக்கம் Tom McCarthy. இறுதிவரை மிகவும் இறுக்கத்துடன் இயல்பாக படத்தை நகர்த்தியுள்ளார். சிக்கல் எதுவுமின்றி நேர் கோட்டில் நகரும் கதை.

Cry Freedom தொடங்கி விசிட்டர் வரை பல படங்கள் வெள்ளை மேலாதிக்கத்தை வெளிப்படுத்தியுள்ளன. மீண்டும் முதலாவது சம்பவத்திற்கு வருவோம். சோமாலிய பெண்மணிக்கு ஆதரவாக யார் குரல் கொடுத்தார்கள்? அவரது சமூகம் தான் போராடியது. இறுதிவரை தனது தூய்மையை நிரூபிக்க கை ரேகையில் இருந்து டி.என்.எ சோதனை வரை அவர் போராடினார். ஊடகங்கள் செய்திகளை மட்டும் செய்திகளாக வெளியிட்டன. ஒன்ராரியோ முதல்வர் கூட டி.என்.ஏ சோதனை முடிவின் பின்னர் தான் இவருக்கு ஆதரவாக கருத்து தெரிவித்தார். இப்படத்திலும் வெள்ளை நிற பேராசிரியரே இவர்களுக்கு ஆதரவாக குரல் கொடுக்கின்றார். எந்த குற்றமுமற்ற பலர் முஸ்லீம் என்ற காரணத்துக்காக அமெரிக்காவில் இருந்து வெளியேற்றப்படுகின்றர் என்ற செய்தி அமெரிக்கர்களை சென்றடைய வெள்ளை நிற நடிகர் காரணமாக இருக்கலாம் என்று நினைப்பதே தவறாகும். அமெரிக்காவில் கறுப்பின மக்கள் அடிமையாக வாழ்ந்து தங்களது போராட்த்தால் இன்று நிமிர்ந்து நிற்கின்றார்கள். இன்று அங்கு நிற வெறி இல்லை என்று கூறமுடியாது. நியு இங்கிலாந்து என அழைக்கப்படும் பொஸ்ரன் நகரை அண்டிய மாநிலங்களின் கடற்கரைகளில் இன்றும் கூட 99 வீதம் வெள்ளை நிறத்தவர்களையே காணக் கூடியதாகவுள்ளது. இப் படத்தின் இறுதியில் மூனா பேராசிரியரின் அறைக்கே செல்கின்றார் தனது துயரங்களை தேற்ற. கட்டிலில் பேராசிரியருடன் படுத்துக் கொள்கின்றார். இது ஆணைத் தேடி பெண் செல்கின்றார் என்ற ஒரு விமர்சனப் பார்வையுடன், வெள்ளை இனத்தை தேடி ஓர் முஸ்லீம் செல்வதாக கூட பார்க்கலாம். இவ்விரு பார்வைகளும் கடுமையான விமர்சனத்துக் குரியவை. இப் படத்தின் சிறப்பெல்லாம் இந்த மேலாதிக்க பார்வையால் அடிபட்டு போகின்றது.

பிரேசிலின் றியோ உலகில் வன்முறைக்கு பிர சித்தி பெற்ற நகரம். இந்த நகரில் போதை மருந்துக்கு அடிமையான மரிசியாவிடம் இருந்து மரிசியாவின் குழந்தையை மரிசியா பால் கொடுத்து கொண்டிருக்கும் பொழுது துப்பாக்கி முனையில் கடத்திச் சென்று விடுகின்றனர். பத்து வருடங்களின் பின்னர் மற்றொரு சிறுவனின் தாய் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்படுகின்றார். இவ் விரு சிறுவர்களும் இப்பொழுது வீதியில். மரிசியா இப்பொழுது திருந்தி கோயில் குளம் என தூய கிறிஸ்தவராக மாறிவிடுகின்றார். தன்னிடம் பறிக்கப்பட்ட குழந்தையையும் தேடுகின்றார். இதற்கிடையில் இவருக்கு தேவாலயத்தைச் சேர்ந்தவருடன் திருமணம் நடக்கின்றது. தனது மகன் அலெசாண்டிரியோவை சிறையில் சந்திக்கின்றார் மரிசியா. மகனை திருத்த முற்படுகின்றார் மரிசியா. இதனால் சற்று கடுமையாகவும் நடக்கின்றார். மரிசியாவின் மகன் அலெசன்ரோவிற்கு ஓர் பாலியல் தொழிலாளியுடன் உறவு ஏற்படுகின்றது. சிறையில் இருந்து தப்பி ஓடும் அலெசாண்ரியோவும்,

# தூறல்

## வானரன்

சன்ரியோவும் கொள்ளையடித்து காலத்தை கடத்துகின்றனர். சந்தியில் சமிக்ஞைக்காக வாகனங்கள் நிறுத்தப்படும் பொழுது துப்பாக்கி முனையில் கொள்ளையடிப்பதே இவர்கள் வேலை. இதில் சன்ரியோ தலைவன். ஒரு சம்பவத்தில் அலெசாண்ரியோ துப்பாக்கியால் சுட்டுக் கொல்லவில்லை என்ற காரணத்தால் சன்ரியோ, அலெசாண்ரியோவை தன்னிடமிருந்து வெளியேற்று கின்றான். தனித்து வரும் அலெசாண்ரியோ தாயைத் தேடிச் செல்கின்றான். தாயும் மறுத்து விட வீதிக்கு வரும் பொழுது பொலிஸைக் கண்டு பேரூந்தில் ஏறுகின்றான். இவன் துப்பாக்கி வைத்திருப்பதைக் கண்ட ஒருவர் பேரூந்தில் இருந்து இறங்கி வீதியில் சென்று கொண்டிருந்த நகர் காவலர் வாகனத்தை மறித்து கூறுகின்றார். நகர் காவலர் பேரூந்தை சுற்றி வளைக்கின்றனர். பேரூந்தினுள் துப்பாக்கி முனையில் பயணிப்போரை பயணக்கைதிகளாக மாற்றுகின்றான் அலெசன்ரியோ.

கடத்தல் நாடகம் தொடர்கின்றது. பலரை அவர்களது அவசரம் கருதி விட்டு விடுகின்றான். ஊடகங்கள் அனைத்தும் சம்பவ இடத்திற்கு வந்து விட்டன. தொலைக் காட்சிகள் உடனுக்குடன் காட்டுகின்றன. அவனது தாயும், அவனுக்கு உதவி செய்யும் ஓர் சமூக சேவகியும் சம்பவ இடத்திற்கு வருகின்றனர். இறுதியில் ஒரு பயணக்கைதியுடன் வெளியே வரும் பொழுது நகர் காவலர்கள் பிடித்து விடுகின்றனர். நகர் காவலரின் பிடியில் அவன் இறந்துவிடுகின்றான். அவனது சகா சன்ரியோவும், அவனது தாயும், அவன் நேசிக்கும் பாலியல் தொழிலாளி நண்பியும் கண்ணீர் வடிக்கின்றனர். இவர்கள் அனைவரும் கறுப்பினத்த வர்களே. அன்புக்காக ஏங்கும் சிறுவர்களுக்கு கிடைக்கும் பரிசு போதை மருந்து, கொலை, கொள்ளை.

சிற்றி ஒப் கொட் என்ற படத்தின் இயக்குனரே இப் பட இயக்குனரும். வீதியில் உள்ள சிறுவர்களில் அதிகமானோர் கறுப்பினத்தவர்களே. இவர்களுக்கு எதிராகவே அரச இயந்திரங்கள் இயங்குகின்றன. இது பிரேசிலில் மாத்திரமல்ல அமெரிக்கா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து என பல நாடுகளில் இது நடைமுறையில் உள்ளன.

2007ல் ரிச்சாடோ என்ற 11 வயது சிறுவன் துப்பாக்கியால் ஒருவரை சுட்டுக் கொன்றுள்ளான். பெரும்பாலும் 15-25 வயதுக்குட்பட்டவர்களே கொலை, கொள்ளைகளை செய்கின்றனர். போதை மருந்து வியாபாரிகளின் கைக் கூலிகளாக இவர்கள் மாற்றப்பட்டுள்ளனர். கோஸ்டி மோதலில் பல சிறுவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். 12 வயதிலிருந்து போதை மருந்துக்கு சிறுவர்கள் அடிமையாக்கப்படுகின்றனர். இச்சிறுவர்கள் சிறையிலடைக்கப்பட்டு சித்திரவதைக்குட்படுத்தப்படு கின்றனர். சிறை உடைப்பு, மீண்டும் வன்முறை என இவர்கள் வாழ்வு தொடர்கின்றது. இதில் உள்ள சிக்கல் இந்தச் சிறுவர்களில் பெரும்பாலோனோர் கறுப்பினத்தவர். பிரேசிலில் வறுமையில் வாடுபவர்களில் 90 வீதமானோர் கறுப்பினத்தவரே. இதனால் அரசு இவர்களுக்கான மறு வாழ்வுத்திட்டங்களில் அக்கறை காட்டுவதில்லை.

இப் படத்தில் காட்டப்பட்டவை நிஜமானவை. சர்வ சாதாரணமாக பிரேசிலில் நடைபெறுகின்றன. ரோ ரமிழ்ஸ்ன் கொலைகளும் இந்த றியோ வன்முறை போன்று மாறக் கூடாது. 'சட்டத்திற்கு முன்னால் யாவரும் சமம்' இதைத்தான் அரசு சொல்லிக் கொண்டு செய்யும். சட்டம் சிறையிலடைக்கும். இவர்களுக்கான மறு வாழ்வுத்திட்டமும், இவர்களை இயல்பு வாழ்க்கைக்கு மாற்றும் பொறுப்பும் சமூகத்துக்கேயுரியது.

விற்பனையாகின்றன!
கனி விமலநாதனின்
மூன்று நாவல்கள்



❶ வேற்றுக்கிரக மனிதர்கள்
யார் இந்த வேற்றுக்கிரக மனிதர்கள்?
அவர்களின் பின்னணி என்ன?
வேற்றுக்கிரக மனிதர்களை சந்தித்தவர்கள் உண்டா?
வேற்றுக்கிரக மனிதர்களுக்கும் எங்களுக்கும் என்ன தொடர்பு?

❷ பிரபஞ்சம் பற்றிய வியப்பான செய்திகள்
எமது பிரபஞ்சம் எப்போது தோன்றியது?
தோன்றியபோது எப்படி இருந்தது?
எவ்விதம் இவ்வளவு பெரிதாக ஆகியது?
பிரபஞ்சத்தின் முதல் நட்சத்திரம் எவ்வாறு தோன்றியது?

❸ இனம்தெரியாத பறக்கும் தட்டுகள்
பறக்கும் தட்டுகள் என்பது உண்மைதானா?
அவை எங்கிருந்து வருகின்றன?
பறக்கும் தட்டுகளை கண்டவர்கள் உண்டா?

பிரபஞ்ச இரகசியங்களை தெளிவு படுத்தும் நூல்கள்
கிடைக்குமிடம்: முருகன் புத்தகசாலை
1241 Ellesmerer Road - Midland & Ellesmere
GTA Square - 5215 Finch Ave. E., Middlefield & Finch

# ஈழத்து தமிழ் மேடைச் சொற்பொழிவுகள் இருபதாம் நூற்றாண்டு

## ஓர் ஆய்வு!

சென்ற இதழ் தொடர்ச்சி

ஒரு விழாவின் சொற்பொழிவுகள் நிகழ்வதற்கு முன்பிருந்த மனநிலை அப்பகுதி மக்களுக்கு விழா நடைபெற்ற பின்பு மாற்றமடையும். இரசாயனத் திருப்பம் வியப்புக்குரியதாகும். விழாச் சொற்பொழிவின் கருத்துக்களை பலநாட்களுக்கு பொது இடங்களில் சந்திப்புக்களில் கலந்து பேசிச் சிலாகிப்பார்கள். வாழ்வியலில் சேர்த்துக் கொள்வார்கள். மக்களின் சுயவாழ்வு என்ற அத்திபாரம், கருதுகோள், சமூக அக்கறை கொண்ட கருத்து வெளிப்பாடு தன் இனம் காக்கின்ற கடமை உணர்வு ஈழத்துச் சொற்பொழிவுகளின் உள்ளீடாய் விளங்கின.

சில கூட்டங்களில் சொற்பொழிவாளரின் சொற்பொழிவுத் தொனிப்பை, போக்கை கவனிக்கும் மக்கள் தமது வாழ்க்கை நெறிகளுக்கு புறம்பானது என்று கண்டதும் மௌனமாய் எழுந்தும் போயிருக்கிறார்கள். இந்த நிலையை அவதானித்ததும் சொற்பொழிவாளர் முறையான வாழ்வியல் தன்மைகளுக்குள் இறங்கி விடுவர் அல்லது சொற்பொழிவை நிறுத்திவிடுவார். சபை அடக்கம் என்பது இரண்டு வகைப்படும். தனது சொற்பொழிவுத்திறனால், பொருளால், தோற்றம் - தொனிகளால், சபையோரை அமைதியாய் அடங்கிக் கேட்க வைப்பது ஒன்று. மற்றையது சபையின் குறிப்பறிந்து தான் அடங்கி அவைக்கு தேவையான வற்றை ஆற்றுவது.

இந்த இருநிலைகளும் ஈழத்து மேடைகளில் இயங்கியமை ஈழத்துப் பண்புகளில் ஒன்றாய் கணிக்கப்பட்டது.

அரசியல் மேடைச் சொற்பொழிவுகளில் கூட தமிழியல் சார்ந்த கருத்துக்களையே ஈழத்து இருப்பும், இயங்கு நிலையும், வாழ்வும், வளமும் என்ற தொனிப் பொருளில் நிகழும் உரைகளுக்கே மக்கள் திரள் திரளாய் கூடியிருந்து கேட்பர். ஈழத்துத் தமிழ் அரசியல் துறையில் சட்டத்தரணிகளே பெரும்பாலும் பங்கு பற்றுவர். மக்கள் செல்வாக்கைப் பெறுவதற்காக தமிழியல் தெரிந்த தமிழ் அறிஞர்களை மேடையில் சொற்பொழிவு செய்ய வாய்ப்புக்களை வழங்குவர். தமிழ் சொற்பொழிவினால் நிறுவப்பட்ட அல்லது எடுத்துக்காட்டப்பட்ட தமிழ் வாழ்வுக்கே தாம் ஆதரவாய் பணியாற்றப் போவதாக அரசியல் வேட்பாளர்களான சட்டத்தரணிகள் நிறைவுரை செய்வார்கள்.

சொற்பொழிவு நடையில் பலவகைகள் உண்டு. பூங்காற்று நடை, ஆற்றொழுக்கு, கோடை இடி, கொண்டல் நடை, சங்கநாதம், ஏறுபோல் பீடுநடை, சொல்மாரி என்பனவே அவை. பேச்சுநடையிலிருந்து சொற்பொழிவு நடைக்கு நாவலர்கள் தம்மை அறியாமலேயே மாறியமை ஒரு பரிணாம வளர்ச்சியே. இந்த வளர்ச்சியை அவதானித்த ஒருவர் சொற்பொழிவின் அழகியல்களை விளக்கி 'சொற்பொழிவு ஆற்றுப்படை' என்னும் நூலை எழுதினார். பேச்சு என்ற வழக்கத்திலிருந்து சொற்பொழிவு என்ற பழக்கத்தை பலர் உள்வாங்கிக் கொள்ளச் சிரமப்பட்டு அந்த நூல் எழுதியவரைக் கண்டால் சொற்பொழிவு வருகிறது, சொற்பொழிவு போகிறது என்று கிண்டல் அடித்தார்கள். இதனால் 'சொற்பொழி ஆற்றுப்படை' என்ற நூல் மறைந்து விட்டது. ஆயினும் சொற்பொழிவுகள் கலையின் கனம் காத்திரத்தால் அதன் அழகியல் அம்சங்களால் அந்தச் சொல் நின்று நிலைத்து விட்டது என்று எழுதியுள்ளார். சிறந்த சொற் பொழிவாளரும் பேராசிரியருமான ரா. பி. சேதுப்பிள்ளை.

வானம் பொழியும் மழைபோல் மேடையில் நின்று சொற்களைப் பொழிவதால் பேச்சு சொற்பொழிவானது 'சும்மா அதிருதல்ல' என்று இன்று கூறுவது போன்று 'சும்மா பொழிந்துதள்ளினார்' என்று அன்று புகழ்ந்தனர். சொல்லேர், உழவர், நாவலர், நாவுக்கரசர், நாவேந்தன், நாவண்ணன், வெள்ளிநாக்கு நாவலர், செஞ்சொல் கொண்டல், வாகீசன், சொல்லின் செல்வர் என்ற பட்டங்கள் சிறந்த ஈழத்துச் சொற்பொழிவாளர்களுக்கு வழங்கப்பட்டன. ஈழத்தில் சிறந்த சொற்பொழிவைக் கேட்பதற்கு மக்கள் வெள்ளம் போல் கூடுவர். மக்கள் வெள்ளத்தில் தமிழ் வெள்ளம் கலந்து செம்புலப் பெயர் நீர் போல இரசாயன மாற்றத்தை உண்டு பண்ணியமை ஓர் உன்னதச் செயல் பாடாகும். ஈழத்து தமிழ் சொற்பொழிவுகள் மக்கள் மத்தியில் ஒரு கட்டமைப்பை உருவாக்கியது. வாழ்க்கைக்கு தேவையான பயனான கருத்துக்களும் காரியங்களும் சொற்பொழிவுகளால் உருவாக்கப்பட்டன. கருத்தியல் வளத்தால் மக்கள் தெளிவாகவும் திடமாகவும் இருந்தமையை தமிழ்நாட்டு சமூக ஆய்வாளரும் குறிப்பிட்டுள்ளனர். மன இறுக்கம், மன அழுத்தம், சஞ்சலம், சலிப்பு, வெறுப்பு, விரக்தி, நம்பிக்கையீனம் முதலியவைகளையும் ஈழத்துச் சொற்பொழிவுகள் நீக்கியிருக்கின்றன.

சமயத்துறையில் கடவுள் நம்பிக்கையான ஆத்தீகம் இறுக்கமாய் இருந்தது. வழிபாடு, திருவிழாக்கள், கோயில் விதிகள், பக்திகள் முதலியன ஒழுங்கு படுத்தப்பட்டு ஒருமுறைமையைப் பெற்றிருந்தன. இந்தநிலையில் கடவுள் மறுப்பான நாத்தீகவாதம் வேறு திக்கிலிருந்து ஈழத்துக்குள் நுழைய எடுத்த



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -

(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)

தொடர்ச்சி 30ஆம் பக்கம்



# மூக்கு

10ஆம் பக்கத்தொடர்ச்சி

பாராமுகமாக இருந்தால் அப்பகுதி பாதிக்கப்பட்டு குணமடையலாம். துர்நாற்றம் வீசுவதுடன் கிருமிகளும் பெருகிப் பல தொந்தரவுகளை ஏற்படுத்தி விடும். எனவே ஆரம்பத்திலிலேயே உரிய வைத்தியத்தைச் செய்து காப்பாற்றிக் கொள்ளுங்கள்.

இந்நிலை ஏற்படும் போது உரியவருக்கு நரம்புகள் செயல் இழப்பதினால் மணம் குணம் எதுவும் தெரியவராது. எதற்கும் அவதானம் வேண்டும். இல்லையேல் மூளையின் சவ்வுப் பகுதிக்கு புழுக்களின் நஞ்சுத்தன்மை பரவி மரணநிலை ஏற்பட வழியுண்டு எனவும் கூறப்படுகின்றது.

மற்றும் தொழுநோய்களினாலும் அதாவது சிப்பிலிஸ் (Chipelis) என்ற பால்வினை நோயினாலும் ஏற்படும் எனவும் அறியக்கிடக்கின்றது. மூக்கில் ஏற்படும் சளிப்பிடிப்பினால் சில குழந்தைகளுக்கு காது துவாரம் பாதிக்கப்பட்டு நடுக்கநிலை அழற்சியுண்டாகும். சிலவேளை வாய் மூக்கு பகுதியில் சளி ஏற்பட்டு குழந்தை அழும்போது காது, மூக்கு, தொண்டைப் பகுதி விரிவடைந்து சளியினால் நடுக்காதை அடைத்து விடும். எனவே மூக்குப்பகுதி, வாயின் பகுதிகளில் சளிப்பிடிப்பு ஏற்படா வண்ணம் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

சிலரைக் கவனிக்கும் போது மூக்கினால் நீர் வடிந்து கொண்டே இருக்கும். இது ஒரு ஒவ்வாமை (Allergy) தன்மையாகவும் இருக்கும். கபாலநீர் அதிகரித்து மூக்கின் வழியால் வெளியேறுதல், இது திடீரெனவும் ஏற்படலாம். மூக்கின் உணர்வை அதிகமாகத் தூண்டும் இராசாயனப் பொருட்களும் மூக்கில் இருந்து நீர் வடிவதற்கு காரணமாகவும் இருக்கலாம். சிலருக்கு குனியும் போதும் மூக்கு நீர்வடிவதுண்டு. இதுவும் கபாலத்துடன் தொடர்புடைய நீராகும். மூக்கு, தலை அதாவது கபாலப்பகுதி தற்செயலாக அடிபட்டாலும் ஒன்றுக் கொன்று தொடர்பு இருப்பதினால் இரத்தமோ அன்றி திரவமோ வடியலாம். சுவாசப்பையில் சளிப்பிடிப்பு இருந்தால் மூக்கினுள் சளி ஏற்பட வழியுண்டு. சுவாசப்பையின் சளிக்குரிய மருந்தைக் கொடுத்து குணப்படுத்தினாலும், மூக்கினுள் சளி இருந்தால் மீண்டும் சளி சுவாசப்பைக்குச் செல்ல வழி அமையலாம். எனவே மூக்கில் இருந்து வடியும் சளிக்கும் சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும். இவை இரண்டிற்கும் சில வியாதிகளின் காரணமாக சளி ஏற்பட இடமுண்டு. எதற்கும் வைத்தியர்களின் பார்வை முக்கியம்.

இன்னும் சிலரைப் பார்த்தால் அடிக்கடி தடிமன், சளி பிடித்து மூக்கடைப்பு, தலையிடி, கன்னத்தில் வலி, தேக உளைவு, குனியும் போது தலைப்பாரம், பற்பகுதியில் ஒருவிதமான வலி காணப்படுவதுண்டு. இந்நிலை பெரும்பாலும் முக எலும்பு, சைனஸில் (Sinus) கிருமித் தொற்று ஏற்பட்ட காரணமாக இருக்கலாம். இந்நிலையில் சளி மஞ்சள் நிறம் கொண்டதாக இருக்கும்.

இந்நிலை அடிக்கடி கிழமையிலோ அன்றி மாதத்திலோ வந்து கொண்டிருந்தால் உடல் நிலையில் பாதிப்பு ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்ள உரிய வைத்தியமுறைகளை உரிய வைத்தியரிடம் சென்று பெற்றுக் கொள்ளுங்கள்.

நமது மூக்கின் உட்பகுதியில் மூன்று சோடி குருத்தெலும்புகள் உண்டு. இதனை ஆங்கிலத்தில் Meatus எனக் கூறப்படுகின்றது. இதில் நடுவில் உள்ள Meatus பிறப்பில் ஏதாவது குறைபாடு இருந்தால் நாள்பட்ட சைனஸ்சின் (Sinusitis) வரலாம் எனக் கூறப்படுகின்றது.

புகைப்பிடிப் போருக்கும் சைனஸ் (Sinus) நோய் ஏற்படக் காரணமாக இருப்பதினால் தவிர்த்துக் கொள்வது மிக நன்று. எதற்கும் எம்மை நாம் பாதுகாத்துக் கொள்வது எமது கடமையாகும். முகத்திற்கு அழகை கொடுப்பது மூக்கும் ஒன்றாகும். சிலருக்கு அழகு இல்லாமல் தட்டையாகவும் ஒழுங்கற்றும் காணப்படுகின்றது. இதனை நிவர்த்தி செய்து அழகினைப் பெற அறுவைச் சிகிச்சையுண்டு. உரிய தேர்ச்சி பெற்ற வைத்தியர்களிடம் சென்றால் தகுந்த ஆலோசனைகள் கூறி யாவற்றையும் விளக்குவார்கள். எதற்கும் யோசிக்க வேண்டியதில்லை. சிந்தித்து செயலாற்றுங்கள்.

குழந்தைகளோ அன்றிப் பெரியவர்களோ கண்டபடி மூக்கினுள் இருக்கும் அழுக்குகளை தங்கள் விரல் கொண்டு அழுத்தி எடுக்க முயற்சிப்பது நன்றல்ல. சிலர் நித்தம் விரல் கொண்டு குடைந்த படி இருப்பார்கள். இதனால் அப்பகுதி தாக்கப்பட்டு இரத்தம் வடிந்து அப்பகுதியில் புண் ஏற்படும். அதில் இருந்து துர்நாற்றம் ஏற்பட்டு மணம் வீசுவதுடன் கிருமிகள் பெருகி வேறு உபத்திரவ வியாதிகளைக் கொண்டு வந்து விடும். எனவே முன் கூட்டியே உரிய வைத்தியர்களிடம் சென்று இலகுவான முறையில் எடுத்துக் கொள்ள முயற்சிக்கவும்.

இரத்த அழுத்தம், இரத்த அணுக்களின் வீரியக்குறைவு, இருதய நோய், மாதவிலக்கு, நெருப்புக்காய்ச்சல் போன்றவற்றாலும் மூக்கினால் சிலவேளை இரத்தம் வருவதுண்டு. இதற்குச் சடுதியாக கீழ்வரும் சில முறைகளை தற்பாதுகாப்பிற்காக செய்து பார்க்கலாம்.

1. நோயாளி படுக்கையில் இருந்தால் எழுந்து உட்கார வைக்க வேண்டும்.
2. கழுத்துப் பகுதியில் இறுக்கமான ஆடைகள் இருந்தால் நன்கு தளர்த்தி அல்லது எடுத்து விடுதல் வேண்டும்.
3. ஐஸ் கட்டியை ஒரு துணியில் சுற்றி மூக்கின் மூக்கின் மேல் வைத்தல்.
4. நீரில் நனைத்த துணியை மூக்கின் மேல் வைத்தல்.
5. மூக்கை அழுத்தி அழுத்தி சிறிது நேரம் பிடித்துக் கொள்ளல்.

இப்படிச் செய்தும் குறையாத நிலை காணின் தாமதியாமல் உடன் வைத்தியசாலைக்குச் சென்று தகுந்த வைத்தியர்களை தொடர்பு கொள்வது மிக நன்றாகும்.

மூக்கின் மேல் அசாதாரண மச்சம் (பருமாதிரி) காணப்படின் அதனை அகற்றுவது மிக நன்மை, பயக்கும். இக்கட்டிப் பருக்கள் சாதாரண கட்டியாகவோ அல்லது புற்றுக் கட்டியாகவோ இருக்கலாம். எனவே எதற்கும் உரிய வைத்தியர்களிடம் சென்று பரீட்சித்துப் பயன்பெற்றுக்கொள்ளுங்கள்.

# பேத்தி பிறந்துள்ளாள்



எமக்கு
முதன்முதலாக
ஒரு
பேத்தி பிறந்துள்ளாள்

பெயர்த்தி
பெயரன் என்பன திரிவடைந்து
பேத்தி பேரன்
என
பேச்சு வழக்கானது

எமது பெயரை
பரம்பரையைத்
தமது
தோளில் காவிச் செல்பவர்கள்
பெயரன்
பெயர்த்திகள்தான்

எமக்கொரு பெயர்த்தி
‘வானதி’
பிறந்துள்ளாள்

வானதி என்பதற்கு
ஆகாயக்கங்கை
என்று
அகராதிப் பொருள் கொள்வர்

வானமழை
தரையிறங்கி
கங்கையாய்ப் பெருகி
மண்ணை வளமாக்கி
ஆழியில் கலப்பதுவாய்
‘வானதி’
எமக்கொரு
பேத்தி பிறந்துள்ளாள்
ஆண்பெண் சமத்துவ
விழுமியம்
உயர்வடையும் இந்நாளில்
‘
மனிதம்’
எனும் சொல் தாங்கி
எமக்கொரு
பேத்தி பிறந்துள்ளாள்

இந்த
உலகம் உய்வதற்கு
ஏதோ ஒரு சாதனை
படைப்பதற்கென

எமக்கொரு
பெயர்த்தி
பிறந்துள்ளாள்.



முத்துராஜா

# ஈழத்து...

29ஆம் பக்கத்தொடர்ச்சி

முயற்சிகளையும் ஈழத்து தமிழ் மக்கள் தங்கள் கொள்கை கோட்பாட்டிற்கு உதவும் கருத்து விளக்கமாகவே எடுத்துக் கொண்டனர். சொற்பொழிவுகளின் பயன்பாட்டில் இதுவும் இணைத்துக் கொள்ளப்பட வேண்டிய தரவாகும்.

1952ஆம் ஆண்டிலே கலைஞர் மு. கருணாநிதியின் ‘பராசக்தி’ படம் வெளியாகி ஈழத்துத் திரையரங்கு களிலும் காட்டப்பட்டது. இதன் கதை வசனப் புத்தகம் வேறாகவும், பாடல் புத்தகம் வேறாகவும் விற்பனை செய்யப்பட்டன. பெருந்தொகையானோர் வாங்கி வாசித்தனர். பாடல்களையும் படித்தனர். பாடல்களைப் பாடியவர்கள் ‘புதுப் பெண்ணின் மனத்தைத் தொட்டுப் போறவரே! உங்கள் எண்ணத்தைச் சொல்லிவிட்டுப் போங்க’ என்பதை அன்னை பராசக்தி திருக்கல்யாண விருப்பில் அப்பன் பரமேஸ்வரனைக் கேட்பதாக நினைத்து மகிழ்ந்தனர். தேவார, திருவாசகங்களைப் படிப்பது போல் அப்பாடல்களைப் பாடியத்தைக் கேட்டிருக்கிறேன். கதை வசனத்தில் அம்பாள் எந்தக் காலத்திலே பேசினார் என்பதை ஓம் அவள் பேசுவதில்லை, பேசவைப்பள் பேச்சி அம்மனாய் அருள் பாலிப்பவள் என்ற புரிதலோடு புகழ்ந்தவர்கள் பலபேர்.

பராசக்தி படம் குறித்து வடமராச்சியைச் சேர்ந்த தேவரையாளி முருகன் சைவ சிந்தாந்தக் கோணத்தில் வியாக்கியானம் செய்து கட்டுரையும் எழுதினார். ஒரு பாரம்பரிய கலாச்சாரக் கட்டமைப்பை ஈழத்துச் சொற்பொழிவுகள் அமைத்திருந்தன. இந்தக் கட்டமைப்பை கட்டுடைத்தல் என்னும் சிந்தனைகள் மலையில் மோதிய அலைகளாய் சிதறினவே தவிர அமைப்பியலை அசைக்க முடியவில்லை. இந்த உண்மையை இந்தியத் தமிழ் அறிஞர்கள் அவ்வப்போது தங்கள் மேடைகளில் சொல்லியிருக்கிறார்கள். தாமும் பின்பற்ற வேண்டிய ஒருவாழ்வு முறை என்றும் கூறியிருக்கிறார்கள். ஈழத்திற்கு வந்து திரும்பிய டாக்டர் மு.வ. கல்கி, கலைமகள் ஆசிரியர் கி.வா ஜகந்நாதன் போன்றோரின் பயணக்கட்டுரைகளில் ஈழத்துக் கட்டமைப்பும் அமைப்பியலும், செல் நெறிகளும் விதந்தும் வியந்தும் எழுதப்பட்டுள்ளன.

ஈழத்துச் சொற்பொழிவுகளை சமயம், சமூகம், அரசியல் என மூன்று பிரிவாகப் பார்க்கலாம். சமயம் சார்ந்த சொற்பொழிவுகள் கடவுள் நம்பிக்கையை ஊட்டின, வளர்த்தன. சமூகம் சார்ந்த சொற்பொழிவுகள் சமூகமயப்படுத்தும் குடும்பம் உறவு - ஒற்றுமை முதலியவற்றினை வளர்த்தன. அரசியல் சார்ந்த சொற்பொழிவுகள் பாரம்பரியம், பழமை, தொன்மை, பெருமை, தாயகப்பற்று, சுயநிர்ணயம், சுயாட்சி என்பவற்றை விளக்கின.

இம்மூன்று துறைகளும் இணைந்து ஈழத்து தமிழ்ச்சனம் என்பதை ஈழத்து தமிழ் இனம் என்று வளர்த்தன என்பதே யதார்த்தமாகும்.

தடம்புரளாத தளம்பாத போக்கினை இன உணர்வோடும் மொழிப்பற்றோடும் ஈழத்துச் சொற்பொழிவுகள் வளர்த்தாலேயே ஈழத்தமிழர்கள் அடங்காப்பற்றுடைய போக்குடையவர்களாக வாழ்ந்தனர். தங்கள் உரிமைகளை தக்க வைத்துக் கொள்ளவும் பிறர் உரிமைகளை மதிக்கவும் தெரிந்தவர்களாய் வாழ்ந்தனர். ‘கொள்ளேன் புரன்தரன் மால் அயன் வாழ்வு குடிகெடினும் என்றும் நள்ளேன் நினதடியாரோடல்லால் நரகம் புகினும்’ என்று பாடிய மாணிக்கவாசகரின் அழுங்குப்பிடியும், ‘யாம் ஆர்க்கும் குடியல்லோம்’ என்ற அப்பரடிகளின் குறிக்கோளும் ஈழத்தமிழர்களின் கட்டமைப்பில் தமிழ் மண்ணோடு சுவறிக்கிளம்பும் உணர்வாய் எழுந்து திரண்டது.

எவருக்கும் தீங்கு நினைக்காத தீங்கு செய்யாத எதனையும் அபகரிக்க விரும்பாத சுயமும் தனக்கு மிஞ்சியதை தானமாய் வழங்கும் பொது நலமும் ஈழத்து தமிழ் மக்களிடம் இருப்புக் கொள்வதற்கு ஈழத்து தமிழ் சொற்பொழிவுகள் வழிகோலின, வரம்பு அமைத்தன. மனம் கலந்த மண்பற்றும் தமிழ் தேசிய கட்டமைப்பும் உணர்வோடும் உயிரோடும் ஈழத்தமிழருக்குள் உறைந்திருப்பதை இன்று உலகம் எங்கும் வாழும் பல் இன மக்கள் அறிந்தமைக்கு ஈழத்துச் சொற்பொழிவுகள் உருவாக்கிய அடையாளங்களும் முகங்களுமே காரணமாகும்.



Roadsport HONDA
A Truly Professional Service Pr ovided to the Community.
Over 1000 satisfied customers
NEW & USED
Great Deals
BUY OR LEASE
Great Savings
Call
Dan Lanka
Retail Sales Manager
Serving the community since 1996
Direct: 416-454-1107
புதிய அல்லது பாவித்த வாகனங்களை
குறைந்த விலையில் வாங்க
உங்கள் நண்பனை அளையுங்கள்
டான் லங்கா
HONDA
Roadsport Honda
Used Cars
940 Ellesmere Road. At Kennedy
For New or Used Hondas in Toronto Call Dan
Direct: 416-454-1107 Or 416-291-9501 Ext. 2251
www.Roadsport.com
HWY 401
ELLESMERE RD
BRIMLEY RD
MIDLAND AVE
KENNEDY RD
BIRCHMOUNT RD
LAWRENCE AVE E
0.5
1km
Design: J11.ca - 1-877-721-8910

# நூலாய்வு

18ஆம் பக்கத்தொடர்ச்சி

உங்களை நீங்களே குறைப்படுத்துதல்.

5. வாழ்வின் உச்சங்களை எட்டவிடாமல் தடுப்பவை கோபம், பொறாமை, ஆத்திரம், அகங்காரம் போன்ற எதிர்மறை உணர்வுகள் என்பதை உணர்ந்து, தவிர்த்தல்.

6. வெளி உலகுக்குத் தெரியாத உங்கள் தீயகுணங்களும் அவற்றால் விளையுங் கேடுகளும்.

7. உங்களை வேறொருவரால் மாற்ற முடியாது.

8. உங்களை உங்களால்தான் மாற்றமுடியும் என்பதை உணர்ந்து செயற்படல்.

இவ்வாறு பல போதனைகள் நூல் முழுவதும் பரவிக் கிடக்கின்றன. இதைத் தவிர சில பொன்னான வாக்கியங்களும் இங்கே காணப்படுகின்றன. சில உதாரணங்கள் வருமாறு.

நம்பிக்கைக்கு நீ பாடுபட்டு உழைக்க வேண்டும். அனுபவம் தானாகவே தனது உழைப்பு முத்திரையை உன்மேல் பதித்துச் செல்கின்றது. அனுபவம் உன் சிந்தனையையும் பேச்சையும் செயலையும் வழி நடத்துகின்றது. அனுபவத்தின் மத்தியில் கடைசியில் நான் வெற்றியடையப் போகின்றேன் என்ற நம்பிக்கை ஏற்படுகின்றது. உனக்கு ஆழ்ந்த விசுவாசத்தையும் உயர்ந்த நம்பிக்கையையும் ஊட்ட உனது அனுபவங்களையும் உபயோகித்துக் கொள்.

சந்தோஷம், புரிந்துணர்வு, அன்பு யாவும் நாம் உணரக்கூடியவை. Joy, Knowing and Love are What You Feel. மகிழ்ச்சி, நம்பிக்கை, இன்பம் என்பவை நாம் சிந்திக்கும் வழிமுறைகள். Happiness, Believing and Pleasure are ways You Think. பொறுமை ஒரு சிறந்த பண்பு. இதை வளர்ப்பதால் நன்மை கிடைக்கும். பிறருக்குச் செய்த நன்மைகளை எழுதி வைத்துச் சந்தோஷப்படுங்கள். வருவதை எதிர்கொண்டு எதிர்த்துச் சமாளித்துப் பயந்து ஒதுங்காமல், நடந்தால் முன்னேறலாம். இந்நூலில் கூறப்பட்டுள்ள போதனைகள் யாவும் தனி ஒரு மனிதனுக்கு நேரடியாகக் கூறுவது போல் அமைந்துள்ளன. இதனால் உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனும் தன்னை உணர்ந்து, தனது தவறுகளைத் தானாகவே திருத்திக் கொண்டு உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி ஒழுங்காக வாழ்ந்தால், உலகம் ஒரு சொர்க்கபுரியாக மாறும் என்ற உண்மை மறைமுகமாகக் கூறப்படுகிறது.

இந்நூலில் வாழ்க்கை ஒரு படகாகவும் அதில் உலக மக்கள் பிரயாணஞ் செய்வதாகவும் உருவகிக்கப்பட்டுள்ளது. இப்பிரயாணம் நாம் எதிர்பார்த்தபடி அமையாது. அதை நாம் கட்டுப்படுத்தவும் முடியாது. எதிர்பாராத பல சம்பவங்கள் நிகழலாம். சிலவேளை அது உங்களை நன்கு தூக்கி விடும் அல்லது திடீரெனத் தாழ்த்தி விடும். எனவே நடப்பன எதிர்கொண்டு சமாளிக்கும் வல்லமையை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். வாழ்வில் எத்தனையோ வழிகள் உள்ளன அவற்றைத் தெரிவு செய்வது நாங்கள் தான். இங்கே விடலைப் பருவத்தினர் பற்றித் தெளிவான சிந்தனைகள் கூறப்பட்டுள்ளன. சிலர் கூடாத கூட்டங்களோடு கூடி குறுக்கு வழிகளில் பணஞ் சம்பாதிப்பதற்காகக் கொடிய செயல்களில் ஈடுபடுகின்றனர். இது தங்களுக்குத் தாங்களே குழி தோண்டிப் புதைப்பதைப் போன்றது. பெரும்பாலான பெற்றோரும் பிள்ளைகளை வழிநடத்தத் தேவையான வழிமுறைகள் தெரியாமல் தத்தளிக்கின்றனர். இதனால் சமூகச் சீர் கேடுகள் மலிந்து விட்டன.

பழையன கழிதலும், புதியன புகுதலும், காலந்தாழ்த்துதல், அன்பு காட்டல், பயம், கோபம் அவற்றைத் தவிர்த்துக் கொள்ளல் போன்ற பல விடயங்கள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. மனித வாழ்வின் ‘மையமாகிய இறைவனின் சிறிபொறியாம் ஆன்மா ஒரு போதும் தோல்வியடையாது’, ‘இறைவன் எனது தந்தை’ வாழ்க்கைச் சவால்கள் ஒருபோதும் உன்னை அழிக்க வருவதில்லை. உன்னைப் புடமிட்டு உருவாக்கவே வருகின்றன என்பதை உணர்ந்து, நம்பிக்கையுடன் அவற்றை நேருக்கு நேர் சந்தித்துச் செயற்படுவது முக்கியம். அன்பு, காதல், பாலியல் உறவு ஆகியவற்றை விடலைப் பருவத்தினர் சரியாகப் புரிந்து கொள்ளாமல், பல சிக்கல்களுக்கு ஆளாகிறார்கள். இவர்களுக்குத் தகுந்த ஆலோசனைகள் தகுந்த நேரத்தில் கொடுக்கப்பட வேண்டும் எனப்பல ஆக்க பூர்வமான யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

மொத்தத்தில் இந்நூல் யாவருக்கும் பயனுள்ள ஒரு வழிகாட்டி நூலாக அமைந்துள்ளது. ஆனால் இங்கு கூறப்பட்டுள்ள வாழ்க்கை நெறிகளும் ஆன்மீக வழிகாட்டல்களும் சைவர்களுக்கோ, பிற மதத்தவர்களுக்கோ புதியவை அல்ல. ஆனால் கூறப்பட்டுள்ள முறை தான் புதியது. இங்கு எமது நாயன்மார்கள், ஆழ்வார்கள், அருளாளர்கள், சங்காலப் புலவர்கள் யாவரும் இவ்விடயங்கள் பற்றிப் பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னரே கூறியுள்ளனர். திருவள்ளுவர் கூறிய விடயங்களைப் போன்று இரத்தினச் சுருக்கமாக இதுவரை எவரும் கூறவில்லை என்றே நான் நினைக்கிறேன். இறைபக்தியின் முக்கியம் பற்றித் திருமூலர் மிகவும் சிறப்பாகப் பின்வருமாறு கூறியுள்ளார்.

‘யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
வான் பற்றி நின்ற மறைபொருள் சொல்லிடின்
ஊன் பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான் பற்றப் பற்றத் தலைபடுந் தானே’

எனவே எம்மில் பலருக்கும் பழக்கமான எத்னையோ வாழ்வின் தத்துவங்கள் ஒரு கறுப்பினப் பாதிரிப்பெண்ணால் கூறப்பட்டிருப்பதைப் பார்த்து வியக்காமல் இருக்க முடியாது. இவரின் மூதாதையர் நைஜீரிய நாட்டின் யொறுபா (Yorupa) இனத்தவர் என்றும் அவர்களது சமயச் சடங்குகளும் ஆன்மீக நெறிகளும் நான்காயிரம் வருடங்களுக்கு முற்பட்டவை எனவும் அறிகிறேன். இங்கே ஓர் உண்மையை நாம் காணக் கூடியதாக உளது. முடிவாக இந்நூலை தமிழில் ஆக்கிய திருமதி லலிதா புரூடி ஒரு காத்திரமான பணியைத் தமிழ்ச் சமூகத்திற்கு ஆற்றியிருக்கிறார். அவருக்கு எனது பாராட்டுகள். இதனை யாவரும் வாங்கி வாசித்துப் பயன்பெற வேண்டுமென்பதே என் அவா.

NuTek COMPUTERS
www.nuTechComputer.com
☑ Virus Removal
☑ Internet Sharing
☑ Computer Tune Up
☑ Computer Repair
அனைத்து கணனி திருத்த வேலைகளும்
உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்
416.587.1619
techsupport@nutechcomputer.com
Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional
SALES - SERVICE - UPGRADES


வீடு, வியாபார நிலையங்கள்
வாங்க - விற்க
எந்தவித அடமானக் கடன்களும் பெற
Direct - 416.575.5055
Anton Jeeva
Real Estate / Principal
Mortgage Broker
RE/MAX

CONDO.TOWNHOUSE
FOR SALE
$129,900

• Kennedy/Eglinton
• 2-Storey
• 2 Bedrooms
• 2 Washrooms
• Fridge , Stove , Washer , Dryer , All Elf , All Window Coverings

FOR SALE
$239,900

• Metro/Brule
• 3 Bedrooms
• 1 Washroom
• 2 Car Garage
• Hi-Efficient Gas Furance
• Ceramics In Kitchen, Bath, Foyer

FOR SALE
$609,000

• Gerrard St E & Coxwell Ave
• Built In Garage At Back Lane.
• Vacant Possession. Vendor Will Pay A Bonus Of $4,000 Over And Above The Listed Commission Rate, To The Selling Agent On Completion, And Closing Of A Sale, If An Offer Is Accepted & Closed By Oct 31, 2009.

FOR SALE
$549,000

• Simcoe Rd / Canal
• 23 Acres Land
• 1,500 Sq Ft. House
• 2 Stoves , 2 Fridges , Washer , Dryer , All Elf Farm Equipments Can Be Sold Separately For A Reasonable Amount.

Condo. of Sale
$154,500

• Mccowan / Hwy 401
• Bedroom : 1
• Washroom : 1
•One Parking & One Locker Included.
• Ttc At Door Step. Close To All Amenities. Scarboro. Town Centre Next Door.

House of Sale
$155,000


• Cedar/Wentworth
• Bungalow
• Bedrooms: 3+1
• Washrooms: 2
• 51 ft frontage x 100 ft depth

Condo Townhouse
for Sale $192,500

• Keele / Finch
• 2 Bedrooms • 2 Washrooms
• Steps To York University, Public Transit, Shopping And Other Amenities.

Condo. of Sale
$214,500

Middlefield/Dennison
• 2 Bedrooms
• 2 Washrooms
• Premium Stainless Steal Appliances
• Great Family Neighborhood, Steps To Shopping, Yrt, Ttc, Hwy, Doctor's Office, etc

House of Sale
$479,900

• Hwy50/ Ebenezer
• 2 Storey
• 4+3 Bedrooms
• 3 Washrooms

Mortgages & Mortgages Inc.
Authorize Brokerage by FSCO
REMAX VISION REALTY INC.
Speciallized in Power of Sale Homes

MAX 2000
விடுமுறை காலங்களில் சுற்றுலா
செல்லத் தயாராகுங்கள்!


New York City சரித்திர
முக்கியத்துவம் வாய்ந்த
இடங்கள், Shopping.
Vancouver & West
Cost 14 days
ஒவ்வொரு
மாதத்திலும்
இரண்டாவது
கிழமை U. S. A
பயணம்
Plan Your Holiday Around These Dates
இவ்வாண்டு விடுமுறைக்கான பயண ஒழுங்குகள் ஏராளம் நீங்கள் தயாரா?
விபரங்களுக்கு: 416-609-2542